Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 16/50

டி.ச. 02 - 08, 2004

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 591



## மாவீரர் தினஉரையின் மறைபொருள் என்ன?

## கொழும்பு கொலையாளிகளின் கூடாரமாகிறதா?

## குளோனிங் குழந்தைகளும் புதிய சர்ச்சைகளும்

## குளு குளு சினிமினிச் செய்திகள்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## பக்தியாய் பஜனை செய்வோம்

# ஆன்மீகம்



பஜனை செய்யும்போது இறை நாமத்தைப் பாடுகிறோம் என்ற உணர்வில் பக்தியோடு வெட்கமின்றி உரக்கப் பாட வேண்டும். அனைவரும் ஒரே குரலில் பாடவேண்டும். பஜனை பாடும்போது ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருத்தலோ, பாடாமலிருத்தலோ நல்லதல்ல.

அனைவரும் சேர்ந்து ஒரு முகப்பட்டு பஜனை செய்வதால் பக்திப் பரவசமான ஓர் சூழ்நிலை அமைந்துவிடுகிறது. பக்தியை வளர்க்கும் பாடல்கள் மட்டுமே பாடவேண்டும். குறிப்பிடப்பட்ட பாடல்களைப் பாடி நன்றாகத் தேர்ச்சி பெற வேண்டும். அதன்பின் புதிய பாடல்களைப் பயில வேண்டும். பல பாடல்களைப் பாடி ஒரு பாடலும் ஒழுங்காகத் தெரியாமல் இருப்பதை விட, ஒரு சில பாடல்களை ஒழுங்காகப் பாடத் தெரிந்திருத்தல் நல்லது. தற்காலத்தில் பஜனை பாடி இறையன்பை எளிதில் பெற முடியும் என்று ஏற்கெனவே மூதறிஞர்களால் கூறப்பட்டுள்ள உண்மையை உணர்ந்து இறை நாமத்தைப் புகழ்ந்து பாடி வாழ்வில் நற்பயனைப் பெற்றுய்வோம்!

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

## இரட்சிக்கப்படுவதின் ஆசீர்வாதங்கள்

01. ஒன்று பாவத்தினால் உண்டான ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலை. அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டான். (யோவா 3:17 - 18)

02. அடுத்து இந் நிகழ்காலத்தில் ஓர் பரிசுத்தமான வாழ்க்கை வாக்குக் கொடுக்கப்படுகிறது. "பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன். முடிவோ நித்திய ஜீவன்" (ரோம 6:22)

03. வருங்காலத்தில் கிறிஸ்துவினுடைய வருகையில் நாம் அவருடனே கூட அவருக்கு ஒப்பாக இருப்போம்.

04. இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். (யோவா 3:2)

05. அவர் நம்முடனே கூட இருக்கிறார். "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத் 28:20)

06. நித்திய வீடு நமக்கு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட, கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்." (11கொரி 5:1) பரத்துக்குரிய ஆசீர்வாதங்கள் மாத்திரம் அல்ல; இம்மைக்குரிய தேவைகளும் உங்களுக்குத் தேவனால் கொடுக்கப்படும் (மத் 6:33)

-ஆர்.பாலசந்திரன் அல்மா சீடன், கந்தப்பளை.

## துஆவின் சிறப்புக்கள்

துஆ என்பது இபாதத் ஆகும். இபாதத் என்பது இறை வணக்கமாகும். நபி (ஸல்) அவர்கள் பல முக்கிய கோரிக்கைகளை உள்ளடக்கிய (பொதுவான) துஆவை (யே) விரும்புவார்கள். அது தவிர மற்ற துஆக்களை விட்டுவிடுவார்கள்.

-அபூதாவூத்.

என்னை அழையுங்கள்; நான் உங்களுக்கே பதிலளிக்கின்றேன்.

அல்-குர்ஆன் - 40-60.

உங்கள் ரப்பைப் பணிவாகவும் மெதுவாகவும் அழைப்பீராக! நிச்சயமாக அவன் வரம்பு மீறுபவர்களை நேசிக்கமாட்டான்.

-அல்குர்ஆன் 7-55

எனவே எங்களுக்கும் எமது சமூகத்துக்கும் தேவையான விடயங்களை அல்லாஹ்விடம் துஆவின் மூலம் பெற்றுக்கொள்வோமாக!

-றஸீன் றஸ்மின், றஹ்மத்புரம்.

-றஸீன் றஸ்மீன், றஹ்மத்புரம்.

## கவிதைப் போட்டி இல.588



பரிசுக்குரிய கவிதை

### படிப்பினை

அளவுக்கு மிஞ்சி
அரவணைத்து
அன்பு காட்டினால்
அணைவருமே
இப்படித்தான்
தலையிலேறப்
பார்ப்பாங்க.....

சங்கம ஹிஷாம், திருகோணமலை.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### கிளிப் பேச்சு

உச்சி குளிர
உன் செய்தி கேட்க
உன்னிப்பாக
இருக்கிறேன்
தயங்காமல் தொடங்கி
இழுக்காமல் முடித்திடு.

-கே.எஸ்.ராதை
வெள்ளவத்தை

### பாசம்!

பாப்பாவே
பண்பில்லா மனிதனுக்கு
பாச உணர்வை
பறவை மூலம்
உணர்த்துகிறாயா?
நன்றி கெட்ட மனிதனே
நன்றாக இதைப் பார்.

-எம்.சி.கலீல், கல்முனை - 05.

### ஐந்தறிவு ஜீவன்கள்

யுத்தமில்லா விட்டாலும்
இந்தப் பூமியில்
சிப்பி சிரட்டை கூட
வைத்து விளையாட
பயமாயிருக்கிறது.
இன்னும் அகற்றப்படாத
கண்ணி வெடிகள்
காணாமல் போய் விடச்
செய்து விடுமோவென்று
ஆதலால்தான் சிட்டோடு
சிறகடிக்கிறேன்.

-கஏ.எப்.எம்.றியாட்,
முள்ளிப்பொத்தானை.

### ஆறும் ஐந்தும்

எயிட்ஸ் நோயென்று
எத்தி வைத்தது ஆறறிவு
ஆனாலும்
கவலையின்றி
அடைக்கலங்
கொடுத்தது
இந்த ஐந்தறிவு.

-கே.கே.டீன், ஏறாவூர் - 03.

### சின்னக் கிளி

உச்சந்
தலையில்
வருடிக்
கொடுக்குது
வண்ணக்கிளி
உள்ளம்
மகிழ்ந்து
சுகம் காணுது
சின்னக் கிளி.

நஸீஹா சம்சபாத்
ஏத்தாலை-

## கவிதைப் போட்டி இல.591



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 08.12.2004

கவிதைப் போட்டி இல.591
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772,
கொழும்பு.

### திருந்துவதெப்போ!

இதயத்தில் இரக்கமுண்டு
தலையிலே தாராள இடமும்
உண்டென்று
குடும்பத்துடன்
குருவியை ஏற்பதற்கு
அ·றினையைக் கூட வரவேற்கும்
உயர்திணை மொட்டுப் போல
தம் இனத்தையே கொல்லும்
நம் இனம் திருந்துவதெப்போ?

-சீ.தங்கவடிவேல்
மட்டக்களப்பு.

### சகிக்கவில்லையோ?

ஏனடா தம்பி
இங்கு நடக்கும்
கொலைகளையும்
கொடுமைகளையும்
பார்க்க உனக்குக்
கூட
சகிக்கவில்லையோ!

-எஸ்.பி.பி.கணேஸ்
கொழும்பு - 02

### காத்திருக்கின்றது

உறவையும்
உடமையையும் இழந்து
உணர்வைப்
பறிகொடுத்த
கள்ளமில்லாக்
குழந்தை
வயிற்றுப் பசியைப்
போக்க
சதாக் காசுக்காக
காத்திருக்கின்றது

-யோ.சாலினி
திருக்கோவில் - 03

### அஞ்சாது தமிழ் பாடுதோ!

கிலி விட்டு
அமர்ந்திருக்கும்
வழிப் பிள்ளை
தலை மீது
வந்தமர்ந்த
கிளிப்பிள்ளை
அஞ்சாமை
மொழி பேசுதோ ?
அன்றேல்
அழகான தமிழ் பாடுதோ

-நா.ஜெயபாலன்
பிபிலை!

# உங்கள் பக்கம்

## சது/நாவிதன்வெளி - அன்னமலை மகா வித்தியாலயத்துக்கு நிரந்தர அதிபரை நியமிக்க.

சம்மாந்துறைக் கல்வி வலயத்திலுள்ள 1ஏபி பாடசாலையான நாவிதன்வெளி, அன்னமலை மகா வித்தியாலயம் நிரந்தர அதிபரின்மையால் சீரழிவிற்குள்ளாகியுள்ளது.

நேர்முகப் பரீட்சை நடைபெற்றும் இதுவரையும் நிரந்தர அதிபர் நியமனம் மேற்கொள்ளப்படாமையால் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் ஏனைய ஊழியர்களும் பல்வேறு சிரமங்களினை எதிர்நோக்கியுள்ளனர். இதன் விளைவாக கல்விப் போதனைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு இவ்வாண்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வி நிலை கவலைக்கிடமாகவுள்ளது. இது போன்றே க.பொ.த. உயர்தர மாணவர்களின் நிலைமையும் உள்ளது. இவ்வாறு கல்வி நிலை பாதிக்கப்பட்டு மாணவர்களின் எதிர்காலம் சூனியமாவது தமிழினத்தின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்படுகின்ற ஓர் சாவுமணியாகும். இச் செயலினை எந்தவொரு தமிழ்ப் பற்றாளனும் ஏற்றுக்கொள்ளமாட்டான். எனவேதான் நாம் இவ் விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு தனித்தனியாக வடக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுக்கு பல கடிதங்களை அனுப்பியிருந்தோம். இருப்பினும் இதுவரையும் நிரந்தர அதிபர் நியமிக்கப்படவில்லை. எனவே, கூட்டான முறையில் நிரந்தர அதிபரை நியமித்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது பாடசாலைக்கு நிரந்தர அதிபரை நியமிக்கும்போது வேறேதேனும் பாடசாலைகளின் நிரந்தரமான அதிபராக உள்ள ஒருவரைத் தெரிவு செய்யாது (வேறு பாடசாலைகளில் அதிபராக உள்ளவர்களை அங்கிருந்து இடமாற்றம் செய்வதனால் அப் பாடசாலையினது நிருவாகமும் சீர்குலைந்து அங்கேயும் அதிபருக்கான வெற்றிடம் ஏற்பட்டு அப் பிரதேச மாணவர்களின் கல்வி நிலையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிடலாம்) எமது சம்மாந்துறைக் கல்வி வலயத்திலிருந்து நிரந்தர அதிபர் பதவிக்காக விண்ணப்பித்துள்ளவர்களில் சேவை மனப்பான்மையுள்ள, தகுதியான ஒருவரை நிரந்தர அதிபராக உடன் நியமனம் செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.
-வே.சிவலிங்கம், கௌரவ தலைவர்.
அன்புவெளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
நாவிதன்வெளி.

ஐ.பத்மநாதன், தலைவர், அன்னமலை ஸ்ரீ சித்திவினாயகர் ஆலயம், கல்முனை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk




# வாசக[ர்] சாலை

### என் அன்பின் முரசுக்கு!

அன்பின் முரசே - நீ
செய்திகளைத் தரும்
வெறும் பேப்பரல்ல - நீ
விறுவிறுப்பாக
நடுநிலையாக
பக்கச் சார்பின்றி - 'எம்
மக்களுக்கு
உண்மையை உரமாக்கி
பொய்களை ஒழித்து,
அன்பு காட்டும் - எம்
பெற்றோர்கள் போல
அறிவுச் சுடர்களைச் சுமந்து
வியாழன் தோறும் - எம்
கையில் பக்குவமாய்
கிடைக்கிறாய் - எம்
முரசுக்கு இம் முல்லைக்
கலைமகனின் வாழ்த்துக்கள்.
உன் சேவை எங்கும்
தேவை. வளர்க உன் பணி.

-றஸீன் றஸ்மீன், றஹ்மத்புரம்.

### என்றும் உன்னோடுதான்

உன் - முதற் பக்க அசத்தலோடு அத்தனை அம்சங்களும் அருமையே! அரசியல் விடயங்கள் மிக நன்று. "மக்களின் முடிவிற்காய் கிழக்கு" உண்மையை உணர்த்தி நின்றது. "சிறுநீரகம் பாதிப்படைவது ஏன்?" என்ற அம்சம் மிகவும் பயனுள்ளதாய் அமைந்திருந்தது. லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் ரி.பி.சி. வானொலிக்கு கருணா அம்மான் அண்மையில் அளித்த பேட்டியினை ஒலித் தெளிவின்மையால் எம்மால் சரியாகக் கேட்க முடியாமல் போனது.

அப் பேட்டியினை "இன்னொருவர் பார்வையில்" எமக்காகத் தந்த முரசுக்கு நன்றிகள். "ஒரு தாய் ஒரு மகள்" தொடர் முதல் வாரமே அசத்திச் சென்றது. நன்றி முரசே!

-என்.எல்.முஸம்மில், குவைத்.

### இனிய தினமுரசே!

உனது உதவியால் இன்று எனக்கு 35 பேனா நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். அத்துடன் இன்னமும் புதிய பேனா நண்பர்களின் கடிதங்களும் வந்து கொண்டிருக்கின்றன.

ஆகவே உனக்கு என்னுடைய நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் உன்னுடைய இப் பணி தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். என்னுடைய பேனா நட்பு உள்ளவரை உன்னை நான் மறவேன். மீண்டும் மீண்டும் எனது நன்றிகள்.

-அன்ரன்.

### வாழ்த்துகிறேன்!

வண்ணங்கள் பதித்து
எண்ணங்கள் புதைத்து
வாரத்தில் ஒருநாள்
வாசனைகளுடன்
மலரும்
தினமுரசே!
வாரத்தில் ஒருநாள் நீ
முழங்க
வாசகர் மனமோ
தேனாய் இனிக்கிறது.
சிநேகிதியே! உன்
சேவை
மேலோங்க
வாழ்த்துகளுடன்
பிரார்த்திக்கின்றேன்.

-எம்.ஜே.சர்மிலா, கிண்ணியா.

## மரண தண்டனை பற்றிய மாறுபட்ட கருத்துக்கள்

"இந்த நாகரிகமான சமூக அமைப்பில் மரண தண்டனையை அமுல்படுத்துவது அநாகரிகமானது. ஒரு கொலையை இன்னொரு கொலையால் நியாயப்படுத்த முடியாது. அது ஒரு தவறை இன்னொரு தவறால் சமப்படுத்துவதைப் போலாகிவிடும் என்கிறார், இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் முக்கியஸ்தரான எஸ்.கந்தசாமி. திட்டமிட்ட பாரிய குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் மரணதண்டனையை அமுலுக்குக் கொண்டுவருவதை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக் கண்டிப்பது பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். "கைகளையும் கால்களையும் இரும்புச் சங்கிலியால் கட்டிவிட்டுக் கண்ணைத் தோண்டிச் சித்திரவதை செய்துவிட்டு வீதியோரத்தில் வீசிவிட்டுச் செல்பவர்கள் மிருகங்கள் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் இன்னமும் இருக்கின்றன. விசாரணைக்கென வீட்டிலிருந்து கூட்டிச்சென்று விட்டு, முகத்தைக் கத்தியால் குத்தி அடையாளம் காண முடியாதபடி சின்னா பின்னமாக்கிவிட்டு சடலத்தைப் பற்றைக்குள் வீசிவிட்டு பக்கத்தே 'சமூகத் துரோகி'யென எழுதப்பட்ட அட்டைகளை வைத்துவிட்டுச் செல்லும் புனித போராளிகள் தமிழ்ப் பகுதிகளில் இருக்கிறார்கள். இவ்வாறு கொலை செய்யப்படுபவர்களில் பெரும் பாலானோர் செய்யும் ஒரே தவறு மாற்றுக் கருத்துக்களை முன்வைப்பது அல்லது மாற்று இயக்கங்களில் இணைந்து செயற்படுவது சரி தான். ஒரு வார்த்தைக்கு அதையும் தவறென வைத்துக்கொள்வோமே! அதற்காகவா இந்த மிருகத்தனமான சித்திரவதை?" எனக் கூறுகின்றார் மரண தண்டனையை ஆதரிக்கும் சட்டத்தரணி சுபாஷ்ரஞ்சித். அரசியல் பேசியதற்காக மனித உரிமை மட்டுமல்ல; உயிரோடு வாழும் உரிமை கூடப் பறிக்கப்படுகிறதே, இது நியாயமா?" என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

## தமிழ் சிறுவர்கள் பற்றி லண்டனில் கருத்தரங்கு

இலங்கையில் தமிழ்ச் சிறுவர், சிறுமிகள் பாதிக்கப்படுவது குறித்து ஆராய்வதற்கான கூட்டமொன்று எதிர்வரும் ஐந்தாம் திகதி லண்டனில் நடைபெறவுள்ளது. நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இக் கூட்டம் லண்டன் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேய மற்றும் ஆபிரிக்கக் கற்கை நெறிகளுக்கான பாடசாலையின் கலிலி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்ச் சிறுவர்கள் படையணிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதால் ஏற்படும் சமூகச் சீரழிவுகள் பற்றி ஆராயும் இக் கூட்டத்தில் சர்வதேச தமிழ்ப் பிரதிநிதிகளோடு இலங்கை சர்வகட்சிப் பாராளுமன்றக் குழுக் காரியதரிசி அன்டிலோவ், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பைச் சேர்ந்த ஜோ பேக்கர் ஆகியோர் கலந்துகொள்வர்.

## கருணாவுடன் இயங்கியவர் கொழும்பில் கடத்தப்பட்டார்!

கருணா அம்மானின் அணியும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியும் இணைந்து அண்மையில் உருவாக்கிய 'தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணி'யின் இணைப்பாளரான மனோ மாஸ்டர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். அக்டோபர் மாதம் 25ஆம் திகதி உருவாக்கப்பட்ட இப் புதிய கட்சியின் பிரதம பேச்சாளராகவும் மனோ மாஸ்டர் என்றழைக்கப்படும் ராஜரட்ணம் இயங்கிவந்தார். கடந்த 24ஆம் திகதி கொழும்பு, தெமட்டகொடையில் வைத்து தந்திரமாக இவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். தமிழ்நாடு, கோடம்பாக்கத்தில் வசித்துவந்த இவர், அக்டோபர் மாதம்தான் கொழும்புக்கு வருகை தந்திருந்தார். கிளிநொச்சியிலிருந்து வருகை தந்திருந்த இவரது நெருங்கிய உறவினரொருவர், வாடகைக்கு வீடொன்றினைப் பார்ப்பதற்கென இவரை அழைத்துச் சென்றதாகவும் அதன் பின்னர் மனோ மாஸ்டர் வீடு திரும்பவில்லையெனவும் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. இவர் வன்னிக்குக் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

வரதராஜப் பெருமாள் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்தபோது, ஓர் அமைச்சராகப் பதவி வகித்தவர் மனோ மாஸ்டர். இவர் கடத்தப்பட்ட அதே தினத்தன்று இவரது நெருங்கிய சகாவும் முன்னாள் புளொட் உறுப்பினருமான ரங்கப்பா என்பவர் தெமட்டகொடையில் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கருணாவோடு நெருங்கிய தொடர்புகொண்டு செயற்பட்டவரென்பதால் கருணாவின் மறைவிடம் உட்பட பல முக்கிய தகவல்களைப் பெறுவதற்காக அவர் உயிருடன் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாமென்றும் இப்போது அவர் வன்னியில் புலிகளின் பிடியில் இருக்கலாமென்றும் அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் எஸ்.பி.தமிழ்ச்செல்வனின் உறவினர் இவரென்பதும் குறிப்பிடத் தக்கது.

## திருமலையில் புலி - சிங்கக் கொடிப் போராட்டம் : பாதிப்பு மக்களுக்கே

புலிகளின் இடைக்கால யோசனைகளை அடிப்படையாக வைத்துப் பேச்சுவார்த்தைக்கு அரசு வரத் தயாரில்லையென்றால் யுத்தத்தைத் தவிர வேறு வழியில்லையென்று பிரபாகரன் மாவீர்தின உரையில் அறிவித்த சூட்டோடு, மூவின மக்களும் செறிந்தும் பரந்தும் வாழும் திருகோணமலையில் இனக் கலவரங்களை ஏற்படுத்தத் தீய சக்திகள் திட்டமிட்டு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனவென்று புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழ், சிங்கள இருதரப்புத் தீய சக்திகளும் திருமலையில் இனவெறித் தீயை மூட்ட எடுத்த முயற்சியை முளையிலேயே கிள்ளியெறிய அரசு எடுத்த நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவையென்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. "நாலாம் கட்டை, ஆண்டான்குளம், தம்பலகாமம், சிறிமாபுர ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வன்செயல்கள் திட்டமிடப்பட்டவை. மாற்றுச் சமூகத்தினரிடையே இனவெறி உணர்வைத் தூண்டும் நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டவை. யுத்தப் பீதி பற்றிய உளவியல் தாக்கங்களை உசுப்பிவிட்ட அதே சக்திகளே, யுத்தம் சம்பந்தமான ஒரு மாதிரிச் செயல் வடிவமாகத் தாக்குதல்களையும் நடத்தியிருக்கிறார்கள்" என்று திருமலை பிரஜைகள் குழு உறுப்பினரான எம்.இராமேஸ்வரன் தெரிவித்தார்.

"இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிக் கொடிகளை ஏற்றக் கூடாதென்று அரசும் - புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்ட கட்டுப்பாடுகளையும் மீறி மன்னாரிலும், பேசாலையிலும் வவுனியாவிலும் புலிக் கொடிகளை ஏற்றியவர்களே இந்த முறுகல் நிலையை ஏற்படுத்துவதற்கான முழுமுதற் காரணிகளாவர். தமிழ் மக்களின் பேரால் படையினர் மீதும், பொலிஸார் மீதும் கல்லெறிந்தவர்களுக்குப் படையினரும், பொலிஸாரும் திருப்பித் தாக்குவார்களென்பதும் தெரியும். அதைத்தான் அவர்களும் எதிர்பார்த்தார்கள். விளைவு அப்பாவித் தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள். தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்ற மன்னாரிலும், பேசாலையிலும், வவுனியாவிலும் ஹர்த்தால், கடையடைப்புப் போராட்டங்களை நடத்தாமல் திருகோணமலையில் இப் போராட்டத்தை நடத்தியது ஏன்? மாவீரர் தின உரையில் யுத்தப் பிரகடனம். அதற்கு முதல் நாள் புலிக் கொடியை ஏற்றியிறக்கும் போராட்டம். மாவீரர் தின உரை வெளிவந்த மறுநாள் திருமலையில் ஹர்த்தால், கடையடைப்புப் போராட்டம். இந்தச் சம்பவக் கோவைகளையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் இணைத்துப் பார்க்கையில் இதுவொரு திட்டமிட்ட செயலென்பது தெளிவானது.

முதலாவது கிரனைட் தாக்குதல் பயதிஸ்ஸபுரவில் மேற்கொள்ளப்பட்டது. கொழும்பை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினி பஸ் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சஞ்சீவ என்ற சிங்கள சமூகத்தைச் சேர்ந்த சாரதி கொல்லப்பட்டார். சந்தன, சமிந்த என்ற சிங்கள வாலிபர்கள் காயமுற்றனர். இத் தாக்குதலை சிங்களக் காடையர்கள்தான் நடத்தினரென்று புலி சார்புத் தமிழ்ப் பத்திரிகைகளின் பாணியில் யாராவது கூற முடியுமா? இதன் பின்னர் உப்புவெளி, தம்பலகாமம், சிறிமாபுர போன்ற பகுதிகளில் வாள்வெட்டு, தீவைப்பு மற்றும் தாக்குதல் சம்பவங்களும் நடைபெற்றிருக்கின்றன. புலிகள் மாவீரர்களைக் கொண்டாட - சிங்கள தேசியவாதிகள் படைவீரர்களைக் கொண்டாட, புலிக் கொடியும் சிங்கக் கொடியும் ஏற்றுவதில் போட்டாபோட்டியேற்பட பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவித் தமிழ், சிங்கள மக்கள்தான். சிங்களக் கிராமங்களுக்குள் போய் புலிச் சின்னங்களை சுவர்களில் தீந்தை கொண்டு தீட்டியவர்கள் யார்? நோக்கமென்ன?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார். எனினும் உடனடியாகவே ஸ்தலத்துக்கு விரைந்த இராணுவ, கடற்படைத் தளபதிகள் தமிழ் மக்கள் பாதிக்கப்படாதவாறு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமை பாராட்டுக்குரியது என்றும் அவர் சொன்னார்.

## இந்தியப் பிரதமரின் முன்னுதாரணம்

"அண்மையில் மணிப்பூருக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங், அதிகார துஷ்பிரயோகத்திலும் அத்துமீறல்களிலும் ஈடுபடும் படையினர் கடுமையாகத் தண்டிக்கப்படுவரென்று எச்சரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த கோட்டையை, சிவில் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகளின் கோரிக்கைக்கிணங்க சிவில் அதிகாரிகளிடம் கையளித்தார். இது மக்களைப் பணயம் வைத்துப் பிரிவினைப் போராட்டம் நடத்திவரும் சக்திகளிடமிருந்து மக்களை அந்நியப்படுத்துவதற்கான சிறந்த நடவடிக்கையாகும்" என்று சமாதான, சகஜீவனத்துக்கான அமைப்பின் செயற்குழு உறுப்பினரான திஸ்ஸ அம்பேவெல தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் அமைப்புகள், ஏதாவதொரு கிராமத்தில் இரண்டு, மூன்று சிப்பாய்களைப் பதுங்கியிருந்து கொன்றுவிட்டுத் தப்பியோடிய காலமொன்றிருந்தது. இதற்குப் பழிவாங்குமுகமாக படையினர், கிராமத்திலுள்ள அப்பாவி மக்களை வகைதொகையின்றிப் பலியெடுப்பார்கள். பின்னர் அந்த அப்பாவி மக்களின் ஆத்திரத்தையும் வேதனையையும் பயன்படுத்தி தமது இயக்கத்துக்கு மக்களைத் திரட்டிக்கொள்வார்கள். அரச பயங்கரவாதமும் இயக்கப் பயங்கரவாதமும் ஒன்றிலொன்று தங்கியிருப்பவையென்றும் அம்பேவெல கூறினார். விடுதலை இயக்கங்கள் வேறு, பயங்கரவாத இயக்கங்கள் வேறு, விடுதலை இயக்கங்கள் என்றுமே மக்களை முன்னிலைப்படுத்தும், மக்களில் தங்கியிருக்கும். எனவே படையினர் மக்களின் மனித உரிமையினை மதித்து நடப்பதன் மூலமே மக்களை வென்றெடுக்க முடியும். பயங்கரவாதச் சக்திகளைத் தனிமைப்படுத்த முடியும். எனினும் இலங்கையில் இப்போது நிலைமை எவ்வளவோ சீர்திருந்தியிருக்கிறது. இருந்தாலும் படையினருக்கு மனித உரிமைகளை மதிக்க வேண்டியதன் அவசியத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

## மக்களைக் கேடயமாக்கிப் படையினருடன் முறுக வேண்டாம்.

**-மன்னார் மக்கள் கோரிக்கை**

"அப்பாவித் தமிழ் மக்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடக் கூடாது. படையினருடன் அநாவசியமான முறுகல் நிலையை ஏற்படுத்துவதனால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிக்கொடியை ஏற்றுவதிலும் இறக்குவதிலும் ஏற்படும் பிரச்சினைகள் வீம்புக்குச் செய்யப்படும் வேலைகளாகும்" என்று மன்னார் வங்காலையைச் சேர்ந்த சிலுவைதாஸ் நீக்கிலாஸ் கூறினார்.

கடந்த 25ஆம் திகதி மன்னார் பஸ் நிலையத்தில் இடம்பெற்ற மாவீரர் கொண்டாட்ட நிகழ்வின்போது படையினருக்கும் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையையடுத்து எழுந்த அசம்பாவிதங்கள் பற்றிக் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

சம்பவ தினத்தன்று தான் பஸ் நிலையச் சம்பவங்களை நேரில் கண்டதாகக் கூறிய நீக்கிலாஸ் மேலும் தெரிவித்ததாவது

"மன்னார் பஸ் நிலையம், விளையாட்டு மைதானம், நகர மண்டப முன்றில் ஆகிய இடங்களில் முதல் நாளே அதாவது புதன்கிழமையே புலிக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. அன்றைய தினமும் புலிகளுக்கும் படையினருக்குமிடையே முறுகல் நிலையேற்பட்டது. எனினும் ஸ்தலத்துக்கு விரைந்து வந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தலையிட்டு இரு தரப்புக்குமிடையே சமரசம் செய்து வைத்தனர்" என்று கூறுகிறார் நீக்கிலாஸ்.

கொடி விவகாரம் தொடர்பாக மன்னாரில் மட்டுமல்ல பேசாலை, வவுனியா போன்ற இடங்களிலும் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. இச் சம்பவம் பற்றி இராணுவப் பேச்சாளர் தயா ரட்நாயக்காவிடம் கேட்டபோது, பொலிஸார் மீதும் படையினர் மீதும் கல் வீச்சுகள் நடத்தப்பட்டன. இதனையடுத்தே திருப்பித் தாக்க வேண்டியேற்பட்டது என்றார்.

அதற்காக ஏன் பொதுமக்களைத் தாக்கினீர்களென்று கேட்டபோது, மக்கள் எம் மீது கல் வீசவில்லையென்பது எமக்குத் தெரியும். புலிகளும் சாதாரண மக்களைப் போல் சிவிலுடையில் நின்றே கல் வீசினார்கள். எமக்குப் புலி யார்? பொதுமக்கள் யாரென்று இனங்காண முடியாது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவே தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது என்றார். இருந்தாலும் வவுனியாவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டமை அத்துமீறல் நடவடிக்கையாகும். மக்களைக் கலைப்பதானால் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்க வேண்டும் என்கிறார் நிக்கிலாஸ்.

## உளவியல் ரீதியான யுத்த முனைப்பே மாவீரர் தின உரையென்கிறார் விமர்சகர்

"புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருவார்களென்ற தமிழ் மக்களின் அண்மைக்கால எதிர்பார்ப்பை புலி இயக்கத் தலைவர் பிரபாகரனின் மாவீர்தின உரை வெறும் புஸ்வாணமாக்கிவிட்டபோதிலும் விடுக்கப்பட்டிருக்கும் யுத்த அச்சுறுத்தல் வெறும் உளவியல் ரீதியாக அச்சுறுத்தலை ஏற்படுத்தும் முயற்சி" என்று அரசியல் ஆய்வாளர் ரொஷான் எதிரிசிங்க தெரிவித்தார்.

சமஷ்டித் தீர்வென்றும் உள்ளக சுயாட்சியென்றும் கூறி வந்த புலிகள் இவற்றையெல்லாம் ஓரங்கட்டிவிட்டு மீண்டும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் அடிப்படையில் பேசி அதனை நிறுவிவிட்டு, இறுதித் தீர்வு பற்றிப் பேசலாமெனத் தெரிவித்திருப்பது அரசாங்க மட்டத்திலும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. புலிகளின் இடைக்கால முன்மொழிவுகளின் அடிப்படையில் பேசலாமென்று அரசாங்கம் அறிவித்துவிட்ட நிலையில், அதனையே வலியுறுத்தி அரசு பேச்சுக்கு உடனடியாக வராவிட்டால் யுத்தத்துக்குப் போவோமென்பது வழமையான மாவீரர் தினப் பாணியிலான பேச்சென்கிறார் எதிரிசிங்க.

இறுதித் தீர்வுக்குச் சிங்கள அரசு வருமென்ற நம்பிக்கை தமக்கு இல்லையென்பதாலேயே இடைக்காலத் தீர்வைக் கோருகிறோமென்று பிரபாகரன் சொல்கிறார். இறுதித் தீர்வுக்கு நீண்டகாலம் செல்லுமென்பதாலேயே இடைக்காலத் தீர்வைக் கோருகிறோமென்கிறார் தமிழ்ச்செல்வன். இந்த முரண்பாடான பேச்சுக்களைக் கைவிட்டு புலிகள் சமாதான மேசைக்குத் திரும்ப வேண்டுமென்றும் அவர் கூறினார். யுத்த அறைகூவல் தென்னிலங்கை மக்களிடையே ஒரு பீதி மனோபாவத்தையும் தனது இயக்கப் போராளிகளுக்கொரு மனோரீதியான உந்துதல் கொடுப்பதற்குமான உத்தியேயென்றும் அவர் கூறினார்.

## சபரிமலை யாத்திரிகர்களுக்கு விசேட வசதிகள்

சபரிமலை யாத்திரை செய்பவர்களுக்கான விசேட ஏற்பாடுகளை இந்து சமய அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளதாக அதன் ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் கூறினார். யாத்திரிகர்களுக்கான அடையாள அட்டை விநியோகம் தற்போது நடைபெற்று வருகிறது. இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் யாத்திரிகர்கள் விசா பெறுவதற்கான விசேட கருமபீடமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. குழுக்களாக விசா பெற்றுச் செல்வோர், குழுக்களாகவே திரும்பிவர வேண்டுமென்றும் தனித்தனியாக விசா பெறுபவர்கள் தனியாக வரலாமென்றும் இந்திய ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

## சிக்கலில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள்

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலையின் சூத்திரதாரியென்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கும் பிரபல போதைவஸ்துப் புள்ளி முஹமத் நௌபரோடு நெருங்கிய தொடர்புடைய மூன்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சிக்கலில் மாட்டியுள்ளனர். 'குடு நௌபர்' என்று வர்ணிக்கப்படும் இவரது டயரியில், குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்கள் காணப்பட்டனவென்று இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் 'குடு நௌபருக்கு' உதவியாகச் செயற்பட்டனராவென்ற சந்தேகம் எழுந்துள்ளது. இவர்களது வேலை இடைநிறுத்தம் செய்யப்படலாமெனத் தெரியவருகிறது.

## ஜேர்மனியிலிருந்து பத்தாயிரம் தமிழர்கள் நாடுகடத்தப்படலாம்

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய பத்தாயிரம் இலங்கைத் தமிழர்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். கடந்த பத்துப் பன்னிரண்டு வருடங்களாக ஜேர்மனியில் வசித்தவர்கள் கூட அண்மையில் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். ஜேர்மன் பொலிசார் வீடுகளுக்குச் சென்று சிலரைக் கைதுசெய்து பிராங்போர்ட் விமான நிலையத்துக்குக் கொண்டு வந்து இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளனரென்றும் ஜேர்மன் தகவல்கள் கூறுகின்றன. அண்மையில் ஜேர்மனிக்குச் சென்றிருந்த புலிகளின் அரசியல் பொறுப்பாளர் எஸ்.பி. தமிழ்ச்செல்வன் பந்தோபஸ்துக் காரணங்களைக் காட்டித் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்ப வேண்டாமென்று ஜேர்மன் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார். கட்டுநாயக்கா விமான நிலையத்தைத் தாக்கிய புலி இயக்க உறுப்பினர்கள் இப்போது வெளிநாடுகளுக்குச் செல்லவும் திரும்பிவரவும் அதே விமான நிலையத்தையே பாவிப்பதால் பந்தோபஸ்துப் பிரச்சினையெதுவும் இலங்கையில் தமிழர்களுக்கு இல்லையென்பதே ஜேர்மன் அதிகாரிகளின் வாதமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரியும் தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்ப வேண்டாமென்று அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார். ஜேர்மனியில் சுமார் ஓர் இலட்சம் தமிழர்கள் வதிவிட உரிமை பெற்றுள்ளனரென்பது குறிப்பிடத் தக்கது.

# முரசம்

## பேச்சுவார்த்தையில் வென்று பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

இனப் பிரச்சினைக்குக் கௌரவமான அரசியல் தீர்வைக் காணுகின்ற முயற்சி மோசமான பின்னடைவைக் கண்டுள்ளது. ஜனாதிபதியாகப் பதவியேற்றுப் பத்து ஆண்டுகள் நிறைவு நாளில் ஜனாதிபதி ஆற்றிய உரை புதிய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தின. எனினும் அவை எவ்வளவு விரைவில் சாத்தியப்படப் போகின்றன என்பதற்கு புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையே பதிலளிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வருட மாவீரர் தின உரையானது புலிகள் தரப்பிலிருந்து புதிய தகவல்கள் எதையும் வெளி உலகுக்கு உணர்த்துவதாக இருக்கவில்லை. மாறாக போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்களின் ஒரு மீள் வாசிப்பாகவே இருந்தது.

தவிரவும் எதிர்பார்க்கப்பட்டதைப் போல அரசு மீது அதிருப்தியே அதிகரித்திருந்தது. நவம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வருவார்களா, இல்லையா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென ஜனாதிபதி கொடுத்த காலக்கெடுவைப் போல இன்ன திகதிக்குள் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஸ்திரத்தன்மையை வெளிப்படுத்த முடியாத நிலையே புலிகளின் நிலைப்பாடாக இருந்தது.

நிரந்தரத் தீர்வு பற்றிப் பேசி அதை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான காலத்தை நிர்வகிக்க ஒரு இடைக்கால நிர்வாகமாக ஏற்கும் யதார்த்தத்தை நிராகரிக்கின்றதாகவே, புலிகள் இடைக்காலத் தன்னாட்சி தொடர்பில் காட்டிவரும் உறுதிப்பாடு புலப்படுத்துகிறது. ஏதோ ஒரு வகையில் இடைக்கால சபை வழங்கப்படுமாக இருந்தால் நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கும்போது அது இணக்கப்பாடு காணப்படாதவிடத்து மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்காது என்கின்ற உத்தரவாதத்தை புலிகளால் வழங்க முடியுமா என்பதே இன்றைக்கு இருக்கும் கேள்வியாகவுள்ளது.

இந் நிலைமையானது அடுப்புக்கு மேலே சாக்கைப் போட்டு அமர்ந்துகொள்வதற்கு ஒப்பானதாகும். மீண்டும் சுடும் என்ற பதற்றத்தை மக்கள் மனதிலிருந்து அகற்றுவது யார்? சதா ஹர்த்தால், கடையடைப்பு என்று சாதாரண மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைப்பவர்களால் சீரான நிர்வாகமொன்றை எவ்வாறு நிர்வகிக்க முடியும் என்ற கேள்வியும் எழாமலில்லை.

தென் இலங்கையில் ஆட்சியைப் பொறுப்பேற்கும் ஒவ்வொரு கட்சித் தலைமை மீதும் காலத்துக்குக் காலம் அதிருப்தியையும், சந்தேகத்தையும் தெரிவித்து ஒதுங்கிக்கொண்டால் இனப் பிரச்சினையின் தீர்வு குறித்து யாருடன் தான் பேச முடியும்.

இதே அரசியல் சக்திகள், புலிகள் இணங்க மறுக்கிறார்கள் என்று புலிகளை நிராகரித்ததால் யுத்தம் ஒன்றைத் தவிர வேறு என்ன மாற்றுத் திட்டம் இருப்பதாகக் கருத முடியும்.

அரசு ஆரம்பித்தாலும் சரி, புலிகள் ஆரம்பித்தாலும் சரி மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்படுவதை இலங்கையில் வாழும் எந்தத் தரப்பு மக்களும் விரும்பப்போவதில்லை. அதை எதிர்நோக்கும் சக்தியும் மக்களிடம் இல்லை. மக்கள் நிராகரிக்கும் யுத்தத்தின் மீது, அக்கறை கொண்டிருப்பவர்கள் - அல்லது யுத்தத்தின் மீது நம்பிக்கை கொண்டிருப்பவர்களை மக்கள் நிராகரிப்பார்கள்.

என்ன விலை கொடுத்தாவது மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பது என்பதை விடவும் கடந்த இருபத்தைந்து வருடகாலப் போராட்டத்தில் இழக்கப்பட்ட உயிர்களுக்கும் அழிக்கப்பட்ட உடைமைகளுக்கும் பிரதியுபகாரமாகப் பெறப்பட வேண்டியது கௌரவமான சமாதானமே என்பதைப் புலிகள் உட்பட சகல தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களும் உணர்ந்துகொள்வது அவசியம்.

முன்னைய காலத்தில் முரண்டுபிடித்த சிங்கள அரசுகள், நிகழ்காலத்தில் பேச்சுக்களுக்கும் சாத்தியமான தீர்வுக்கும் உடன்படுகின்ற சூழ்நிலைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

மிகப் பொருத்தமான இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு மேலும் பாரிய உயிர், உடைமை அழிவுகளை ஏற்படுத்தும் யுத்தத்தை ஆரம்பிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உண்மையில் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதில் அக்கறை கொள்பவராக இருந்தால் யுத்தப் பிரியர்களைப் பேச்சுக்களால் வெற்றிகொண்டு தமிழ் மக்களுக்குக் கௌரவமான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும். இதே வேண்டுகோள் புலிகள் மீதும் ஏனைய அரசியல் தலைமைகள் மீதும் முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்படுகிறது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மாவீரர் தின உரையின் மறைபொருள் என்ன?

நரன்

"பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக் கோடுகள் உள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் நாம் ஸ்ரீலங்கா அரசுக்கு அவசரமான அழைப்பொன்றினை விடுக்க விரும்புகிறோம். நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந்தாமதிக்காது பேச்சுகளை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வு நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமேயானால் நாம் எமது தேசத்தில் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை" என்று பிரபாகரன் குறிப்பிட்டிருப்பதே அவரது மாவீரர் தின உரையின் மையப் பொருள் எனக் கருதப்படுகிறது. அதாவது அரசுக்கும் புலிகளுக்குமிடையில் இடைக்காலத் தீர்வா அல்லது இறுதித் தீர்வோடு கூடிய இடைக்காலத் தீர்வா என இழுபறிப்பட்டு வந்த பிரச்சினையை மையப்படுத்தியே அவர் அதனைத் தெரிவித்திருக்கிறார் அது மட்டுமல்ல பேச்சுவார்த்தை ஆரம்பித்த பின்னர் எழக்கூடிய பிரச்சினைகள் பற்றிப் பின்னர் பேசலாமென்றும் வரவேற்கக் கூடிய ஒரு வசனத்தையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். நிபந்தனையற்ற முறையில் பேசவருமாறு அரசுக்கு அழைப்பு விடுத்திருக்கும் அவர், தமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிப் பேசி அதனை நிறுவிய பின்னரே இறுதித் தீர்வு பற்றிப் பேச வேண்டுமென்று அரசுக்கு நிபந்தனை விதித்திருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால் "பேச்சுக்கு வா; இல்லையேல் யுத்தத்துக்குப் போவேன்" என்று மிரட்டியிருக்கிறார்.

இடைக்காலத் தீர்வோடு இறுதித் தீர்வு பற்றியும் பேசுவோமென்று முன்னர் வலியுறுத்திவந்த ஜனாதிபதி, இப்போது படியிறங்கி இடைக்கால நிர்வாக யோசனையை அடிப்படையாக வைத்துப் பேசலாம், பின்னர் எழும் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மேசையில் தீர்த்துக்கொள்ளலாமென்று எப்போதோ சொல்லி விட்டார். அப்படியானால் அரசும் புலிகளும் இடைக்கால தன்னாட்சி யோசனை பற்றிப் பேசுவதற்கு ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பதால் புலிகள் காலதாமதமின்றிப் பேச்சுக்கு வருவார்களென நம்பலாமா? "இடைக்கால நிர்வாகத்தைப் பேசி, அதனை நிறுவிய பின்னரே..."என்ற பிரபாகரனின் நிபந்தனை சமாதானத் தீர்வுக்கு நெருஞ்சி முள்ளாகக் குத்தும் போல் தெரிகிறது. துன்பப்படும் எங்கள் தமிழ் மக்களின் உடனடி நிவாரணத்துக்காக உண்மையில் அவர்கள் இடைக்கால நிர்வாகத்தைக் கோருவார் களேயானால் அது நடைமுறைச் சாத்தியமான முன் மொழிவுகளைக் கொண்டிருக்க வேண்டும். பேச்சுவார்த்தை மேசையில் மாற்றுத் தரப்பின் அங்கீகாரத்தைப் பெறக் கூடியதாக இருக்க வேண்டும். "நானே ராசா, எனக்கே முடிசூட்டு" என்ற பாணியில் புலிகள் முன்வைத்திருக்கும் இந்த யோசனைகள், பேச்சுக்கள் ஆரம்பித்தால் கூட பாரிய சிக்கலை ஏற்படுத்துமென்பதையும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் கிடைக்காமல் இழுத்தடிப்பதற்கான வேலை என்பதையும் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எந்தவொரு பிரதேசத்திலும் உடனடியான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு இடைக்காலப் பொறிமுறையொன்று தேவையென்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது. இது ஒஸ்லோப் பிரகடனத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வொன்று. ஒஸ்லோப் பிரகடனம் இடைக்காலப் பொறிமுறை பற்றிக் கூறியதேயொழிய வரம்பு மீறிய தன்னாட்சி அதிகாரம் பற்றியல்ல. ஆனால் எந்த மக்களுக்காக இடைக்காலத் தீர்வு தேவையோ அந்த மக்களின் கௌரவமான, நீடித்து நிலைக்கக் கூடிய இறுதித் தீர்வோடு இது பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். இறுதித் தீர்வின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகவே இடைக்காலத் தீர்வு இருக்க வேண்டும்.

ஆறு மாதங்கள் நடத்திய ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் வடக்கு, கிழக்கு மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட உபகுழுக்கள் செயற்றிறனற்றவை என்று கூறியே புலிகள் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து விலகினார்கள். இந்த உபகுழுக்கள் செயற்றிறனற்றவையென்றால் அவற்றைச் செயற்பட வைப்பதற்கான முயற்சியில் அவர்கள் இறங்கியிருக்க வேண்டும். இதுவே பாதிக்கப்பட்டமக்களின் உடனடித் தீர்வுக்கான வழி.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஒன்றன்பின் ஒன்றாக இடைக்காலத் தீர்வு பற்றி முன்வைத்த மூன்று முன்மொழிவுகளையும் புலிகள் நிராகரித்த பின்னரே, கடந்த வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதி தமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை முன்வைத்தனர். நடைமுறைச் சாத்தியமற்ற, வரம்பு மீறிய யோசனைகளைப் புலிகள் முன்வைத்துள்ளனர் என்று முன்னைய அரசின் பேச்சுவார்த்தைக் குழுவில் அங்கம் வகித்தவரும் முன்னாள் அரசியலமைப்பு விவகார அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் கூறியிருந்ததையும் நாம் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணி அரசு புலிகளின் இடைக்கால முன்மொழிவுகள் பற்றிப் பேசத் தயாராகவிருந்ததென்றும் கூறும் பிரபாகரன், பேராசிரியர் பீரிஸின் இக் கூற்றினைக் கவனத்திலெடுக்கத் தவறிவிட்டார் ஜனாதிபதியும் விமல் வீரவன்சவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், ஆனந்தசங்கரியும் மட்டுமல்ல ஐ.தே.க.வின் முக்கிய தூண்களிலொருவரான ஜீ.எல். பீரிஸும் புலிகளின் தன்னாட்சி முன் மொழிவுகளைக் கண்டித்துள்ளார்கள். பொறுமையிழந்து எல்லைக் கோடுகளை எட்டிவிட்ட புலிகளிடம் இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை வழங்கப்படாவிட்டால் "எங்கள் மக்களுக்காகத் துப்பாக்கிகள் வெடிக்கும்" என்ற கடைசி எச்சரிக்கையைப் பிரபாகரன் வெளியிட்டிருக்கிறார். இன்னொரு வார்த்தையில் சொல்வதானால் ஒலிவ் இலைகளுக்குப் பின்னால் அவர் துப்பாக்கிகளுக்கு எண்ணெய் தடவித் தயாராகிறார் என்பதே அர்த்தமாகும். இது கூட அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு மிரட்டல் தொனியென்று பரவலாகக் கருதப்படுகிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வை முன்னெடுப்பதில் சம்பந்தப்பட்ட நாடுகள் களைத்துப் போகும் நிலைக்கு வந்துவிட்டன. தமிழ் மக்களைப் பொறுத்தவரை யுத்தம் போதும் போதுமென்றாகிவிட்டது. நேற்று வரை கண்ணை மூடிக்கொண்டிருந்த இந்தியா, இலங்கையை உற்றுப் பார்க்கும் நிலைக்கு வந்துவிட்டது. இந்த நிலையில் நான்காவது ஈழப் போரை உடனடியாக ஆரம்பிப்பதற்குப் பிரபாகரன் ஒன்றும் முட்டாளல்ல. யுத்தத்தை ஆரம்பித்து அவர் தனக்குத் தானே சவக்குழியை இப்போதைக்கு வெட்டப் போவதில்லையென்பது திண்ணம்.

"தமிழர் பிரச்சினை குறித்துப் பிளவுபட்டு, முரண்பட்டுக் குழம்பி நிற்கும் சிங்கள அரசியல் தலைவர்களிடமிருந்து எமது மக்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு கிடைக்கப்போவதில்லையென்ற உண்மையை உணர்ந்துதான் நாம் இடைக்காலத் தீர்வுத்திட்டத்தை முன்வைத்தோம்" என்றும் கூறுகிறார் பிராபகரன்.

"இடைக்காலத் தீர்வோடு இறுதித் தீர்வு பற்றியும் பேசுவோம் வாருங்கள்" என்றுதான் ஜனாதிபதி புலிகளுக்கு அழைப்பு விடுத்தார். "இறுதித் தீர்வு பற்றி இப்போது பேச நாம் தயாரில்லை"யென்பதே புலிகளின் அறிவிப்பாகவும் இருந்தது. உண்மையில் நிரந்தரமான இறுதித் தீர்வு பற்றிப் பேசுவதற்கு மறுப்புத் தெரிவித்த புலிகள், சிங்கள அரசியல் தலைவர்களிடமிருந்து நிரந்தரத் தீர்வு கிடைக்கப் போவதில்லையென்பதைத் திடீரெனக் கண்டுபிடித்திருக் கிறார்கள். கௌரவமான நிரந்தரத் தீர்வே தமிழ் மக்களுக்கு நீடித்த, நிலையான சமாதானத்தைப் பெற்றுக் கொடுக்கும். நிரந்தரத் தீர்வைச் சிங்கள அரசாங்கம் தராதென்று அவநம்பிக்கைப்படும் பிரபாகரனுக்கு இடைக்காலத் தீர்வை மட்டும் சிங்கள அரசாங்கம் தருமென்ற நம்பிக்கை எப்படி வந்தது? இடைக்காலத் தீர்வு பற்றி அவசர அவசரமாக நம்பிக்கையோடு பேச அழைக்கும் பிரபாகரன், ஏன் அதே இறுதித் தீர்வு பற்றிப் பேசுவதில் அவநம்பிக்கை கொள்கிறாரென்பது அவருக்கே வெளிச்சம்.

இரு தரப்புகளுக்குமிடையில் முரண்பாடுகள் இருப்பதால்தான் தீர்வைத் தேடுவதற்குப் பேச்சுவார்த்தை அவசியமாகிறது. மறுதரப்போடு பேசுவதில் அர்த்தமில்லையென்ற அவநம்பிக்கையோடு பேச முனைவதில் அர்த்தமில்லை. யுத்தத்துக்குச் செல்லும் ஒருவன் தோல்வியடைவேனென்று அவநம்பிக்கை கொண்டிருப்பானேயானால் யுத்தத்துக்குப் போகாமல் விடுவதே சிறந்தது. முரண்பாடுகளின் வளர்ச்சிப் போக்குத்தான் இயங்கியல். அதைத் தீர்ப்பதில்தான் சம்பந்தப்படுவோரின் மதிநுட்பம் தங்கியிருக்கிறது.

தெற்கிலுள்ள சிங்களக் கட்சிகளிடையே இணக்கப்பாடு இல்லையென்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்குள் நல்லிணக்கமில்லையென்றும் பிரபாகரன் கூறுவதைப் பார்ப்போம். தெற்கிலுள்ள சிங்களக் கட்சிகளனைத்தும் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஒரே கருத்தைக் கொண்டிருக்கவில்லையென்பது உண்மை. ஒரே கருத்தைக் கொண்டிருக்க வேண்டிய தேவையுமில்லை. ஜனநாயகத்துக்கும் மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்படுகின்ற சூழலில் அபிப்பிராய பேதங்கள் இருக்கும். அது தவிர்க்க முடியாதது. தென்னிலங்கைச் சக்திகளுக்கிடையே ஒரு பொதுவான இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காகத்தான் ஜனாதிபதி சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆலோசனைப் பேரவையைக் கூட்டினார்.புலிகளுக்குள் எழுந்த மாத்தயா, கருணா, சூசை, பொட்டம்மான், முரண்பாடுகளைத் துப்பாக்கி களால் அடக்குவது போன்ற நடைமுறையை தென்னி லங்கை சக்திகள் பயன்படுத்துவதில்லை.

புலிகளைப் போல் மாற்றுக் கருத்துக்களைத் துப்பாக்கிகளால் மௌனிக்க வைக்கும் நடைமுறையைத் தென்னிலங்கையும் பின்பற்றியிருந்தால் துவக்குகளுக்குப் பயந்து கருத்துகள் ஓடியொளிந்திருக்கும். அங்கும் ஏகப் பிரதிநிதிகள் தோற்றம் பெற்றிருப்பார்கள். "முடக் கழுதைக்குச் சறுக்கினது சாட்டு" என்பது போலத்தான் பிரபாகரனின் வாதம் இருக்கிறது. ஆனாலும் ஆட்சியின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. என்றுமே வகுப்புவாதக் கட்சியாகத் திகழ்ந்ததில்லை. அப்பாவிச் சிங்கள மக்களைப் புலிகள் கொன்று குவித்தது போல் இன ரீதியாக ஒரு தமிழன் மீதோ அல்லது முஸ்லிம் மீதோ ஜே.வி.பி. கைவைத்ததுமில்லை. அவர்கள் இனப் பிரச்சினைத் தீர்வு கீழ்மட்டபிரதேச சபையிலிருந்து மேல் மட்டப் பாராளுமன்றம் வரை அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கருத்தை மட்டுமே முன்வைத்தார்கள். புலிகளையும் அவர்களின் செயற்பாடு களையும் கண்டிக்கிறார்களே யொழிய தமிழ் மக்களை யும் அவர்களின் உரிமைகளையும் மறுக்கவில்லை.

சந்திரிகா அரசுக்கு சமாதானப் பேச்சில் நாட்டமில்லை யென்றும் பிரபாகரன் கூறுகிறார். சமாதான மேசையை விட்டு ஓடியவர்களும் பேச்சுக்கு மீளத் திரும்புவதற்கு இடைக்கால நிபந்தனையை இறுதிவரை விதிப்பவர்களும் யாரென்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். சந்திரிகா அரசு பேச்சை இழுத்தடிக்கிறதென்று கூறி அதற்கான மூன்று காரணங்களையும் வெளியிட்டிருக்கும் பிரபாகரன், போர் நிறுத்த காலத்தில் தாம் அமைதியைப் பேணியதாகவும் ஆனால் அதன் பலன்கள் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வில்லையென்றும் கூறுகிறார். ஏன் போர் நிறுத்தம் நீடித்த முப்பத்துமூன்று மாத காலத்தில் மாற்றுக் கருத்துக்கள் கொண்ட 250க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இனந்தெரியாதவர்கள் என்று கூறப்படும் இனம் காணப்பட்டவர்களால் கொல்லப்பட்டார்களே! அதுவும் யுத்த நிறுத்த காலப் பலாபலன்தானே. பிரபாகரனின் உரையை ஒட்டுமொத்தத்தில் மதிப்பிடுவதானால் "முரண்பாடுகளின் சங்கமம்" என்று கூறலாம்.

ஆக மொத்தத்தில் பிரபாகரன் பேச்சுக்குப் போகப் போவதில்லை. அப்படியில்லையென்று போனாலும் நின்று பிடிக்கப்போவதில்லை. யுத்தத்துக்கும் உடனடியாகப் போகக் கூடிய நிலையிலும் அவர் இல்லை. இருந்தாலும் இலங்கை மக்களிடையே ஓர் உளவியல் ரீதியான யுத்தத்துக்கான முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூற முடியும்.

## முன்னுக்குப் பின் முரண்பாடுகள்

பிரபாகரனின் மாவீரர் தின உரை முன்னுக்குப் பின் முரண்பட்ட வெறும் வார்த்தைப் பிரயோகங்களாகவே படுகிறது. புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சை மீள ஆரம்பிக்கலாமென்றும் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பற்றிப் பேச்சுவார்த்தை மேசையில் பேசித் தீர்க்கலாமென்றும் ஜனாதிபதி எப்போதோ அறிவித்துவிட்டார். ஆனால், பிரபாகரன் இப்போதுதான் புலிகளின் யோசனையை அடிப்படையாக வைத்து நிபந்தனையின்றிப் பேச்சுக்கு வாவென்று நிபந்தனை விதிக்கிறார். இல்லையேல் யுத்தத்துக்குப் போவேனென்றும் மிரட்டுகிறார். இடைக்காலத் தீர்வு பற்றிப் பேசி அதனை நிறுவிய பின்னரே இறுதித் தீர்வு என்றும் முரணாகக் கூறுகிறார். ஒஸ்லோவில் உள்ளக சுயாட்சிப் பொறிமுறையொன்றினை ஏற்படுத்தத் தயாரென்றவர்கள், இப்போது பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை பற்றியும் பேசுகின்றனர். இடைக்காலத் தீர்வு பற்றிச் சிங்கள அரசோடு பேசுவதற்கு நம்பிக்கை கொண்டிருக்கும் அவர், இறுதித் தீர்வு காண்பதற்கு அதே சிங்கள அரசு முன்வராதென்று அவநம்பிக்கை தெரிவிக்கிறார். தெற்கில் அரசியல் கட்சிகளிடையே இணக்கப்பாடு இல்லையென்று கூறும் அவர், வடக்கிலும் கிழக்கிலும் துப்பாக்கிகளால் ஏகப்பிரதிநிதித்துவத்தை பலாத்காரமாக நிலைநாட்டியிருப்பதையும் பாராட்டுகிறார். தேர்தல் தெற்கில், சிங்கள இனவாத மேலாண்மையை உருவாக்கிவிட்டதென்று கூறும் அவர், வடக்கில் ஊழல் மோசடி, மிரட்டல், கள்ளவாக்குகளால் தமிழ் மக்களையே நசுக்கும் ஒரு தமிழ் மேலாண்மை உருவாக்கப்பட்டதையும் பாராட்டுகிறார். மொத்தத்தில் முரண்பாடுகளின் மொத்த வடிவமே அவரது உரை.

# கொழும்பு கொலையாளிகளின் கூடாரமாகிறதா?

**நா**ட்டில் சட்டம், ஒழுங்கு எல்லாமே சீர்குலைந்துவிட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது. தினம் ஒரு படுகொலை; ஒரு ஆட்கடத்தல்; ஒரு மிரட்டல் என்றவாறே நம்மைக் கடந்து செல்கிறது. கிழக்கு மாகாணம் அதிலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு படுகொலைச் சம்பவம் பற்றிய செய்திகள் வருவது

சகஜமாகிவிட்டுள்ளது. மக்களும் இச் செய்திகளுக்குப் பழக்கப்பட்டுப் போனார்களோ என்றளவுக்கு நிலைமை படுமோசமாகிப்போயுள்ளது. துப்பாக்கியோடு இளைஞன் கைது என்றும், மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தப்பி ஓட்டம் என்றும் இனந்தெரியாத நபர்களால் இன்னொருவர் சுட்டுக் கொலை என்றும் நாளாந்தம் செய்திகள் வருகின்றன. காவல்துறையும் கையை விரிக்க வேண்டிய கட்டாயத்துக்குள் விழுந்து கிடப்பதாகத் தெரிகிறது.

குற்றவாளிகள், கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத வரை - உரிய தண்டனை வழங்கப்படாத வரை - இதே நிலைதான் தொடர்கதையாகிப் போகப் போகிறது. புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் மாற்றுக் கருத்துக் கொண்ட அரசியல் பிரதிநிதிகள் மற்றும் இணங்க மறுப்பவர்கள் மீது புரியப்படும் படுகொலைகள் ஒருபக்கம் என்றால் - அரசியல் காரணங்கள் தவிர்ந்த ஏனைய கொலைகளுக்கும் குறைவில்லை. இக்கொலைகளுக்குப் பின்னால் பாதாள உலகக் குழுக்கள் இருப்பதாக காவல்துறை தெரிவிக்கிறது. இவ்வாறான கொலைகள் கூலிக்குச் செய்யப்படுகின்ற கொலைகளாகும். ஆக, இலங்கையில் இரு வகையான கொலைகள் புரியப்படுகின்றன. ஒன்று ஏகத் தலைமைக்கு ஒத்தூதாத மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்கள் மீது புரியப்படும் அரசியல் படுகொலைகள். மற்றது கூலிப் படுகொலைகள். இவற்றைத் தடுத்து நிறுத்த அரச தரப்பு என்ன நடவடிக்கையை எடுத்துள்ளது அல்லது எடுக்கவுள்ளது என்பதுதான் இன்றுள்ள பிரதான கேள்வியாகும்.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாகக் கொலைகள் நிகழ்ந்தாலும் கொழும்பில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் தொடர் கொலைகள் சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பது தொடர்பில் பெரும் சவாலாகவே அமைந்துள்ளன. கடந்த ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி இக் கொலைகள் குறித்துப் பேசும்போது, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புரியப்படும் படுகொலைகள் தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும், அதிலும் கொழும்பில் மேலும் கொலைகள் இடம்பெறுமாக இருந்தால் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் அதற்கு மாறாக அவரின் வாக்குறுதிக்குச்



கொழும்பில் கொலை செய்யப்பட்ட நீதிபதி சரத் அம்பேபிட்டிய

சவாலாக வெள்ளவத்தையில் கருணா அணி உறுப்பினர்கள் சுடப்பட்டார்கள். மட்டக்குளியில் மற்றுமொரு தமிழ் இளைஞர் சுடப்பட்டார். நீதிபதி அம்பேபிட்டிய சுடப்பட்டார். தெமட்டகொடவில் புளொட் உறுப்பினர் ரங்கப்பா சுடப்பட்டார். இவ்வாறு சம்பவங்கள் நடந்தும் காவல்துறையோ, ஜனாதிபதியோ இதுபோன்ற படுகொலைகள் எதிர்காலத்தில் நடக்காது என்ற உத்தரவாதத்தைத் தரமுடியாத நிலைப்பாடு நிலவுகிறது.

பொறுப்புள்ள ஜனாதிபதி என்ற வகையிலும் இறைமையுள்ள நாடு என்ற வகையிலும் இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டியதும், இதற்குத் தேவையான ஒத்துழைப்பை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண் டியதும் இன்றைய அவசரத் தேவையாகும்.

அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாததால் கொலையாளிகள் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. தற்போது இது பெரும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொலையாளிகள் தமது இலக்குகளை அண்மித்து அடையாளம் காணவும், சந்தேகம் ஏற்படாத வகையில் நடமாடித் திரியவும் இச் சூழ் நிலை பெரிதும் உதவி வருகிறது.

குற்றம் புரியும்போதோ, தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருக்கும்போதோதான் கைது செய்ய முடியும் என்ற சாதாரண சட்டங்களால் இவ்வாறான பாரிய குற்றச் செயல்களை ஒரு காலமும் கட்டுப்படுத்த முடியாது என்பதையே சமகாலச் சூழ்நிலை உணர்த்தி நிற்கிறது.

கொழும்பின் பல பகுதிகளில் மிக அண்மித்த காலப் பகுதிகளில் கொழும்புக்கு வருகை தந்தவர்களின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. இவ்வாறு நடமாடும் புதிய முகங்கள் குறிப்பாக இளைஞர்கள், யுவதிகளாகவே காணப்படுகின்றனரெனக் அறியப்படுவது குறித்து மக்கள், பொலிஸாருக்குத் தெரிவிக்கும்போது, ஆயுதங்கள் எதுவும் வைத்திருக்காத சந்தர்ப்பத்தில் எவரையும் கைது செய்ய முடியாது எனப் பொலிஸார் ஒதுங்கிக்கொள்வதாகத் தெரிவிக்கின்றனராம், அண்மையில் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறும்போது, கொழும்பில் நடைபெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த போதிய பொலிஸார் இல்லையென்று தெரிவித்திருந்தார்.

கொலையாளிகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்களின் பாதுகாப்புக்காக தற்போது மூவாயிரம் பொலிஸாரே இருப்பதாகவும், ஆனால் சுமார் ஐயாயிரம் பேர் வரை தேவை என்றும் குறிப்பிட்டிருந்தார். இக் கூற்று எவ்வளவு தூரம் ஏற்கக்கூடியதென்று மக்கள் கேள்வியெழுப்புகின்றனர். ஏனெனில் குற்றங்களை - கொலைகளை இல்லாமல் செய்ய அல்லது நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து, அவற்றைத் தடுப்பது எப்படி என்று யோசிப்பதாகவே படுகிறது.

படுதோல்வி கண்ட நிலையில் இந்திய கிரிக்கெட் அணி நின்றபோது பேட்டியளித்த அணித் தலைவர், தமது வீரர்கள் எதிரணியை எதிர்த்து ஆடுவதைவிடவும் தடுத்தாடுவதிலேயே கவனம் செலுத்தினர் என்றார். இதே நிலைதான் இன்றைய இலங்கையின் சட்டம், ஒழுங்கு தொடர்பிலும் காணப்படுகிறது. இது ஆரோக்கியமானதல்ல. கொலையாளிகளின் இலக்குகளைப் பாதுகாக்கும் அதேவேளை கொலையாளிகளையும், குற்றவாளிகளையும் சட்டத்தின்முன் கொண்டுவந்து நிறுத்த வேண்டிய பாரிய பொறுப்பு காவல்துறைக்கு உண்டு. இலங்கையின் ஒவ்வொரு பிரஜையின் பாதுகாப்பான வாழ்வுரிமைக்கு உத்தரவாதமளிக்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு உள்ளது. இந்தப் பொறுப்புகளிலிருந்து காவல்துறையோ அரசாங்கமோ விலகிவிட முடியாது. இல்லாவிடின் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைகளை குழி தோண்டிப் புதைத்துவிட்டு குற்றவாளிகளிடமும் கொலையாளிகளிடமும் சென்று அவர்களின் கால்களில் விழ முடியாது என மக்கள் கருதுகின்றனர். அரசாங்கத்தினருக்கு தம்மைப் பாதுகாக்கும் பொறுப்பு உள்ளதென்பதை வலியுறுத்தும் மக்கள், இதே நிலை நீடிக்குமாக இருந்தால் நாடு மிகவும் மோசமான பாதாளத்துக்குள் விழுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாமல் போகும் எனவும் தெரிவிக்கின்றனர்.

கொலை ஒன்று நடந்ததும் பாதுகாப்பு அதிகரிக்கப்படுவதும் அன்றிலிருந்து ஒரு கிழமைக்கு பாரிய கண்காணிப்புகளைச் செய்வதும் குற்றங்களைத் தடுக்க போதுமான

அலசுவது
- மதியூகி -

நடவடிக்கைகள் அல்ல. கண்காணிப்பும், அவதானிப்பும் தொடர்ச்சியான தேவையாக இருப்பதையே அன்றாடக் குற்றச்செயல்கள் தெளிவுபடுத்துகின்றன.

குற்றமொன்றை அல்லது கொலையைச் செய்யும் ஒருவர் குறிப்பிட்ட சம்பவத்துக்குப் பிறகு ஒரு வாரம் ஓய்வெடுத்துவிட்டு அடுத்த கொலைக்குத் திட்டம் தீட்டும் காலமாகவே பாதுகாப்பு நிலைவரம் இதுவரை இருந்து வருகிறது. காவல்துறைக்கும், பொறுப்புள்ள அரசுக்கும் சவால் விடுக்கும் இக் குற்றச் செயல்களைப் புரிவோர் தொடர்பில் எதிர்காலத்தில் எவ்வகையான நடவடிக்கைகள் எடுக்கப்படப்போகின்றன என்பதை மக்கள் பொறுமையோடு அவதானித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அரசு தன் கடமையை எவ்வாறு நிறைவேற்றப் போகிறது? வெறும் அறிக்கைகளாகவா அல்லது ஆக்கபூர்வமான செயற்பாடுகளாகவா?

## அதிரடி அய்யாத்துரை



**வடக்கில்** கண்ணி வெடி அகற்றிற அமைப்பு கதி கலங்கிப் போயிட்டுதுங்கோ. கூட வேலை செய்யிறவையளுக்கு கொடுப்பனவை உயர்த்தித் தாற மெண்டிட்டு சத்தமில்லாம இருந்திச்சினமாம். விடுவினமோ எங்கட ஆக்கள் அவையளை வெளியால இறங்க விடாம அலுவலகத்துக்குள்ளயே வைச்சுப் பூட்டிப்போட்டினம். "எங்களுக்கு உதவி செய்ய வந்தவையளை உப்பிடிப் பூட்டித் தொல்லை குடுக்கிறது நல்லதில்லையெல்லோ" எண்டு கேட்டால் "இவையென்ன சும்மாவே வந்து உதவுகினம், இந்தச் சாட்டில நல்லாப் பணம் பண்ணுகினமாம். அதில எங்களுக்கும் தரலாமெல்லோ. எங்கட சம்பளத்தைத்தான கேட்கிறம்" எண்டி னம். யுத்தத்தின்ர பேராலையும் மக்களின்ர பேராலையும், மண்ணின்ர பேராலையும் பணம் பண்ணுறது சர்வ சாதாரணமாகிப் போயிட்டுதுங்கோ. பாவம்! அறைக்குள்ள பூட்டிவைக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் லேசாக் கலங்கிப் போயிட்டனமாம். எண்டாலும் பூட்டி வச்சது நியாயமில்லையுங்கோ.

**திருகோண** மலையில மாவீரர் நாள் ஒரு பக்கமும் உண்மையான வீரர்கள் நாள் ஒரு பக்கமுமாக ஒரே திருவிழாவாத்தான் இருந்துச்சு. ரெண்டெழுத்தார் சிவப்பு மஞ்சள் நிறத்தில தங்கட கொடிகளையும் பெரும்பான்மையான மக்கள் தங்கட பௌத்த கொடியையும் கட்டியிருந்திச்சினம். விஷயம் தெரியாத யாரும் பாத்திச்சினம் எண்டால் மறைஞ்சிருக்கிற வில்லங்கத்தைப் புரிஞ்சுகொள்ளாமல் வர்ணமயமா இருக்குதெண்டு வியந்து போயிருப்பினம். விசயந் தெரிஞ்ச சனம் விபரீதம் நடக்குமோவெண்டு பதறிக்கொண்டு இருந்திச்சினம் ரெண்டு வீரர்களின்ர போட்டியாலையும் நகரமே விடியாமக் கிடக்குங்கோ. ஊரடங்குச் சட்டம் இண்டைக்கெண்டால், மறுநாள் ஹர்த்தால் எண்டு மாறிமாறிப் போடுறதால உழைக்கப் போறவையளும் படிக்கப் போறவையளும் தான்.

ரொம்பப் பாதிக்கப்பட்டிருக்கினமாம். "செத்தவங்களின்ர பெயரால எங்களின்ர உயிரோட இருக்கிற வங்களச் சாகடிக்கிறாங்கள்" எண்டு சனம் கேள்வி கேட்கிறது. யாற்ர காதிலையும் விழுகுதில்லையே.

**போன** தேர்தலில மக்களின்ர பேரால தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பு எம்.பி.மாரின்ர பகல் கனவுகள் ரொம்பத் தடைப்பட்டுப் போறதாக் கேள்வி. தேசியமானவர் விடுதலைப் பயணத்தை முன்னெடுக்க வேண்டி வருமெண்டு பேசினவரெல்லோ. ஒருவேளை அந்த நிலைமை ஏற்பட்டால் தாங்கள் எங்க நிண்டுகொண்டு பொலிற்றிக்ஸ் பண்ணிற தெண்டு தலையைப் போட்டுப் பிச்சுக்கொண்டு நிக்கினமாம். அதிலையும் சில பேர் தங்கட பழைய கடிதத் தலைகளையும் தூசு தட்டினமாமெண்டும் ஒரு கதை ஊர் மேயுது. யுத்தமொண்டு ஆரம்பிச்சால் மக்கள் பாதிக்கப்படுவினமே எண்டதை விடவும் பதவிகளுக்குப் பாதிப்பு வந்திடுமே எண்டதிலதான் கூடக் கவனமா இருக்கினம். இப்ப தெரியுதோ மக்களின்ர பிரதிநிதிகள் எண்ட போர்வையில யார் இருக்கினமெண்டு.....

**அதிகார** அம்மணி மேல அப்பிடி என்னதான் கோபமோ தெரியேல்லை. ரெண்டெழுத்தாரின்ர தலைவர் அம்மணி மேல அடுக்கடுக்காக் குற்றச்சாட்டுகளை அடிக்கிக்கொண்டே போனார். அவற்ர உரையில அவர் ரெண்டு விதமாப் பேசியிருந்தார். "நாம்" எண்டும் "நான்" எண்டும் பேசினார். பச்சைக்கட்சிக்காறர் ஏமாத்திப் போட்டினம். எங்கட மக்கள் சமாதான காலத்தில எந்தப் பலனையும் அனுபவிக்கயில்லை, வெறுமனே காலந் தாழ்த்திற தந்திரத்தைத்தான் ரணிலின்ர அரசு செய்துகொண்டு வருகுதெண்டு போன உரையில கூறினவர், இந்தமுறை அம்மணியைக் குறை சொல்லியிருக் கிறார். மொத்தத்தில சிங்கள தேசத்தின் மீதும், அதன் அரசியல் தலைமைகள் மீதும் தன்ர அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறார். குறிப்பிட்ட காலக்கெடு வைச்சு முடிப்பார் எண்டு ஆவெண்டு பாத்துக்கொண்டிருந்தவைக்கு ஏமாற்றம்தான். குறிப்பிட்டுச் சொல்லாம "சீக்கிரம் பேசுங்கோ" எண்டு, குத்துமதிப்பாவெல்லே சொல்லியிருக்கிறார். எது எப்பிடியோ சமாதானப் பேச்சை காலம் தாழ்த்தாமல் விரைவாக ஆரம்பிக்க வேண்டியது அவசியந்தான் எண்டத யாரும் மறுத்துப் பேச ஏலாது. இப்பிடிச் சொல்லிக்கொண்டு இருக்கிறதும் ஒருவிதமான இழுத்தடிப்புத்தான் எண்டதை சம்பந்தப்பட்டவையள் புரிஞ்சுகொண்டால் நல்லதோ; இல்லையோ.

**மேல்நீதிமன்ற** நீதிபதி கொலைசெய்யப் பட்டதுக்குப் பின்னாலை பல மர்மங்கள் புதைஞ்சு கிடக்குதாம். கூலிக்குக் கொலைசெய்யிறவைதான் செய்திருப்பினம் எண்டு சிறு சிறுகக் கிடைச்ச செய்தியோட இப்ப பெரிய குண்டொண்டையும் தூக்கிப் போட்டிருக்கினம்.

என்னெண்டு தெரியுமே... தீர்ப்புச் சொல்றவரின்ர கொலையோட காவல்துறையைச் சேர்ந்த பெரும் புள்ளி ஒருவருக்கும் உள்ளுக்குள்ளால சம்பந்தமிருக்குதாம். அதுமட்டுமில்லை, இந்த கேஸோட இன்னும் பல கொலைகளின்ர பைலுகளும் வெளிக் கிளம்பலாமெண்டும் சொல்லினம். வேலியே பயிரை மேயுறது நாட்டுக்கு நல்லதில்லையுங்கோ. "மற்றக் கொலையளோடை சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை ஏன் பிடிக்கினமில்லை" எண்டு கேட்டதுக்கு 'அந்தக் கொலையாளி ரெண்டெழுத்தாற்ர ஏரியாவுக்க, போடர் தாண்டினதால தங்களால ஒண்டும் செய்யமுடியிறதில்லை'யாம். ரொம்ப வழியுது. போய்த் துடைச்சுக்கொள்ளுங்கோ ப்ளீஸ்.....

**மகேஸ்வரனாற்ர** அசுமாத்தத்தையே காணயில்லை; "ஆள் எங்க? நாட்டுக்குள்ளயோ வெளியிலயோ" எண்டு கேட்டுக்கொண்டிருந்தவைக்கு ஒரு இனிப்புச் செய்தி. அவர் பட்ஜெட்டின்ர ரெண்டாவது விவாதத்தில கலந்துகொண்டு "உந்த பட்ஜெட்டில தலைநகரில உள்ள சேரிப்புறத்தின்ர நலன் கவனத்தில 'கொள்ளப்படயில்லை"யெண்டு முழங்கியிருக்கிறார். மூண்டு மாசத்துக்கு ஒருமுறை வந்து கையெழுத்துப்போட்டால் போதுமெண்டு எங்கட சட்டமும், எப்பவெண்டாலும் ஒரு அறிக்கையை விட்டால் அதுதான் பொலிற்றிக்ஸ் எண்டும் எங்கட தேசிய பொலிற்றிக்ஸ் வழி விடேக்க, அவரைக் காணயில்லை இவரைக் காணயில்லையெண்டு தேடாதயுங்கோ....ஆளைக் குறி வைச்சுக்கொண்டு ரெண்டு மூண்டு கைத் துப்பாக்கிகள் பேயா அலையுது. அதால ஆள் கவரில இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கு. தயவு செய்து நிலைமையைப் புரிஞ்சு கொள்ளுங்கோ...

**கிழக்கில** வானொலி நிலையமொண்டு இயங்கப் போறதாகக் கதை அடிபடுகுது. தேனகத்திலதான் கலையகத்தைக் கட்டப் போகினமாம். "இப்பவே எந்த மீற்றரில கேக்கிறதெண்டு குழப்பமாக் கிடக்கு. பின்ன எதுக்கு இன்னொண்டு" எண்டு விசாரிச்சதில எந்த வானொலியிலும் இப்ப நியாயமா விசயத்தைச் சொல்லினமில்லையாம், தவிரவும் சினிமாப்பாட்டை ஒலிபரப்புறது மட்டுந்தான் ரேடியோவின்ர வேலை எண்ட மாதிரி ஆயிட்டுதாம். பிரகாசமான வானொலிக்காறர் சில செய்திகளை மறைச்சாலும், சொல்லினம். 'சக்தி'யானவையள் சில உண்மைகளை அப்பிடியே ஏப்பம் விட்டுத்தான் செய்தி சொல்லினம். அரச வானொலி ஆடிக்கொருக்கா அமாவாசைக் கொருக்காத்தான் வாய் திறக்குதெண்டு சனம் குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே போகுதுகளாம். சரி.... அதுக்காக தனி வானொலி துறந்து காலப்போக்கில நீங்களும் குடை பிடிக்காமல் இருந்தாச் சரிதான். இதே லைனில இன்னும் சில நிலையங்கள் திறக்கப்பட்டாலும் ஆச்சரியப்பட ஒண்டுமில்லைங்கோ.

இந்தக் கவிதை எதையாவது மறைச்சுச் சொல்லிறதாக நினைக்காதியுங்கோ. இதைவிட ஓப்பினா இதைச் சொல்ல முடியாது.

*விருட்சமாய் விழும்போது*
*நான் விளங்கிக் கொள்ளவில்லை.*
*நிழலுக்கடியில் நீங்கள்*
*நெருப்பு மூட்டுவீர்கள் என்று..*
*ஆணவத்தோடு ஆடுகிற நெருப்பே!*
*நிலத்தில்தான்*
*நிலைகொண்டுள்ளதாய் என்பதை*
*நினைவில் கொள்வாயா.....?*

# பலாங்கொடை தோட்ட மக்களை பதிக்கும் மாணிக்கக் கல் அகழ்வு

எழில் கொஞ்சும் மலையகத்தின் ஒரு பகுதி பொகவந்தலாவை எனும் பிரதேசம். இங்கே நடைபெறுகின்ற - எதிர்காலத்தை சீரழிக்கும் - செயல்களை எவரும் கண்டுகொள்வதில்லை. அதாவது, இந்தப் பிரதேசத்தில் மாணிக்கக் கல் அகழ்வு நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. என்ன பிரச்சினை என்றால் இங்கே மாணிக்கக்கல் அகழ்பவர்கள் வெளி இடங்களில் உள்ள முதலாளிமார்கள். ஏற்கனவே இந்த இடத்தில் பெரிய இருந்தது. ஆனால் அதனை எதிர்த்த இங்குள்ள மாடு வளர்ப்பவர்கள், புல்லுக்குக் கஷ்டம், மாடு வளர்ப்பது எப்படி என்று போராட்டம் நடத்தி அதனை நிறுத்தியவர்கள். இன்று ஒன்றுமில்லாமல் போய்க் கொண்டிருக்கும் இந்த நிலத்தினை என்ன செய்யப் போகிறார்கள்.

இங்கே மாணிக்கக் கல் அகழ்வதனால் இங்குள்ள அயல்தோட்ட மக்களும் பாதிக்கப்படுகின்றனர். அன்றாடத் தோட்ட வேலைக்குச் செல்லாமல் இங்கே செல்கின்றனர். இங்கே வேலைக்குச் செல்பவர்களுக்குக் காலை 7.30 மணி தொடங்கி மாலை 5.30 மணிவரை சுமார் 11 மணித்தியாலம் வேலை இவ்வாறு வேலை செய்பவர்களுக்குக் கூலி 300 ரூபா, பகல் உணவு கொடுத்து. மாலையில் வேலை முடிந்து வரும் இவர்கள் அப்பணத்தை அண்மையிலுள்ள பாரில் சென்று குடித்துவிட்டு வீட்டுக்கு 100 அல்லது 150 ரூபா தான் கொடுக்கின்றார்கள்.

அத்துடன் இந்தப் பிரதேசத்தை அண்டிய தோட்ட இளைஞர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. இங்கே வேலை கஷ்டம் என்பதனால் போதைப் பொருட்களும் பாவிக்கப்படுகின்றன. இங்கேயுள்ள அனேகமானோர் திருட்டுத்தனமான 'பத்தல்' தான் செய்கின்றனர். இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கின்றார்கள் என்பது தெரியவில்லை. இதனால் பாதிக்கப்பட்டும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் பாதிக்கப்படப்போவதும் வேறுயாருமல்ல, இங்குள்ள நாங்கள் தான். வேறு எங்கேயோ உள்ளவர்கள் வந்து பிழைத்துவிட்டுப் போக நாங்கள் பலிக்கடாவாக வேண்டுமா? அதிகமான முறைப்பாடுகள் கூட இந்த மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக்கையினால் தான். இதனால் சுயதொழில் யாரும் செய்வதில்லை எதிர்காலம் என்னவாகும் என்பதுதான் இப்போதைய கேள்வி. சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான துரித நடவடிக்கை எடுத்து மக்கள் விடிவுக்கு வழி சமைக்க வேண்டும்.

-நலன்விரும்பி, பொகவந்தலாவ.

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி. - ஆசிரியர்

## விளம்பரப்பகுதி

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

*இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:*

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் காசோலைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபால் கந்தோரில் மாறும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk


## சாயி பவான்

இல33, 42nd Lane வெள்ளவத்தையில் 7ஆவது மாடியில் ஒவ்வொன்றும் 1200 ச.அடி. கொண்ட இரண்டு சொகுசு மாடிவீடுகள் டிசம்பர் 2004இல் குடிபுகும் நிலையில் உள்ளது.

2படுக்கை அறைகள், 2குளியல் அறைகள், லிப்ற் வசதி Roof Garden, தனியான பல்கணி.

தொடர்பு:- 2 360031, 2 501380, 0722-405271.

E Mail: singam@slt.lk

## லண்டன், பாரிஸ்

**இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்**

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

டாக்டர் ஆர். தியாகராஜன் DHMS, AMRSH (LON)

01.12.2004 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:
02087678004 - 07984803488 - 07833341693
E-mail : homoeocare@rediffmail.com
இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513
டிசம்பர் மாத இலங்கை விஜயம் 24.12.2004 முதல் 29.12.2004 வரை

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

## மலையாள மாந்திரீக சக்தி கைகண்ட பலன் பெற






எம்மால் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்


**சந்திரன், இங்கிலாந்து.**

திரு ஐயா அவர்களுக்கு நான் திருமதி ஆனந்தி ரணசந்திரன் எழுதுவது, ஐயா! நாங்கள் 10.05.2003 நிரந்தர விசா கிடைத்து கனடா நாட்டிற்கு செல்கிறோம் தயவுசெய்து எந்தக் காரணத்திற்கும் எனக்கு இங்கிலாந்துக்கு கடிதம் போட வேண்டாம் நாங்கள் நிரந்தரமாக கனடாவில் தங்கிவிடுவோம். நீங்கள் இதுவரை செய்த உதவிக்கு நன்றி.



**சிவகுமார், வத்தளை.**

மதிப்பிற்கும் பெருமைக்கும் வணக்கத்துக்கும் உரிய சாமி ஐயா அவர்களுக்கு, எனது அக்கா மகளை விடுமுறைக்காக மட்டக்களப்பின் ஆச்சி வீட்டில் கொண்டுபோய் விட்டிருந்த நேரத்தில் அங்கு அவர் ஒருவரோடு பழகி வீட்டை விட்டுப் போய்விட்டார். அந்த சமயத்தில் தங்களிடம் வந்து எனது அக்கா மகளை (விஜயகுமாரி) மீட்டுத் தரும்படியும் காதலை விட்டு எங்கள் வசம் வரவேண்டும் என்று தங்களிடம் வேண்டி பரிகாரம் செய்துகொண்டதின் பேரில் ஐயாவின் அருள் சக்தியாலும் துர்க்கையின் ஆசீர்வாதத்தாலும் எனது அக்கா மகள் விஜயகுமாரி எந்தக் குறையுமில்லாமல் நல்லபடியாக வீடு வந்து சேர்ந்துள்ளார். தனது காதலையும் மறந்து நல்லபடியாக எங்கள் சொல் கேட்டு நலமாக உள்ளார் தங்களுக்கு பல ஆயிரம் நன்றிகளை நானும் எனது குடும்பத்தாரும் தெரிவித்துக்கொள்கிறோம்.



**நாகம்மா, திருகோணமலை.**

கௌரவத்திற்குரிய சாமி ஐயா அவர்களே! பலகோடி வணக்கத்துடன் நான் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன்.

மார்கழி மாதம் 2003ஆம் ஆண்டு எனது கணவனின் நோய் காரணமாக தாங்களிடம் ஆசீர்வாதம் கேட்டு வந்த போது எனது வெளிநாட்டுப் பயணம் தடைபட்டுக் கொண்டிருப்பதை தங்களிடம் சொன்னேன். அதற்கு பயப்படாதே என்று எனக்கு அட்சரக் கூடு கட்டிவிட்டீர்கள் ஐயா! ஆனால் தாங்கள் சொன்ன தினத்தில் நாளை 08.02.2004 அதிகாலை 4.00மணிக்கு வெளிநாட்டு போகின்றேன் ஐயா. உங்களுக்கு மிகுந்த நன்றி கூறி விடை பெறுகின்றேன். வெளிநாடு போய் சுபீட்ச வாழ்வு கிட்ட எனக்கு ஆசீர்வதியுங்கள் ஐயா.

நன்றி

**கமலகுமாரி, மட்டக்களப்பு.**

கனம் மேன்மைதங்கிய பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்களுக்கு கமலகுமாரி எழுதிக்கொள்வது!

ஐயா! எனது தொழிலில் ஏற்பட்ட எனது மேல் அதிகாரிகளின் தொல்லை, பிரச்சினைகள் காரணமாக சகோதரன் சாமித்தம்பியின் அறிமுகத்துடன் தங்களிடம் ஆலோசனை கேட்டு வந்தபோது அன்னை துணையுடன் தங்களின் அருட் கடாட்சத்துப் பரிகாரத்தின் பின் தொழில் அதிகாரிகளின் தொல்லை நீங்கி சுபீட்சத்துடன் தொழில் செய்கின்றேன் என்பதை நன்றியுடன் தெரியத் தருவதோடு மேலும் எனக்குள்ள சிறுசிறு பிரச்சினைகளுக்கு ஆசீர்வாதம் தாருங்கள் என்று தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வராஜ், கொழும்பு-13**

அருள்ஞானசித்தர் ஜோதிட பக்குவ இளமை ஐயா அவர்களுக்கு! எனது மகள் ராதிகாவின் ஜாதகத்தை தங்களிடம் கொடுத்து அவளின் திருமண விடயம் கேட்டபோது கணித்துப் பார்த்து 21-5-2004க்குள் திருமண வாய்ப்பு உண்டு; அதுவும் வெளிநாட்டு வரன்தான் அமையும் என்று ஆணித்தரமாகக் கூறினீர்கள். ஐயா நாங்கள் முற்றிலும் எதிர்பார்க்காத விதமாக ஐயா குறிப்பிட்ட கால எல்லைக்குள் எனது மகளுக்கு வெளிநாட்டு வரன் ஒரு நல்ல இடத்தில் இருந்து வந்து முடிவாகியுள்ளது. சொன்னது பலித்துவிட்டது. ஞானத்துடன் கூறும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை என்பது நிரூபணமாகிவிட்டது. 12-2-2004ம் ஆண்டு எனது மகளுக்கு நிச்சயதார்த்தம் நடக்கின்றது. ஏல்லாம் ஐயாவின் ஆசீர்வாதம். ஐயாவின் சேவை மென்மேலும் வளர ஸ்ரீ துர்க்கையைப் பிரார்த்திப்பதோடு, நானும் எனது குடும்பமும் என்றும் நன்றி உள்ளவர்களாக இருப்போம் என்பதையும் கூறிக்கொள்கிறோம்.

நன்றி

**பாதிமா**

கனம் மதிப்பிற்குரிய சாமி ஐயா அவர்களுக்கு வணக்கத்துடனும் நன்றியுடனும் எழுதும் கடிதம்.

ஐயா! எனது தகப்பன் பாருள் குடிக்கு அடிமைப்பட்டு குடித்துக் குடித்துத் தன்னையே அழித்துக்கொள்வதைத் தங்களிடம் வந்து முறையிட்டபோது அதை நிறுத்தித் தருவதாகக் கூறி செய்த பரிகாரத்தின் பின் எனது தகப்பன் படிப்படியாக முற்றாகவே குடியை நிறுத்திவிட்டார் என்பதை குடும்பத்தில் அனைவரும் சந்தோஷத்துடன் ஐயாவிடம் கூறிக்கொள்வதோடு, மேற்படி எனது தகப்பனின் காலில் உள்ள புண் வருத்தத்தையும் குணப்படுத்தி அவரைக் காப்பாற்றித் தரும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

வணக்கம்.

**குறைம், சுவிஸ்!**

அன்புள்ள சாமி ஐயா அவர்களுக்கு பணிவுடன் எழுதிக்கொள்வது யாதெனில், நான் என்னுடைய வருத்தம் சம்பந்தமாகத் தங்களுடன் தொலை பேசி ஊடாகத் தொடர்புகொண்டு எனது வேதனையைத் தங்களுக்குத் தெரிவித்தேன். தாங்களும் என் மீது கூடிய கவனம் செலுத்தி ஸ்ரீ துர்க்கை அம்மன் அருளுடன் எனக்கு உதவி செய்தீர்கள். அதன் பின்பு என்னுடைய வேதனைகள் மிகவும் குறைந்துள்ளது. எனவே தங்களையும் ஸ்ரீ துர்க்கை அம்மனையும் எப்பொழுதும் வணங்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி

குறிப்பு: வாடிக்கையாளரின் மாந்திரீக இரகசியங்கள் பாதுகாக்கப்படும்

**Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N.) J.P.**

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி: 0112470615-2342463-2342464
தொலைநகல்: 0112344831

நுவரெலியாவில் :
33, Daily Fair Complex, Nuwara Eliya.
Tel : 052-2222508, 2235097 Fax: 052-2222508

எம்மிடம் வெளிநாட்டவருக்கு பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

Movement Against Terrorism (பயங்கரவாதத்துக்கெதிரான இயக்கம்) என்ற அமைப்பு புலிகள் அமைப்பு நடத்திய தற்கொலைக் குண்டுதாக்குதல்கள் பற்றி மேற்கொண்ட ஆய்வறிக்கை இது. Mat (மற்) என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்த இயக்கம் வெளியிட்ட இந்த அறிக்கையில் 1987முதல் 2004வரை நடத்தப்பட்ட தங்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

## இன்னொருவர் பார்வையில்

# தற்கொலைத் தாக்குதல்களும் மாவீரர்களும்

இலங்கை அரசாங்கமும் புலிகளும் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றினைச் செய்துகொண்டன. கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேலாக நீடித்துவந்த ஆயுத மோதலுக்குச் சமாதானத் தீர்வு காணும் நோக்கில் முதல் நடவடிக்கையாக இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இந்த யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியெடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இந்த யுத்த நிறுத்தம் தொடர்ச்சியான யுத்த அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்டுவந்த இலங்கைக்குள் ஓரளவு நிம்மதியைக் கொடுத்ததோடு ஜனநாயக நடவடிக்கைகளுக்கும் ஊக்குவிப்பாக அமைந்தது. புலிகள் இலங்கைப் படையினர் மீது நடத்தும் பாரிய தாக்குதல்களை நிறுத்திக்கொண்டனர். அத்துடன் சுதந்திரமான நடமாட்டத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த பந்தோபஸ்துக் கட்டுப்பாட்டுகளையும் இந்த ஒப்பந்தம் நீக்கியது. புலிகள் தமது எதிரிகள் மீது நடத்தும் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் முடிவுக்கு வரும் போல் தெரிந்தது.

ஆனால், இராணுவத் தடைகள் நீக்கப்பட்டதும், புலிகள் மக்கள் மீது தமது அழுத்தங்களை அதிகரித்தனர். சிறுவர் போராளிகளை வலுக் கட்டாயமாகத் தமது படையணிகளில் சேர்த்துக்கொள்ளும் வேலைகளை அது அதிகரித்துக்கொண்டது. முஸ்லிம் மக்கள் மீது புலிகளின் தொந்தரவுகளும் தாக்குதல்களும் அதிகரித்தன. அத்துடன் தம்மை விமர்சிப்பவர்களைக் ஒழித்துக்கட்டும் கொலை இயக்கம் ஒன்றினையும் அவர்கள் ஆரம்பித்தனர். நாட்டின் சகல பகுதிகளுக்குள்ளும் புலிகளின் கொலைக் குழுக்கள் ஊடுருவின. புலிகளால் இலக்குவைக்கப்பட்ட பல தமிழ் மக்கள் தஞ்சம் புகுந்த தலைநகரான கொழும்புக்குள்ளும் கொலைக் குழுக்கள் ஊடுருவின. 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர், நூற்றுக்கு மேற்பட்ட புலி எதிர்ப்பாளர் என்று கருதப்பட்டோரும் புலிகளை விமர்சித்தோரும் கொல்லப்பட்டனர்.

அடிக்கடி பயங்கரமான புதிய தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவித்தன. மாற்றுக் கருத்துக் கொண்ட பலர் தலைமறைவாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். புலிகளை விமர்சிக்கும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள், அரசியல் பணியாளர்கள் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களெல்லாம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய பாரிய அச்சுறுத்தல் எழுந்தது. புலிகளின் கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாக இலங்கையில் தங்கியிருக்கும் 'சுதந்திரமான மனித உரிமைப் பாதுகாவலர்கள்' தெரிவித்தனர். இவர்கள் அனைவரும் புலிகளால் இலக்கு வைக்கப்பட்டவர்களாவர்.

அமெரிக்காவில் செப்டெம்பர் 11இல் தாக்குதல் நடத்தப்பட்டபோது அரசியல் படுகொலைகளை மேற்கொள்வதற்காகவும், பிரதான பொருளாதார மையங்களைத் தாக்குவதற்காகவும், இராணுவத் தாக்குதல்களை மேற்கொள்வதற்காகவும் தற்கொலைக் குண்டுதாரிகளைப் புலிகள் பயன்படுத்துவது பற்றிப் பெருமளவு விடயங்கள் எழுதப்பட்டன. புலிகளின் பாசறையில் இருக்கும் ஒரேயொரு ஆயுதம் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மட்டுமல்ல. ஆனால், சர்வ வியாபகமாகப் பெரிதும் பாவிக்கப்படும் ஒரு ஆயுதமாகும். புலிகள் மக்கள் மீது நடத்தும் ஏனைய தாக்குதல்களைப் போன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும் தமது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காகவும் மக்களைப் பயமுறுத்தி மௌனிக்கச் செய்வதற்காகவுமே பயன்படுத்தப்படுகின்றன.

புலிகளின் தற்கொலைப் பயங்கரவாதம் திட்டமிடப்பட்டு மிலேச்சத்தனமாக மேற்கொள்ளப்படுகிறது. அவர்களின் சொந்தத் தகவல்களுக்கேற்ப 1987ஆம் ஆண்டிலிருந்து 2004ஆம் ஆண்டு ஜூலை வரை புலிகள் 262 தற்கொலைக் குண்டுதாரிகளை இழந்துள்ளனர். இவர்களில் கால்வாசிப் பேர் பெண்களாவர். இத் தாக்குதல்களில் பெரும்பாலானவை இராணுவம், கடற்படைக் கப்பல்கள் மற்றும் இராணுவ வாகன அணிகள் மீது இலக்குவைத்து நடத்தப்பட்டிருக்கின்றன. எனினும், முக்கிய பொது மக்களின் நிலைகள் மீதும் பிரபலஸ்தர்கள் மீதும் பெருமளவு தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் அப்பாவி மக்களே. தமிழ் சமூகத்துக்கு எதிராகப் பரந்தளவில் மேற்கொள்ளப்பட்ட அரச வன்முறைகளுக்கு மத்தியிலேயே புலிகள், தற்கொலைக் குண்டுதாரிகளையும் மக்கள் மீதான ஏனைய மிலேச்சத்தனமான தாக்குதல் நடவடிக்கைகளையும் பயன்படுத்துவது வளர்ச்சி பெற்றிருக்கிறது. இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின்போது ஆயுதப் படையினரோ புலிகளோ, யுத்தத்தில் ஈடுபடுவோருக்கும் யுத்தத்தில் ஈடுபடாதோருக்குமிடையிலான வித்தியாசத்தைப் போதியளவு இனங்கண்டு கொள்ளவில்லை. இரு தரப்பினருமே பெருமளவு அப்பாவி மக்களைக் கொன்றொழித்தனர். புலிகள், பொலிஸ் மற்றும் இராணுவத்தைக் கொல்வதன் மூலம் படையினரை ஆத்திரமூட்ட, படையினர் தாக்குதல் இடம்பெற்ற கிராமங்களை அழித்தனர். அந்தத் தமிழ்க் கிராமங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு இவ்வகையான செயற்பாடுகளைப் புலிகள் பயன்படுத்தினர். யுத்தம் நடைபெற்ற காலகட்டங்களில் புலிகள் திட்டமிட்டு அப்பாவி மக்களின் வாழ்க்கையை ஆபத்துக்குள்ளாக்கியிருக்கின்றனர். இந்த மக்களுக்கு நீதிக்கான மாற்றுவழிகள் வேண்டுமென்றே மறுக்கப்படுவதால் பாதிக்கப்பட்டு, கோபமுற்று அநாதரவாக நிற்கும் மக்கள் மத்தியிலிருந்து தமக்கு வேண்டிய ஆதரவுத் தளத்தைப் பெறுவதற்காகவே புலிகள் திட்டமிட்டுப் படையினர் மீது தாக்குதல்களை நடத்தினர்.

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் சரணடைந்த நூற்றுக்கணக்கான பொலிஸாரைப் புலிகள் சுட்டுக் கொன்றதால் அப்பாவி மக்களுக்கெதிரான பாரிய பழிவாங்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டனர். விமானத் தாக்குதல்கள், கைதுகள், சித்திரவதைகள், ஆட்கள் காணாமற் போதல் உள்ளிட்ட பல பழிவாங்கும் நடவடிக்கைகள் அப்பாவி மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டன. இதைப் போன்றே சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டமை இன மோதல் தீக்கு நெய்யூற்றியதோடு தமிழ் மக்கள் பழிவாங்கப்படுவதற்கும் வழிவகுத்தது. 1990ஆம் ஆண்டு புலிகள் காத்தான் குடியிலுள்ள 'மீராயும்மா' பள்ளிவாசலிலும் உசைனியா பள்ளிவாசலிலும் தொழுகையிலீடுபட்டுக்கொண்டிருந்த முஸ்லிம் மக்கள் மீதும் ஏறாவூரிலுள்ள முஸ்லிம் குடிமக்கள் மீதும் தாக்குதல்களை நடத்தினர். இதனால் கிட்டத்தட்ட 200 பேர் கொல்லப்பட்டனர். முஸ்லிம் கிராம மக்கள் மீது மேலும் பல தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. இலங்கை ஆயுதப் படையினரின் ஆதரவோடு முஸ்லிம் விழிப்புக் குழுக்கள் அயலிலுள்ள தமிழ் சமூகத்தவர் மீது பழிவாங்கும் தாக்குதல்களை மேற்கொண்டபோது புலிகள் மௌனமாக இருந்தனர். இத் தாக்குதல்களின்போது நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இந்த வன்செயலின் காரணத்தால் கிழக்கில் பல்லாயிரக்கணக்கான கிராமவாசிகள் இடம் பெயர்ந்தனர். புலிகளும் ஆயுதப் படையினரும் கிராமவாசிகள் மீது தாக்குதல்களை நடத்திவிட்டு அதற்கான பழியை 'இன ரீதியாக உந்தப்பட்ட குழுக்களே மேற்கொண்டன' என்று பழி போட்டனர். இவ்வாறான இனக் கொந்தளிப்புச் செயற்பாடுகள் இன்று வரை தொடர்கின்றன. யுத்த நிறுத்தம் ஏற்படுத்திய வலுவற்ற சமாதானத்துக்கு இது அச்சுறுத்தலாக விளங்குகிறது.

**புலிகள், பொலிஸ் மற்றும் இராணுவத்தைக் கொல்வதன் மூலம் படையினரை ஆத்திரமூட்ட, படையினர் தாக்குதல் இடம்பெற்ற கிராமங்களை அழித்தனர். அந்தத் தமிழ்க் கிராமங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு இவ்வகையான செயற்பாடுகளைப் புலிகள் பயன்படுத்தினர். யுத்தம் நடைபெற்ற காலகட்டங்களில் புலிகள் திட்டமிட்டு அப்பாவி மக்களின் வாழ்க்கையை ஆபத்துக்குள்ளாக்கியிருக்கின்றனர். இந்த மக்களுக்கு நீதிக்கான மாற்றுவழிகள் வேண்டுமென்றே மறுக்கப்படுவதால் பாதிக்கப்பட்டு, கோபமுற்று அநாதரவாக நிற்கும் மக்கள் மத்தியிலிருந்து தமக்கு வேண்டிய ஆதரவுத் தளத்தைப் பெறுவதற்காகவே புலிகள் திட்டமிட்டுப் படையினர் மீது தாக்குதல்களை நடத்தினர்.**

மிக மோசமான இந்த வன்செயல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வந்ததால் முழுச் சமூகமுமே ஆழமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. பலரின் மனித உயிர்கள் துச்சமாக மதிக்கப்பட்டுள்ளன என்றபோதிலும் கூட, புலிகளுக்காகத் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு தனிநபர்களைத் தூண்டிவிடும் அதிகாரம் புலிகளுக்கு எவ்வாறு கிடைக்கிறது? இது ஒரு சமயம் சார்ந்த யுத்தமல்ல. சிறுபான்மையினரான இலங்கைத் தமிழர்களுக்கு 'தமிழ் தாயகம்' தேவையென்ற அவர்களின் தாகத்துக்கான தேசியவாதப் போக்கைத் தவிர, புலிகளிடம் ஆழமான சித்தாந்தம் எதுவும் கிடையாது. அவர்களின் இனத்துவ அடையாளம் கூடக் காலப்போக்கில் மாறியுள்ளது. புலிகள் இயக்கம் ஒரு அரசியல் அமைப்பாகும். நிலத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் அசாதாரண ஆதிக்கத்தை வைத்திருப்பதற்காக அவர்கள் நடத்தும் அரசியற் போராட்டத்தில் இழக்கப்படும் மனித உயிர்கள் மிக அதிகமென அவர்களுக்குப் புரிவதில்லை.

இலங்கை இராணுவத்தினர் மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் கோபத்தையும் அச்சத்தையும் பயன்படுத்தி, தமிழ் சமூகத்தின் ஒவ்வொரு வாழ்க்கை அம்சத்தின் மீதும் தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதில் புலிகள் வெற்றி கண்டுள்ளனர். அவர்களின் முற்றுமுழுதான அதிகாரத்துக்கு விடுக்கப்படும் எந்தச் சவாலையும் முறியடிப்பதில் அவர்கள் வெற்றிகண்டுள்ளனர். அதன் உத்திகள் பெருமளவு வன்செயல் சார்ந்தவை. அவர்களின் பிரசாரம் மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிடுபவை. சில புத்திசாலித்தனமான தமிழர்கள் இந்தக் தந்திரோபாயத்தின் ஆபத்தை உணர்ந்து இந்த வழிமுறைகள் மாற்றப்பட வேண்டுமென வலியுறுத்தினர். புலிகளிடமிருந்து பிரிந்து செல்வதற்காக அவர்கள் மக்களை அணிதிரட்ட முனைந்தனர். பிரிந்து சென்று புலிகளின் தந்திரோபாயங்களையும் அதன் குறுகிய தேசியவாத சித்தாந்தம் குறித்தும் கேள்வி எழுப்பியவர்கள் ஒருவர் பின் ஒருவராக ஒழித்துக்கட்டப்பட்டனர். பலர் நேரடியாகவே கொல்லப்பட்டனர். வேறு சிலர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு, காவலில் இருக்கையிலேயே கொல்லப்பட்டனர். 1993ஆம் ஆண்டளவில் ஆயிரக்கணக்கான மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் அவர்கள் குடும்ப அங்கத்தவர்களையும் புலிகள் சிறை வைத்துச் சித்திரவதை செய்தனர் என்பதற்குரிய சான்றுகளை 'மனித உரிமைப் போராளிகள்' திரட்டியுள்ளனர்.

புலிகளின் எதிரிகளைக் கொல்லும் நடைமுறை இந்தியாவுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழகத்தில் தங்கியிருந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பெரும்பாலான தலைவர்களை சென்னையில் புலிகள் கொன்றனர். புலிகள் நடத்திய கிரனைற் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக 15 பேர் கொல்லப்பட்டனர். 22 பேர் காயமுற்றனர்.அரசியற் படுகொலைகளும் இயக்கத்துக்காகத் தம்மைத் தாமே அழிக்க விரும்பும் தற்கொலையாளர்களும் புலிகளின் அடையாளங்களாகும். இவை அவர்களின் ஸ்தாபன கலாசாரத்தின் பிரிக்க முடியாத அம்சமாகும். கைதுசெய்யப்படும்போது தற்கொலை செய்துகொள்வதற்காகக் கழுத்தில் சயனைற் குப்பிகளை அணிந்து கொள்ளுமாறு புலிகள் இயக்கம் ஆரம்ப காலத்திலிருந்தே தமது உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டது. யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பாவை 1975ஆம் ஆண்டு புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் கொன்றார். இதுவே அவரது முதலாவது அரசியல் படுகொலை எனக் கூறப்படுகிறது. புலி இயக்கத்தின் ஆரம்ப நாட்களில் தனது அரசியல் நோக்கங்களிலிருந்து விலகிச் செல்கிறார்களென்று பிரபாகரன் சந்தேகித்த நெருங்கிய தோழர்கள் பலரையும் கொன்றார். இந்தப் போக்குப் புலிகள் இயக்கத்தில் தொடர்ந்தும் நீடித்து வந்தது. புலி இயக்கத்துக்கு மாறான குழுக்களோடு தொடர்புகளைக் கொண்டிருந்தார்களென்று சந்தேகிக்கப்பட்ட மக்களும், இயக்கத்துக்குள் மாற்றுக்கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்களும் இலக்கு வைத்து அழிக்கப்பட்டார்கள்.

புலிகளின் பயங்கரவாத வலைப்பின்னல் இலங்கையின் கரைகளைக் கடந்துவிட்டது. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் - தொழிற்துறைகளின் - அரசியல் மற்றும் பொருளாதார ஆதரவு இவர்களுக்குக் கிடைக்கிறது. இந்த வலைப்பின்னல் உலகிலுள்ள தமிழ் மக்கள் புலிகளின் நிலைப்பாட்டை எடுப்பதற்கு வலுவான செல்வாக்கைத் தொடர்ந்தும் செலுத்தி வருகிறது. சமூக அழுத்தங்களும் பொருளாதாரப் பகிஷ்கரிப்புகளும் மாற்றுக் கருத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தவறும்போது இந்த ஸ்தாபனம் மேலும் மோசமான வன்செயல் வழிமுறைகளைக் கையாள்கிறது.

1994ஆம் ஆண்டு மே மாதம் புலிகளை வெளிப்படையாக விமர்சித்து வந்தவரும் எழுத்தாளரும் தீவிர அரசியற் கருத்துக் கொண்டவருமான சபாரத்தினம் சபாலிங்கம் என்பவர் பாரிஸிலுள்ள தனது வீட்டில் பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை பாரிஸிலுள்ள மாற்றுக் கருத்துக் கொண்ட தமிழ் மக்களுக்கிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சபாலிங்கத்தைக் கொன்றவர்களை என்றுமே கண்டுபிடிக்க முடியவில்லை.

1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் புலிகளின் நிலைப்பாட்டை விமர்சித்துக் கட்டுரைகள் எழுதிவந்த பத்திரிகையாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் ரொறன்ரோவில் தமிழ் இளைஞர் குழு ஒன்றினால் 'பேஸ் போல்' மட்டைகளால் தாக்கப்பட்டார். அவரது காலில் முறிவு ஏற்பட்டது. தலையில் காயங்கள் ஏற்பட்டன. அவரது பத்திரிகையான "மஞ்சரி"யை கனடாவிலுள்ள சில்லறைக் கடைகளில் விற்பனை செய்தவர்கள் 1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தாக்கப்பட்டனர். இதனால் ஒரு கடைக்காரர் படுகாயமுற்றார். வாகனம் ஒன்று சேதப்படுத்தப்பட்டது. இந்தப் பத்திரிகை இத் தமிழ்க் கடைகளிலிருந்து பலாத்காரமாக அப்புறப்படுத்தப்பட்டது. இப் பத்திரிகையை வாங்க வேண்டாமென்று வாடிக்கையாளர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். டி.பி.எஸ்.ஜெயராஜ"க்கும் தமிழர்களான கடைக்காரர்களுக்கும் பத்திரிகை வாங்கும் வாடிக்கையாளருக்கும் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட அச்சுறுத்தலையடுத்து இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிடுவதை ஜெயராஜ் நிறுத்திக்கொண்டார். 1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி கனடாவிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகையான "முழக்கம்" ஜெயராஜைப் பற்றிய கட்டுரை ஒன்றைப் பிரசுரித்து அந்தக் கட்டுரையில் ஒரு காலில் காயமேற்பட்ட நிலையில் நாயொன்று கேலிச்சித்திரமாக வரையப்பட்டு "நாயொன்று ஒரு காலை இழந்தால் அது தொடர்ந்தும் குரைத்துக்கொண்டேயிருக்கும்....... எந்த ஒரு வேலையைப் பொறுப்பேற்றாலும் அதனைச் சரியாகச் செய்து முடிக்க வேண்டும்" என்ற வாக்கியமும் எழுதப்பட்டிருந்தது.

**(தொடரும்....)**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**திரு. ராமையா** என்னுடைய அறையைத் தேடி கிளப் ஹவுஸிற்கு வருவதுண்டு. ஒரு நாள் ராமையாவுடன் ஓர் இளைஞர் என் அறைக்கு வந்தார். அவரை எனக்கு ராமையா அறிமுகப்படுத்தி வைத்து, "இவர் - 'தேவை ஒரு தங்கை' என்னும் நாடகத்தில் அற்புதமாக நடிக்கிற என் நண்பர்.



வாலி! அந்த நாடகத்தை நீர் பார்க்கணும். நாடகத்தை எழுதியிருக்கீறவரு உங்க ஊர்க்காரரான, ஸ்ரீரங்கம் நரசிம்மன்தான்..." என்று தன் நண்பரைப்பற்றி என்னிடம் சிலாகித்துச் சொன்னார்.

அந்த நண்பர் நடித்த நாடகத்தை நான் ராமையாவோடு பார்ப்பதாக இருந்தேன். ஏதோ சில காரணங்களால், அதைப் பார்க்க இயலவில்லை. ராமையாவோடு வந்த அந்த நண்பரை, பல ஆண்டுகளுக்குப் பின் நான் திரையில் தான் பார்க்க நேர்ந்தது. ஆம், அவர் அப்போது கதாநாயகனாகி இருந்தார். நான் சொல்லும் அவர், நல்ல நண்பராக இன்றளவும் என்னுடன் பழகும் திரு.ஜெயசங்கர்தான்.

இப்படி கிளப் ஹவுஸில் கால் வைத்தவர்களையெல்லாம் புகழேணியில் ஏற்றி வைத்தது அந்த இடம்.

இந்த நினைவுகளையெல்லாம் ஏன் சற்று விரிவாக எழுதுகிறேன் என்றால், நானறிந்த ஓர் உண்மையை மீண்டும் மீண்டும் நிரூபணம் செய்வதற்காகத்தான்.

அந்த உண்மை என்ன? முந்திய அத்தியாயத்தில் சொல்லியிருந்தேனே அதுதான் அது.

'எவர் வாழ்க்கை எங்கே ஆரம்பித்து எங்கே எவ்வாறு முடியும் என்று முன் கூட்டியே சொல்லக் கூடியவன் உலகத்தில் யாராவது உண்டா?' என்று கேட்டிருந்தேனே, அது முழுக்க முழுக்க என் அனுபவத்தில் நூறு சதவிகித உண்மையென்று உணர்ந்து கொண்டவன் நான்.

'நீ இறைவனை நோக்கி ஓரடி வை. அவர் உன்னை நோக்கி பத்தடி வைப்பார்' என்று புட்டபர்த்தி சாயிபாபா அவர்கள் சொல்லுவார்கள் அது சத்தியமான வாக்கு.

எந்தத் துறையாயினும் சரி. அதில் ஈடுபட்டு வெற்றிக் கனியைப் பறிக்க விழையும் எவருக்கும் நான் சொல்வது இதுதான்:

தெய்வத்தின் மீது பாரத்தைப் போட்டு விட்டு, அதே நேரத்தில் துரும்பைக்கூட எடுத்துப் போடாத சோம்பேறியாக இருப்பவர்களை வெற்றி ஒரு போதும் தழுவுவதில்லை.

தெய்வத்தை நம்புங்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையில், தெய்வம் கொடுத்த உங்கள் கையையும் காலையும் நம்புங்கள். எனக்குத் தெரிந்து அந்த சித்தாந்தம் தோற்றுப் போனதில்லை.

நான் என்னையும் நம்பினேன்; என்னைப் படைத்த இறைவனையும் நம்பினேன். இப்படித்தான் கிளப் ஹவுஸில் நாட்களை ஓட்டிக்கொண்டு சினிமா வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருந்தேன்.

இறைவன் எந்த நேரமும் உங்கள் கதவைத் தட்டி, நீங்கள் நெடுநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வாழ்வை உங்களுக்கு வழங்கலாம்.


ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. 'ஒருவனுக்கு வாழ்வளிக்க, அவன் வீட்டுக் கதவை ஆண்டவன் வந்து தட்டும் போதெல்லாம், அந்த ஆசாமி அநேகமாக வீட்டில் இல்லை' என்பதுதான் அந்தப் பழமொழியின் பொருள்.

இந்தப் பழமொழி எதை நமக்குத் தெரிவிக்கிறது? எப்போதும் வீட்டுக்குள்ளேயே அடைந்துகிட என்பதையல்ல. 'எப்போதும் விழிப்பாயிரு; ஆண்டவன் உன் உழைப்பிற்கு உரிய ஊதியத்தைக் கையில் ஏந்தி எந்த நேரமும் கதவருகில் நிற்கலாம்' என்பதைத் தான் இந்தப் பழமொழி பறைசாற்றுகிறது.

கிளப் ஹவுஸில் இருந்த கொண்டு, திரையுலகின் வெற்றியை நான் தினம் தினம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். முயற்சிகளைப் புரிந்த விட்டு, மற்றதை இறைவன் பொறுப்பில் விட்டுவிட்டுக் காத்துக் கிடந்தேன்.

கடவுள் ஒருநாள் என் கதவைத் தட்டி வாய்ப்பை வழங்கினான்.

(தொடரும்.......)




ஒழுக்கப் பண்புகள் குறித்த, மத ரீதியிலான கருத்து முரண்பாடுகள் மற்றும் விஞ்ஞானிகளது எதிர் வாதங்கள் என்பவற்றுக்கிடையே அனைவரதும் கண்களை மூடி, தற்போது குளோனிங் முறையிலான குழந்தைகள் பிறக்கப்போகின்றன எனப் பல விஞ்ஞானிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இது எங்கே எப்படி நடக்கப்போகின்றது என்பது கூட இன்னமும் இரகசியமாகவே இருந்து வருகின்றது. எனினும் குளோனிங் குழந்தை பிறக்கப்போகிறது என்பது உண்மையான விடயமாகத் தென்படுகிறது.

அனுக்களை அகற்றிவிட்டு அதனை டி.என்.ஏ. உடன் காயவைத்து, பின்னர் மின்னியல் அலைகளினூடே மீளவும் செயற்படுத்தித் தயாரித்துக்கொள்கின்ற ஒரு முறையே குளோனிங் முறை எனப்படுகின்றது. இதுதான் இதனது அடிப்படைச் செயற்பாடாகும். பின்னர் இது மரபணுப் பிரதி எனக் கொள்ளப்படுகின்றது. இம் முறையானது தற்போது பல்வேறு நாடுகளில் மிருக உற்பத்திகள் தொடர்பில் உபயோகிக்கப்படுகின்றன. எனினும் ஒரு மனிதனை எவ்வாறு பிறக்கச் செய்கின்றனர் என்பதுதான் புதிராக உள்ளது.

இவ்வாறான குளோனிங் குழந்தைகள் பிறந்தால்

# குளோனிங் குழந்தைகளும் புதிய சர்ச்சைகளும்

இதற்கு முன்பதாக இதே முறையில் குளோனிங் குழந்தை ஒன்றைப் பிறக்க வைக்கப் போய், அந்த முயற்சி தோல்வி கண்டதால் விஞ்ஞானிகள் விரக்தியுற்ற நிலையை அடைந்தனர். இதற்கு 62 வயதுடைய பெண் ஒருவரின் டி.என்.ஏ. உபயோகப்படுத்தப்பட்டது. இம் முயற்சியானது மாபெரும் வாதப்பிரதிவாதங்களை எழுப்பி இருந்தது. மலட்டுத்தன்மை கொண்ட பெண் ஒருவருக்கு குழந்தைப் பாக்கியத்தைப் பெற்றுக் கொடுப்பது நல்லதொரு விடயமாகும் என்றே விஞ்ஞானிகள் கூறினர்.

தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் இது தொடர்பில் மிகவும் இரகசியமான முறையில் ஆய்வுகள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. உலகின் கண்களுக்கு மறைவாகப் பிறக்கப்போகின்ற இந்தக் குளோனிங் முறைக் குழந்தைகளின் மூலம் மனித இன வரலாற்றிலேயே மாபெரும் கலகங்கள் தோன்றும் என்பதற்கான தகவல்கள் இப்போது வெளிவர ஆரம்பித்துள்ளன.

அதாவது, மனித இனத்து மரபணுக்களின் மூலம் மனிதனுடைய பிரதிகளை எடுப்பதே இதன் தொழிற்பாடாகும். இந்த குளோனிங் மயப்படுத்தலின் வரலாறு மிக நீண்டதாகும். அது மனிதனின் அவயவங்களை இணைப்பதிலேயே ஆரம்பிக்கப்பட்டது. அக் காலத்தில் மதவாதிகளது பல்வேறுபட்ட எதிர்ப்புகளை இது சந்தித்தது. மனிதர்களது உறுப்புகளை இணைப்பதானது மனிதனை இன்னொரு மிருகமாகக் காட்டும் முயற்சியாகும் என்பதே பலரது கருத்தாக இருந்தது.

இச் சம்பவத்தை முன்வைத்து அக் காலகட்டத்தில் பல்வேறு நூல்களும் திரைப்படங்களும் வெளிவந்தன. இதன்போதுதான் பிரென்கன்ஸ்டயிஸ் என்ற அபூர்வமான ஒரு வைத்தியரின் பாத்திரம் படைக்கப்பட்டது.

இதனது இரண்டாவது பிறப்புத்தான் குழாய் மூலமாகக் குழந்தைகளைப் பிறக்க வைத்தல் என்ற முறையாகும். இத் தொழில்நுட்பம் ஆரம்பித்தவுடனேயே பெரும் வாதப்பிரதி வாதங்கள் உருவாக ஆரம்பித்துவிட்டன.

குழந்தைகள் இல்லாத இலட்சக்கணக்கான குடும்பங்களுக்குக் குழந்தைச் செல்வம் கிடைக்கும் என்பது பல வீஞ் ஞானிகளது கருத்தாக இருந்தது. இதன்படி பல்வேறு நாடுகளில் உள்ள பல்வேறு திறமைகொண்ட நபர்களினதும் புத்திஜீவிகளினதும் விந்துக்கள் பல்வேறு நாடுகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்களால் சேகரிக்கப்பட்டுச் சேமிக்கப்பட்டன. இது கிராமம் கிராமமாக இலட்சக்கணக்கான டொலர்களை வருமானமாக ஈட்டும் ஒரு வழியாகவும் மாறிவிட்டது. இதனது புதிய வடிவமாக டி.என்.ஏ. வங்கிகள் உருவாகி கோடிக்கணக்கில் வருமானத்தை ஈட்ட ஆரம்பித்தன.


ஒரு வருடத்துக்கு முன்பதாக கியன்வில்முட் டொலி எனும் விஞ்ஞானி குளோனிங் முறையின் ஊடாக செம்மறி ஆட்டுக் குட்டியொன்றைப் பிறக்கச் செய்தார். கூடிய பயன்மிக்க தான கால்நடைகளை உருவாக்குவதே அவரது நோக்கமாக இருந்தது. இதுகூட மனிதப் பிரதி எடுத்தல் தொடர்பான ஆய்வின் ஒரு கட்டமாகும் என்றே பலர் கருதினர். எனினும் அது உண்மைதான் என நிரூபிப்பதைப் போல் இன்று இரகசியமாகவே மனிதப் பிரதி எடுத்தலின் தொழில்நுட்ப வளர்ச்சி முன்னேறியுள்ளது. இதேநேரம் இம் முறையில் இப்போது கூடக் குழந்தைகள் பிறந்திருக்குமோ என்றொரு சந்தேகமும் நிலவுகின்றது.

சுருங்கக் கூறினால் பெண் வீந்தை எடுத்து அதிலுள்ள

மானுடத்துக்கு என்னவாகும் என்பதுதான் இன்றுள்ள முக்கியப் பிரச்சினையாகும். இது மனிதர்களுக்கிடையே இருந்து வரும் அன்பு, பாசம், கருணை போன்றவற்றின் இறுதி அத்தியாயத்தைக் கொண்டுவரும் என்றே நம்பப்படுகின்றது. இறுதியில் அனைத்துமே மிருகத்தனமாகிவிடும். மனிதனது குணவியல்புகள் மிருகத்தின் அளவுக்குக் குறைந்துவிடக் கூடும் என்றும் ஒரு சிலர் கருத்துக் கூறுகின்றனர்.

இதற்கு முன்பதாக உலகில் இருந்து வந்த கருக்கலைப்பு, குடும்பக் கட்டுப்பாடு, குழாய் மூலமான குழந்தைகள் போன்றவற்றால் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளைக் காட்டிலும் இந்தக் குளோனிங் முறை பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடும். அதாவது ஓர் இரசாயனக் கூடத்தில் பிறக்கக் கூடிய குழந்தைகள் மிருகக் குட்டிகளின் நிலைமைக்கு உட்படலாம் என்ற சந்தேகம் பலமாக இருந்து வருகிறது.

இருதயம் போன்ற முக்கிய அவயவங்கள் குளோனிங் குழந்தைகளின் மூலமாக விற்பனை செய்யப்படக் கூடிய ஒரு விற்பனைச் சந்தை ஒன்று எதிர்காலத்தில் விஞ்ஞான கூடங்களில் உருவாகினால் இந்த மனித வர்க்கத்துக்கு எந்தளவு அழிவுகளைக் கொண்டுவரும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டுமெனப் புத்திஜீவிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



இந்த நிலையில் குளோனிங் மனிதர்களை வெற்றிகரமாக உருவாக்குவது கடினமான விடயமாகும் என நியூயோர்க் ரொக்பொரோல் பல்கலைக்கழகத்தின் குளோனிங் தொடர்பான விஞ்ஞானி பேராசிரியர் பானி பெரிபன் கூறியுள்ளார்.

இது பல்வேறு பிரச்சினைகளை உண்டுபண்ணக் கூடிய ஒரு விடயமாகும் என்பது அவரது கூற்றாகும். எதிர்கால உயிரினங்களுக்கு இது பெரும் சவாலாகும் என்றும் பானி சுட்டிக் காட்டியுள்ளார்.

அமெரிக்காவிலுள்ள பல நிறுவனங்கள் குளோனிங் மன்றங்களை ஆரம்பித்துள்ளன.

இதேநேரம் ஐரோப்பிய நாடுகளில் பெரும்பான்மையாகக் காணப்படும் தன்னினச் சேர்க்கை உறவு காரணமாகக் குழந்தைகள் இல்லாது இருப்பவர்களுக்கு இவ்விதமான குளோனிங் குழந்தைகள் ஒரு பாக்கியமாகும் என்றும் இதன் மூலம் இவ்வாறான உறவுகளைக் கொண்டிருப்பவர்கள் தங்களுக்குக் குழந்தைகள் இருப்பதாகக் காட்டிக்கொள்ள இயலும் என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது.


எனினும் இதன்போது பயன்படுத்தப்படுகின்ற மரபணுக்கள் வேற்று நபர்களுடையது என்பதால் இந்தக் குழந்தைகளால் தங்களது நிஜமான பெற்றோர்களைக் கண்டுபிடிக்க இயலாத ஒரு நிலை ஏற்படக்கூடும்.

இதே நேரம் நாளொன்றுக்கு இலட்சக்கணக்கில் கருக்கலைப்புச் செய்யப்படுகின்ற இந்த உலகில் குளோனிங் குழந்தைகளை உருவாக்குவது நியாயமான ஒரு விடயமாகும் எனும் கருத்தும் ஒரு சாராரால் முன் வைக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இந்த அபூர்வமான தொழில்நுட்பம் காரணமாக உலகின் பெரும்பாலானவர்கள் அச்சம் கொண்டுள்ளனர். குழந்தைகளின் விற்பனைச் சந்தையானது மிருகங்களின் விற்பனைச் சந்தை அளவுக்கு மலிந்துவிடக் கூடும் என்பது இவர்களது கருத்தாக உள்ளது.

-பாருக்

**உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை சில அநுபவங்களிலிருந்து கூறும் கட்டுரைத் தொடர்....**




### ஒற்றர்களும் படையெடுப்பும்

ஹன்னிபால், செங்கிஸ்கான், அலெக்ஸாண்டர் ஆகிய மிகப் பெரிய தளபதிகள் வாகன வசதிகளும் முறையான சாலை அமைப்புகளும் இல்லாத அந்தக் காலத்திலேயே பல்லாயிரம் மைல்கள் படையெடுத்துச் சென்று பெரும் நிலப்பரப்புகளை வெற்றி கொண்டார்கள் என்றால், அந்த அதிசயங்களை அவர்களால் எப்படி நிகழ்த்த முடிந்தது என்பது ஒரு சுவையான சமாச்சாரம்.

ஐரோப்பாவில் உயரமான சிகரங்களைக் கொண்டது ஆல்ப்ஸ் மலைத் தொடர். இந்த மலைகளைத் தாண்டி கி.மு. 25இல் ஹன்னிபால் தன் படைகளை நடத்திச் சென்றான் என்பது வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தக்க சம்பவம். அந்தப் படையெடுப்பில் ஹன்னிபால் மகத்தான வெற்றியும் பெற்றான்.

படையெடுப்புக்கு முன் பல வருடங்கள் அதற்காக அவன் தன்னைத் தயார் படுத்திக்கொண்டான் என்பது குறிப்பிடத் தக்கது.

படையெடுப்பதற்கு முன்னதாக ஆல்ப்ஸ் பிராந்தியத்தில் வாழ்ந்த மலை ஜாதி மக்களோடு நெருக்கமான தொடர்பை அவன் ஏற்படுத்திக கொண்டான். அவர்களுக்கு ஏராளமான வெகுமதியைத் தாராளமாக வழங்கினான். நிதி உதவிகளை நிறையச் செய்தான். அதற்குப் பிரதிபலனாக மலை ஜாதி மக்கள் அந்தப் பிராந்தியம் பற்றிய சகல தகவல்களையும் அவனுக்குக் கொடுத்து உதவினார்கள். சிரமமில்லாமல் கடந்து செல்லக்கூடிய மலைப் பாதைகள் எங்கெங்கே அமைந்திருக்கின்றன என்றும் அவனுக்குச் சொல்லி கொடுத்தார்கள்.

அவன் படையெடுக்க விரும்பிய ரோமாபுரி பற்றி எல்லாத் தகவல்களையும் ஒற்றர்களை அனுப்பி முன்கூட்டியே சேகரித்துக்கொண்டான். அவனுடைய ஒற்றர்கள் ரோமாபுரி எங்கும் சுற்றி வந்து தேவையான தகவல்களை அவனுக்குத் தொடர்ந்து அனுப்பிக்கொண்டே இருந்தார்கள்.

ஹன்னிபால் படைபலத்தினால் மட்டும் வெற்றிகளைக் குவித்து விடவில்லை. திறமையான உளவாளிகளை அவன் வைத்திருந்தான். ஹன்னிபல் தன் படை வலிமை உளவாளிகளின் திறமையில் இருப்பதாக நம்பினான்.

செங்கிஸ் கானும் திறமையான உளவானிகளைத் தன்னிடம் வைத்திருந்தான். அவனுடைய உளவாளிகள் இரவு நேரங்களில் எதிரிகளின் ராணுவ முகாமுக்குள் மாறுவேடத்தில் நுழைந்து அங்குள்ள இராணுவ தளவாடங்கள் பற்றிய தகவல்களை எல்லாம் சேகரித்து விடுவார்கள். அற்தக் காலத்தில் இரவு நேரங்களில் போர் நடப்பதில்லை. பகலில் தான் நடக்கும். போர் நடைபெறாத இரவு நேரத்தை உளவாளிகள் பயன்படுத்திக்கொள்வது வழக்கம்.

பதின்மூன்று வரடங்களில் மூன்று கண்டங்களை வெற்றிக் கொண்ட மாவீரன் அலெக்ஸாண்டர். திறமையான உளவாளிகளை அவனும் வைத்திருந்தான்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# கௌரவமான தீர்வுக்கு அமைச்சர் டக்ளஸ் அழுத்தம்

## இந்திய விஜயத்தின் நோக்கம் இதுதான்.



*சென்ற வாரத் தொடர்ச்சி.....*

இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரங்களில் ஆழ்ந்த பரிச்சயமுடையவர் புதுடில்லிப் பத்திரிகையாளர் நரேஷ் சர்மா. 'இந்தியாவின் இலங்கைக் கொள்கை' பற்றிய அக்டோபர் முப்பதாம் திகதிய மாநாடு இரு அமர்வுகளாக நடைபெற்றது. 'பயங்கர வாதம் மொழி ரீதியானதா? அல்லது சமயம் சார்ந்ததா?' என்ற தலைப்பில் காலை அமர்வும், 'சர்வதேச அனுசரணைகளின் பரிமாணமும் எல்லைகளும்' என்ற தலைப்பில் மாலை அமர்வும் நடைபெற்றது. இக் கருத்தரங்குகளிலும் கலந்துரையாடல் களிலும் இம் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்த டாக்டர் சுப்பிரமணிய சுவாமி, எஸ்.சி.சந்திர ஹாசன் ஆகியோரோடு "ஹிந்து" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்.ராம், ராஜீவ் படுகொலை விசாரணைகளை நடத்திய இந்திய மத்திய புலனாய்வுத்துறையின் முன்னை நாள் பணிப்பாளர் ஆர்.கார்த்திகேயன், முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் சல்மான்ஹைதர், இந்தியாவின் முன்னாள் இலங்கை உயர் ஸ்தானிகர் என்.எஸ்.ஜா, புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதுவராலய அதிகாரியான திருமதி எலிசபெத் மனெக் உட்படப் பல புத்திஜீவிகளும் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இலங்கையிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார். இக் கருத்தரங்குககளிலும் கலந்துரையாடல்களிலும் ஆரோக்கியமான வாதப் பிரதிவாதங்கள் நடத்தனவென்கிறார் புதுடில்லி ஊடகவியலாளர் நரேஷ் சர்மா.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மக்னோலியா கருத்தரங்கில் ஆற்றிய உரை பின்வருமாறு அமைந்திருந்தது.

"இலங்கை இனப் பிரச்சினைக்கு இந்தியாவின் பங்களிப்பின் ஊடாகவே நீடித்த, உறுதியான தீர்வு காண முடியுமென்று இலங்கை மக்கள் - குறிப்பாக யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் - உறுதியாக நம்புகின்றனர். இந்தப் பிரச்சினையில் இந்தியா அவசியம் தலையிட வேண்டும். புலிகள் இயக்கம் உடனடியாகப் பேச்சுவார்த்தை மேசைக்கு மீளத் திரும்ப வேண்டும். அவ்வாறு பேச்சுவார்த்தைகளில் இணைந்துகொள்ளத் தவறினால், அது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாக அமையும். இலங்கை வரலாற்றிலேயே முதல் தடவையாக சகல பிரதான அரசியல் கட்சிகளும் அரசியல் தீர்வொன்றினைக் காண முன்வந்துள்ளன. கணிசமான அதிகாரப் பகிர்வு வழங்க அரசு முன்வந்துள்ளது. இந்த நிலையில் புலிகள் வரம்பு மீறிய இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை முன்வைத்துப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பது அர்த்தமற்றது. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு நீடித்த, நிலையான அரசியல் தீர்வு காணக் கிடைத்திருக்கும் இந்த அருமையான சந்தர்ப்பத்தைப் புலிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதில் இதுவரை புலிகள் இயக்கம் அக்கறை செலுத்தவில்லை. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை முன்வைத்துப் பேச்சுவார்த்தையை இழுத்தடிப்பதோடு மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைப் படுகொலை செய்தும் வருகிறது. யுத்த நிறுத்தம் அமுலிலுள்ள இந்த 32 மாத காலப் பகுதியில் அரசியல் படுகொலைகளை மேற்கொண்டு வருவதன் மூலம் வடக்கு, கிழக்கில் அரசியல் பன்மைத்துவம் மற்றும் ஜனநாயகக் கோட்பாடுகளைப் புலிகள் இயக்கம் அடக்கியொடுக்கி வருகிறது. புலிகள் கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு தமது முகவர்களாக நிறுத்திய தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்காகக் கள்ள வாக்குகளை அள்ளிப் போட்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தமது பிடியில் வைத்திருப்பதற்காகவே புலிகள் அப் பகுதிக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையொன்றினைக் கோருகின்றனர். வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபையைக் கோரவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு, கிழக்குக்கு சமஷ்டி அமைப்பு முறையிலான சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்றே அவர்கள் விரும்புகின்றனர். அவர்கள் கௌரவமான அரசியல் தீர்வையே விரும்புகின்றனர்."

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனதுரையில் குறிப்பிட்டார்.

அமைச்சரின் உரை, அவரது கட்சி முன்வைத்துள்ள, 'மத்தியில் கூட்டாட்சிப் மாநிலத்தில் சுயாட்சி', 'பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு' என்ற அவர்களின் தாரக மந்திரத்தை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிட்ட நரேஷ் சர்மா, தான் நூற்றுக்கு நூறு சதவீதம் அமைச்சரின் கருத்துக்களோடு உடன்படவில்லையென்ற போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குக் கௌரவமான தீர்வு காணும் எண்ணக் கருத்தோட்டம் அவரது உரையில் இழையோடியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது என்கிறார்.

"இம் மாநாட்டில் அமைச்சர் ஆற்றிய உரையையும் கலந்துரையாடல்களின்போது அவர் தெரிவித்த கருத்துக்களையும் அங்கு அவர் விநியோகித்த ஆவணங்களையும் வைத்துப் பார்க்கையில் என்னால் ஒரு முடிவுக்கு வர முடிகிறது" என்கிறார்.

நரேஷ் சர்மா, "வடக்கு - கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் கௌரவமான தீர்வுக்காக



மாற்றுப் பாதையொன்றினை ஏற்படுத்தும் நோக்கில் சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்ட டக்ளஸ் தேவானந்தா முனைவதாகவே எனக்குப் படுகிறது" என்கிறார்.

"நான்கு விடயங்கள் பற்றி அவர் கவனஞ் செலுத்தியிருக்கிறார்.

1. புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவக் கோட்பாடு.

2. அவர்களின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கை.

3. ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு - கிழக்குக்கு சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு

4. இவற்றுக்காக இந்தியாவின் உடனடியான பங்களிப்பைப் பெறுதல்.

அமைச்சர் அழுத்தம் கொடுத்திருக்கும் இந்த நான்கு அம்சங்களும் தேசிய மட்டத்தில் பேச்சுவார்த்தை இழுபறிப்படுவதை நிறுத்தி சம்பந்தப்பட்ட தரப்புகள் இறுதித் தீர்வுக்காகப் பங்களிப்பதை வலியுறுத்துகிறது. அதேநேரம் இலங்கை விவகாரத்தில் ஆக்கபூர்வமான சர்வதேச அழுத்தத்தையும் கோரி நிற்கிறது" என்கிறார் நரேஷ் சர்மா.

ஒரு பெரிய ஆவணக் கோவையுடன் அமைச்சர் இந்தியாவுக்குப் பறந்து வந்திருக்கிறார் என்கிறார் சர்மா. கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது வடக்கு - கிழக்கில் குறிப்பாக வடக்கில் - தமிழரசுக் கட்சி சார்பில் புலிகள் தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டதை ஆதாரங்களுடன் விளக்கும் ஆவணங்களை அமைச்சர் அங்கு விநியோகித்தார். ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழு, பொதுநலவாய நாடுகளின் அவதானிப்பாளர் குழு, தேர்தல் வன்செயலைக் கண்காணிக்கும் அமைப்பு ஆகியவற்றின் அறிக்கைகளை இங்கு அமைச்சர் சமர்ப்பித்திருக்கிறார்.

ஐரோப்பிய யூனியனின் தேர்தல் அவதானிப்புக் குழு தனது அறிக்கையில், பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

"இலங்கையில் அரசாங்கத்தை அமைப்பது யாரெனத் தீர்மானிப்பதற்கு வடக்கு, கிழக்குத் தேர்தல் முடிவுகள் முக்கிய அம்சமாக அமைந்திருக்குமெனில், இறுதித் தேர்தல் முடிவுகளின் சட்டபூர்வத் தன்மை பற்றிப் பல கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கும். வடக்கு, கிழக்கில் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியாதவை. ஜனநாயகத்துக்கு விரோதமானவை" என்று ஐரோப்பிய யூனியன் குறிப்பிட்டிருந்தது.

பொதுநலவாய அவதானிப்பாளர் குழுவின் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"வடக்கையும் ஓரளவுக்குக் கிழக்கையும் தவிர, ஏனைய பகுதிகளில் வாக்காளர்கள் தாம் சுயமாக விரும்பியவாறு வாக்களிக்கக்கூடிய சூழல் நிலவியதாக நாம் கருதுகிறோம். யாழ்ப்பாணப் பகுதியில் தேர்தல் வேலைகள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குச் சார்பாக மிக மோசமான முறையில் மேற்கொள்ளப்பட்டதை எமது அவதானிப்புக் குழு கண்டறிந்தது.

வடக்கில் ஒருவரே பல வாக்குகள் அளிப்பது, ஆள்மாறாட்டங்கள், 8வயதுக்குக் குறைந்தோர் வாக்களிப்பு, தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சி ஆதரவாளர்கள் மற்றும் வாக்காளர்கள் மிரட்டப்பட்டமை போன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன."

இலங்கையர்களைக் கொண்ட தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் குழு தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்திருந்தது.

"வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்திலும், கிழக்கில் சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை மாவட்டங்களிலுள்ள தேர்தல் பிரிவுகளிலும் வாக்களிப்பு இரத்துச் செய்யப்பட வேண்டுமென்று கருதுவதோடு, அவ்வாறு இப் பகுதிகளில் தேர்தலை இரத்துச் செய்து மீண்டும் தேர்தல் நடத்துமாறு தேர்தல் ஆணையாளரை வலியுறுத்துகிறோம்."

இவற்றை ஆதார ஆவணங்களாகக் காட்டிப் புலிகள் தமது முகவர்களாக நிறுத்தப்பட்ட தமிழரசுக் கட்சியினருக்கு எவ்வாறு கள்ள வாக்குகளைப் போட்டனரென்று அமைச்சர் விளக்கினார். தமிழரசுக் கட்சியின் எம்.பி.க்கள் 22 பேரும் தேர்தல் மோசடிகள் மூலமே தெரிவுசெய்யப்பட்டனர் என்பதையும், யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட ஈ.பி.டி.பி.யினரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியின் சுயேச்சைக் குழுவினரும் எதிர்நோக்கிய அச்சுறுத்தல், மிரட்டல் பற்றியும் அமைச்சர் எடுத்து விளக்கினார்.

புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவக் கொள்கை மற்றும் அவர்கள் முன்வைத்திருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையில் உள்ள பாதிப்பான அம்சங்கள் பற்றியும் யதார்த்தத்துக்கு முரணான தன்மை பற்றியும் இந்தியத் தலைவர்களுக்கு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா எடுத்து விளக்கினார். புலிகளின் கோட்பாடுகளும் செயற்பாடுகளும் அரசியல் பன்முகத்தன்மை, ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றுக் கெதிராக விளங்குகின்றன என்பதை அவர் ஆவணங்களுடனும் ஆதாரங்களுடனும் எடுத்து விளக்கினார்.

புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள், இலங்கையின் இறைமை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாட்டுக்கு எதிரானவை மட்டுமல்ல, ஆறு கோடி தமிழ் மக்களைக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டுப் பிரிவினைச் சக்திகளுக்கு உந்துதலாகவும் அமையலாம். இதன் மூலம் இந்தியாவின் பிரதேச ஒருமைப்பாட்டையும் சீரழிக்கும் முயற்சிகள் எடுக்கப்படலாம். எனவே, இலங்கை இனப் பிரச்சினையில் கௌரவமான தீர்வை வலியுறுத்தும் இந்தியாவின் பங்களிப்பு அவசியமானதே என்கிறார் நரேஷ் சர்மா.

யுத்த நிறுத்த காலத்தில் புலிகளால் கொல்லப்பட்ட, கொல்ல முயற்சிக்கப்பட்ட, கடத்தப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், முக்கியஸ்தர்களின் விபரங்கள டங்கிய பட்டியலையும் அமைச்சர் தேவானந்தா அங்கு பரவலாக விநியோகித்திருக்கிறார். தனது கட்சியினர் மட்டுமல்ல, புலிகளுக்கு எதிரான மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்கள் கொல்லப்பட்டமை பற்றியும் எடுத்துரைத்த அமைச்சர், புலிகள் தமது ஏகப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டைத் துப்பாக்கிகள் மூலம் நிலைநிறுத்த முனைகின்றார்களென்றும் விளக்கினார்.

மக்னோலிய மண்டப மாநாட்டில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையே. இவை மாற்றுப் பாதைக்கான ஒரு மைல் கல்லாகக் கூடக் கருதலாமென்கிறார் சர்மா.

இலங்கையின் இரு மொழிப் பிரிவுகளால் ஏற்பட்டிருக்கும் தற்போதைய பிரச்சினைக்கு, பயங்கரவாதத்துக்கு அல்லது இரு தரப்பிலுள்ள பயங்கரவாத சக்திகளுக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்கக் கூடியதாகவோ அல்லது ஆட்சியதிகார அந்தஸ்து வழங்கக் கூடியதாகவோ தீர்வு வழங்கப்படக் கூடாதென முதலாவதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது. புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்ற கருத்தோட்டத்தைக் கடுமையாகக் கண்டித்த இத் தீர்மானம், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இங்குள்ள சகல தரப்பினரின் நலன்களும் கவனத்திலெடுக்கப்பட வேண்டும். இதற்கான அழுத்தத்தைச் சர்வதேச சமூகம் செலுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டது. எவ்வகையான தீர்வு காணப்பட்டாலும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையை மறந்துவிடாது தீர்வு மேற்கொள்ளப்படுவதை இந்தியா உறுதிசெய்ய வேண்டும். ராஜீவ் கொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென்றும் அத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

சரியான பாதுகாப்புடன் கூடிய சமஷ்டி அரசியலமைப்பினூடாகவே இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு எவ்வித சவால்களுக்கும் அப்பால் புனிதமானதாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இத்தகைய தீர்வுக்கு உலகளாவிய ஆதரவும், இலங்கையில் சமாதானத்தை நேசிக்கும் ஜனநாயக சக்திகளின் உறுதுணையும் இருப்பதால், இலங்கை அரசு தேவையான பாராளுமன்ற ஆதரவை மிக விரைவாகவே பெற்று, தற்போதைய ஒற்றையாட்சி அரசியலமைப்பை மாற்றி, சமாதானம் நிலவும் இத் தருணத்தில் சமஷ்டி அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென்றும் இரண்டாவது தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இத்தகையதொரு சமஷ்டி அரசியலமைப்பினை அமுலாக்குவதற்குத் தேவையான - சமாதானம் நிலவுவதற்கான - சூழலையேற்படுத்த சர்வதேச சமூகமும் - குறிப்பாக இந்தியாவும் - இலங்கை அரசுக்கு உதவ வேண்டுமென்றும் இரண்டாவது தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இவ்வாறான அரசியல் யாப்பை அமுலாக்கிச் சமாதானத்தை ஏற்படுத்த எடுக்கப்படும் முயற்சியை முறியடிக்க முனையும் எந்த அமைப்போ அல்லது இயக்கமோ பயங்கரவாத அமைப்பாகக் கருதப்பட்டு, பயங்கரவாதம் சம்பந்தமான ஐ.நா.சட்ட திட்டங்களுக்கமைய சர்வதேச சமூகத்தினால் கையாளப்பட வேண்டும் என்றும் அத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

1983ஆம் ஆண்டு வன்செயல்களையடுத்துத் தமிழகத்துக்குத் தப்பிச் சென்ற இலங்கை அகதிகளைப் பற்றி மூன்றாவது தீர்மானம் கூறுகிறது. இலங்கை அகதிகள் தமது தாயகத்துக்குப் பாதுகாப்பாகத் திரும்புவதற்கான பாதுகாப்பான சூழலை இந்திய அரசு, அகதிகள் சமூகத்தோடு இணைந்து ஏற்படுத்த வேண்டுமென்று இந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டிருக்கிறது. தமது சொந்த மண்ணில் கௌரவமான பிரஜைகளாகக் குடியேறக்கூடிய பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தப்பட்டு புனர்வாழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் இத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸின் பின்னைய இந்திய விஜயம் ஒரு மாற்றுத் தீர்வுக்கு சர்வதேச அழுத்தத்தைக் கொடுப்பதற்கான அடித்தளத்தை இந்தியாவில் இட்டுள்ளதென்கிறார் நரேஷ் சர்மா. இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தப்பட்டவரையில் தமிழர் தரப்பில் இரு முகாம்கள் இருக்கின்றன. ஒன்று தம்மைத் தாமே ஏகப் பிரதிநிதிகளாக மகுடம் சூட்டிக்கொண்ட புலிகள். மற்றது பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்பதோடு ஜனநாயகத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற முகாம். கௌரவமான ஜனநாயகத் தீர்வைக் கோரும் இம் முகாமின் முக்கியஸ்தராகவும் முன்னோடியாகவும் அமைச்சர் டக்ளஸ் விளங்குகிறார். தீர்வு முயற்சிகளைத் தொடர்ந்தும் புலிகள் இழுத்தடிப்பார்களேயானால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவார்கள். மாற்றுப் பாதைக்குச் சார்பாகக் காற்று வீசப் போவது காலத்தின் கட்டாயமென்கிறார் சர்மா.


> "இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தப்பட்டவரையில் தமிழர் தரப்பில் இரு முகாம்கள் இருக்கின்றன. ஒன்று தம்மைத் தாமே ஏகப் பிரதிநிதிகளாக மகுடம்சூட்டிக்கொண்ட புலிகள். மற்றது பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்பதோடு ஜனநாயகத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற முகாம். கௌரவமான ஜனநாயகத் தீர்வைக் கோரும் இம் முகாமின் முக்கியஸ்தராகவும் முன்னோடியாகவும் அமைச்சர் டக்ளஸ் விளங்குகிறார். தீர்வு முயற்சிகளைத் தொடர்ந்தும் புலிகள் இழுத்தடிப்பார்களேயானால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவார்கள். மாற்றுப் பாதைக்குச் சார்பாகக் காற்று வீசப் போவது காலத்தின் கட்டாயமென்கிறார் சர்மா"



சக்திதருஞ் செய்கைநிலந் தனிலே - சீவ
சக்திவெறி கொண்டுகளித் தாடு.
ஓம், சக்திதனை யேசரணங் கொள்ளு - என்றும்
சாவினுக்கொ ரச்சமில்லை தள்ளு.

சுப்பிரமணிய பாரதியார்-



# பிராமணனை தோற்கடித்த வஞ்சகர்கள்!

மித்ரசர்மா என்றொரு பிராமணன் இருந்தான். ஒருநாள் அவன் பக்கத்துக் கிராமத்திலுள்ள ஒருவரைக் காணச் சென்றபொழுது அவனுக்கு ஓர் ஆடு தானமாகக் கிடைத்தது.

அந்த ஆட்டைத் தனது தோள்களில் சுமந்துகொண்டு மித்ரசா்மா தன் ஊருக்குத் திரும்பி வந்தான். அதை மூன்று வஞ்சகா்கள் பார்த்தனர்.


“இந்த ஆட்டை எப்படியாவது நாம் அபகரித்து விடவேண்டும். அது நமக்கு நல்ல உணவாகும். அதனால் நான் கூறுவதைக் கேளுங்கள்....” என்று முதல் வஞ்சகன் சொன்னான்.

அவா்கள் திட்டத்தின்படி, முதல் வஞ்சகன், பிராமணனுக்கு எதிரே எங்கோ செல்பவன் போல் வந்துகொண்டிருந்தான்.

அவன் மித்ரசா்மாவின் அருகில் வந்ததும், “பிராமணரே! என்ன இது நாயைத் தோள் மீது சுமந்துகொண்டு வருகிறீா்? இதைத் தொட்டால் தீட்டு என்று சாத்திரங்கள் சொல்வதை மறந்துவிட்டீரா?” என்று கேட்டான்.

“என்ன நாயா? உனக்கு என்ன கண்கள் குருடா? நான் தூக்கி வருவது நாய் அல்ல, ஆடு!” என்று மித்ரசா்மா உரத்த குரலில் பேசினாா்.

“கோபப் படாதீா்கள் பிராமணரே!” என்ற முதல் வஞ்சகன் தனது தோள்களைக் குலுக்கியபடியே அங்கிருந்து சென்றான். பிராமணனும் ஆட்டைச்



பாப்பா முரசு சிறுகதை

சுமந்தபடி நடக்கலானான். அவன் சில அடிகள்தான் நடந்திருப்பான். அப்போது இரண்டாவது வஞ்சகன் அவன் எதிரே வந்தான்.

“என்ன ஐயா! ஏன் இறந்த கன்றுக் குட்டியைத் தோளில் தூக்கிக்கொண்டு போகின்றீா்கள்?” என்று கேட்டான்.

“இறந்த கன்றுக் குட்டிக்கும், உயிருள்ள ஆட்டுக்கும் உனக்கு வித்தியாசம் தெரியாதா?” என்று பிராமணன் சினத்துடன் கேட்டான்.

“ஓகோ, நான்தான் தவறு செய்து விட்டேன்! நீங்கள் இறந்த கன்றுக் குட்டியையோ அல்லது உயிருள்ள கன்றுக் குட்டியையோ தூக்கிக்கொண்டு போங்கள்!” என்று கூறிவிட்டு இரண்டாம் வஞ்சகனும் அங்கிருந்து சென்றான்.

பிராமணன் மூன்றாவது வஞ்சகனை சிறிது தூரம் சென்றதும் சந்தித்தான்.

“பிராமணரே! ஏன் கழுதையைத் தோளில் சுமந்து கொண்டு செல்கிறீா்கள். மற்றவர்கள் உம்மைப் பார்த்துச் சிரிப்பதற்குள் அதைக் கீழே இறக்கிவிட்டு விடும்” என்று அவன் கூறினான்.


அதனால் எரிச்சலுற்ற பிராமணன் அந்த ஆட்டுக்குட்டியைத் தன் தோளிலிருந்து தூக்கிக் கீழே எறிந்தான்!

“இது ஓர் ஆடல்ல! இது ஒரு பூதமாக இருக்க வேண்டும். அதனால்தான் பல்வேறு வடிவங்கள் எடுக்கின்றது!” என்று நினைத்து அங்கிருந்து விரைந்து ஓடி விட்டான்.

அதைக்கண்டு அந்த மூன்று வஞ்சகா்களும் நகைத்தனா். பிறகு அவா்கள் அந்த ஆட்டுக் குட்டியைக் கொன்று வயிறார சமைத்துச் சாப்பிட்டனா்.

தந்திரத்தால் புத்திசாலியைக் கூடத் தோற்கடிக்க முடியும் என்பதற்கு வேறு சான்று வேண்டுமா?

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வா்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வா்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.12.2004.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 573
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 571

பரிசுக்குரியவர்:
ந. செல்வகுமார், ஸ்ரீமுருகன் கோவில் வீதி, களுதாவளை-04, களுவாஞ்சிக்குடி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம்.எச். அமானி, கஹட்டபிட்டியா முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | இ. அன்வர், ஆண்டு 6, மாங்குளம், நேரியகுளம். |
| டி. எம். தர்ஷனி, 4/12, பாடசாலை அவனியூ, கொச்சிக்கடை. | அருட்செல்வம் பிரியந்தி, ஞானசேகரம் முன்பள்ளி, திருகோணமலை. |
| எஸ். அனுஷா காயத்திரி, 39, புகையிரத நிலைய வீதி, கொட்டகலை. | மு. சிந்துஜன், இல 08, மட்/புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. |
| மோகனசிங்கம் மதுஷிக்கா, பிரதான வீதி, பெரிய நீலாவணை-01, கல்முனை. | எம்.எம்.ஜெ. யாசினி, 95 முதலாம் மாடி, புதிய பஸ் நிலையம், வவுனியா. |
| எம். எச். மொஹமட் பர்ஹாத், ஆயிஷா பாடசாலை, ஏறாவூர். | எஸ். திவ்யா, கண்டி வீதி, வவுனியா. |

# ஆத்திசூடி


## ஐயம் இட்டு உண்!

நீ பிச்சை கேட்ட வருபவர்களுக்குப் பசியாற உணவு அளித்து அதன் பின் நீ உணவு உட்கொள்.

-ஔவையார்

நிரஞ்சலா, கண்டி.

# கட்டியவர்கள் யார்?



தாஜ்மஹாலைக் கட்டியவர்
யார்? யார்? யார்?

சக்ரவர்த்தி ஷாஜகானாம்
கேள், கேள், கேள்.

தஞ்சைக்கோயில் கட்டியவர்
யார்? யார்? யார்?

தரணிபோற்றும் ராஜராஜன்
கேள், கேள், கேள்.

கல்லணையைக் கட்டியவர்
யார்? யார்? யார்?

கரிகால மன்னவனாம்
கேள், கேள், கேள்.


மிதுப்பினாரைக் கட்டியவர்
யார்? யார்? யார்?

குத்புதீனாம் அடிமை மன்னன்
கேள், கேள், கேள்.

முழங்காலைக் கட்டியவன்
யார்? யார்? யார்?

முனியன் எனும் சோம்பேறி
கேள், கேள், கேள்!

# அதிசய உலகம்



டாங்குகள் 1915 பிரிட்டிஷாரால் முதலில் செய்யப்பட்டன. இதை எதிரிகள் தெரிந்து கொண்டு விடக்கூடாதே என்பதற்காக, சகாரா பாலைவனத்திலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளுக்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்காகக் கட்டப்பட்ட வண்டி என்று சொல்லும்படி இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்படி 'டாங்க்' என்ற பெயரில் அதனையழைத்தனர். நாளடைவில் அந்தப் பெயரே நிலைத்து விட்டது.

## மான் கொம்பு சண்டை!



ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் ஒரு வீர விளையாட்டு நடத்தப்பட்டு வருகிறது. இந்த வீர விளையாட்டில் மான் கொம்புகளை கையில் வைத்துக் கொண்டு இரண்டு வீரர்கள் களத்தில் இறங்குவார்கள். சண்டையின்போது பலர் இறந்து விடவும், காயங்கள் படவும் சந்தர்ப்பம் உண்டு. இருந்தாலும் ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் பெரும்பாலும் இந்த வீர விளையாட்டில் கலந்து கொள்வதை கௌரவமாக நினைக்கிறார்கள். அதே போல் இந்த நாட்டு மக்களுக்கும் இந்த வீர விளையாட்டைக் கண்டு களிப்பதில் ஆர்வம் அதிகம். அட....நம்ம ஊரு ஜல்லிக்கட்டு மாதிரிதான்!

## இப்படியும் ஒரு திருமணம்!

எஸ்கிமோ வகுப்பினர் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் மிக வேடிக்கையாக இருக்கும். திருமணம் ஆகப்பெற எஸ்கிமோ சிறுவன், திருமணம் ஆகாத எஸ்கிமோ பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினால், மணப்பெண் இருக்கும் வீட்டிற்குப் போய், அந்த மணப்பெண்ணின் தலைமயிரைப் பிடித்து வலுக்கட்டாயமாக தன்னுடைய வீட்டிற்கு இழுத்துக் கொண்டு செல்லுவான். அதன் பிறகு பெரியவர்கள் கூடி இருவருக்கும் திருமணம் செய்து வைப்பார்கள்.

# உங்கள் பொது அறிவு எப்படி?


1. காக்கைகளில் கூடு கட்டுவது ஆணா, பெண்ணா?
பெண்.
2. நாய்க்கு எத்தனை பற்கள்?
40.
3. பந்தயக் குதிரை ஒரு பாய்ச்சலில் எத்தனை அடிதூரம் பாயும்?
30 அடி.
4. சிலந்திக்கு எத்தனை கண்கள்?
எட்டு.
5. மாடப்புறா ஒரு தடவையில் எத்தனை முட்டையிடும்?
இரண்டு.
6. முதலை ஏன் கடலில் வசிப்பதில்லை?
உப்பு நீராயிருப்பதால்.
7. இலங்கையின் தனிநபர் வருமானம் எவ்வளவு?
330 அமெரிக்க டொலர்கள்.
8. ஐ.டி.ஏ. என்பது யாது?
சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (International Development Association)
9. ஏ.டி.பி. என்றால் என்ன?
ஆசிய அபிவிருத்தி வங்கி (Asian Development Bank)
10. டபிள்யூ.எச்.ஓ. என்பது எதைக் குறிக்கிறது?
உலக சுகாதார தாபனம் (World Health Organisation)


# தகவல் பெட்டி


## ஆயிரம் சுப மங்களம்

## தலைபோகும் ஆசை

ஏஸ்கில் என்பவர் நோர்வே வாசியாவார். இவர் தலைபோகும் கடினமான காரியங்களைச் செய்வதில் மன்னர். அண்மையில் இந்த ஏஸ்கில் என்ற சூராதிசூரர் டென்மார்க் தலைநகர் கொப்பன்கேஹனில் அமைந்துள்ள ரிக்ஷன் ஸ்கன்டினேவியா என்ற ஹோட்டலின் உச்சியில் ஓர் ஓரத்தில் கைகளை ஊன்றி உடலை சம நிலைப்படுத்தி கொண்டு தலைகீழாக நிற்கும் காட்சியே இது.









சீனா தனது தேசிய தினத்தையொட்டி உண்மையான சுபகாரியம் ஒன்றைச் செய்ய வேண்டும் எனும் நோக்கில் ஆயிரம் ஜோடிகளுக்கு ஒரே மேடையில் வைத்து திருமணம் நடத்தும் ஏற்பாடு செய்தது. பீஜிங் நகரில் நடைபெற்ற திருமணத்தில் கலந்துகொண்ட 1000 ஜோடிகளையும் அதன் பின்னர் அவர்களைத் தேன்நிலவுக்கு அழைத்துச் சென்ற 1000 கார்களின் ஊர்வலத்தையும் படங்களில் காண்கிறீர்கள்.

## புயல் காற்று


இங்கிலாந்து டேவோனில் டோலிப் என்ற புகையிரத நிலையம் கடற் கரையோரமாக அமைந்துள்ளது. இக் காலத்தில் அப் பிரதேசத்தில் மழை முகில்கள் சூழ்ந்த மப்பும் மந்தாரமுமான காலநிலையே காணப்படுகிறது. புகையிரதத்தையும் தாண்டி கடல் அலைகள் கரையை நோக்கிப் பாயும் காட்சியே இது.




## பார்க்க மட்டும்!


தென்னாபிரிக்காவின் தலைநகர் கேப் டவுனில் அமைந்துள்ள False Bay என்ற கடற் பிரதேசத்தில் நீரை இரண்டாகக் கிழித்துக்கொண்டு தோற்றமளித்த பாரிய சுறாவே இது.

வெள்ளைச் சுறா White Sharke என்று அழைக்கப்படும் இந்தச் சுறாக்கள் பிணம் தின்னும் சுறாக்களாகவே கருதப்படுகிறது. கடந்த 15ஆம் திகதி இந்த வகை சுறா ஒன்று டையினா வேப் என்ற கடலில் நீந்திக்கொண்டிருந்த பெண்ணைக் கொன்று புசித்த செய்தி ஒன்று இணையத்தளம் ஊடாக உலகெங்கும் பரவியது. மேலும் அக் கடற்கரையில் இருந்து 15க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இக் கோரக் காட்சியைக் கண்ணால் கண்ட சாட்சிகளாக இருக்கிறார்கள் என்றும் தகவல்கள் கூறுகின்றன.



## பிணம் தின்னும் ஆசை





# சினி விசிட்



நமீதா

## கரகாட்டக்காரி

ஏற்கெனவே சூப்பர் டூப்பராக வெற்றிபெற்ற 'கரகாட்டக்காரன்' போல் 'கரகாட்டக்காரி' என்கிற படத்தை இயக்கி வருகிறார்கள்.

இந்தப் படத்தில் முதலில் குஷ்புதான் கரகாட்டக்காரியாக நடிக்க இருந்தார். அவர் சீரியலில் பிசியாக இருப்பதால் கால்ஷீட் கிடைக்கவில்லை. மீனாவைத் தேடிப் போனார்கள். மீனாவும் கண்ணம்மாவில் பிசி. அதனால் ரோஜா நடித்து வருகிறார் கரகாட்டக்காரியாக.

## மும்தாஜ் புராணம்!

ஒரு விழாவுக்கு வந்திருந்த மும்தாஜை சந்தித்துப் பேசுகிற பாக்கியம் நமக்குக் கிடைத்தது.

***கேள்வி :-*** ஒரு காலத்தில் திரும்பின பக்கமெல்லாம் மும்தாஜாக இருந்தது. இடையில் ரொம்ப சைலண்டாக இருந்தது. என்ன விஷயம்?

***பதில் :-*** 'ரிவால்வர் ரீட்டா', 'கன் பைட் காஞ்சனா' ரேஞ்சில் கதைகளைச் சொல்லி என்னை அடிதடி நாயகியாக்கப் பார்த்தார்கள். எனக்கு இதெல்லாம் பிடிக்கவேயில்லை. அதனால்தான் எந்தப் படங்களையும் ஒப்புக்கொள்ளாமல் இருந்தேன். காசுக்காக நடிப்பதாக இருந்தால் நான் இந் நேரம் பொம்பள டாடாவாகக் கூட ஆகியிருக்கலாம். எனக்கு அதில் உடன்பாடில்லை. இரசிகர்கள் என்னை மறக்காமல் இருக்கணும்.

***கேள்வி :-*** முன்பெல்லாம் கேரக்டர் கலந்த கிளாமர்பண்ணி வந்தீர்கள். இப்போது 'ஏய்' படத்தில் ஒரு பாடலுக்கு ஆட ஆரம்பித்திருக்கிறீர்களே?

***பதில் :-*** என்னை பட்டி தொட்டிகள் எல்லாம் கொண்டு போய் சேர்த்த பாட்டு "மலமல மருதமல..." 'சாக்லெட்' படத்தை இயக்கிய வெங்கடேஷ் 'ஏய்'...படத்தில் ஒரு பாட்டுக்கு ஆடக் கூப்பிட்டதால் நன்றிக்கடனாக அந்தப் படத்தில் ஆடினேன்.

***கேள்வி :-*** உங்களுக்கு ஆசைதான் என்ன?

***பதில் :-*** வில்லியாக நடித்து தூள் கிளப்பணும். படம் எடுக்க நீங்க தயாரா?

***கேள்வி :-*** உடம்பு மெலிந்த இரகசியம் என்ன? யார் அந்த ஷாஜகான்?


கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்? டி.ஆரோட 'வீராசாமி'யில் அவருக்கு ஜோடியா நான் நடிக்கிறேன். அந்தக் கேரக்டருக்கு ஏற்ற மாதிரி என் உடம்பை மெலிதாக்கணும்னு டி.ஆர்.சொன்னார். யாராரோ சொன்னப்ப உடம்பைக் குறைக்கிற அக்கற எனக்கு வரல. ஆனால், டி.ஆர்.சொன்னக்க மறுக்க முடியல. உடம்பக் குறைச்சிட்டேன். குருநாதர் பேச்சைத்தட்ட முடியுமா? மத்தபடி கல்யாணமெல்லாம் இப்போதைக்குக் கிடையாது. என்னோட ஷாஜகான் யாருன்னு ஆண்டவனைத் தவிர இப்போதைக்கு எனக்கும் தெரியாது.



## இளையராஜாவின் இசைப் பயணம்

சிம்பொனி சாதனை பண்ணிய ராஜா, இப்போது திருவாசகத்தை ஆல்பமாகப் பதிவு செய்துகொண்டிருக்கிறார். இந்த நிலையில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசினார் ராஜா :-

"நான் மேடைக் கச்சேரிகள் பண்ணமாட்டேன். மேடையில் எனது பாடல்களை நான் திரும்பப் பாடுவதை விட எனது பாடல்கள் அடங்கிய கேசட்டைப் போட்டுக் கேட்கலாமே. நான் ஏற்கெனவே பாடிய பாடல்களை ஏன் பாடவேண்டும். அதனால் மேடைக் கச்சேரிகளில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால், துபாயைச் சேர்ந்த ட்ரீம் மேக்கர்ஸ் ஈவன் நிறுவன ராஜ் அவர்கள் என்னைச் சந்தித்து, உலகம் முழுக்க லைவ் ஷோ பண்ண வேண்டும் என்று கேட்டார். கண் பார்வையற்ற உடல் ஊனமுற்றவர்கள், முதியோர்களின் நலனுக்காக நிதி திரட்டும் பொருட்டு இந்த லைவ் ஷோ திட்டம் என அவர் சொன்னதால் அதில் ஒரு நல்ல நோக்கம் இருந்ததால் நிகழ்ச்சியை நடத்த சம்மதித்தேன். சென்னை, மலேசியா, துபாய், சிங்கப்பூர் லண்டன் உட்பட ஆறு நாடுகளில் வரும் பெப்ரவரி மாதம் இந்த இசை நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது. இதற்காக 100 பேர் அடங்கிய ஆர்கெஸ்ட்ராவுடன் செல்கிறேன். எனக்காக ஏங்கிக்கொண்டிருக்கிற, உயிரையும் தர நினைக்கிற உலகத் தமிழ் இரசிகர்களை சந்திக்கிற ஒரு அரிய வாய்ப்பாகவும் இந்த லைவ் ஷோவைச் கருதுகிறேன்" என்கிறார் இளையராஜா.



படம் : சத்ரபதி
சரத்குமார் – நிகிதா

## காதல் செய்ய விரும்பு

'காதல் செய்ய விரும்பு' படம் பெரிய பரபரப்பை ஏன், கிளுகிளுப்பையும் கூட உண்டு பண்ணும்போல் தெரிகிறது. ஒரு பிரபல பத்திரிகையில் இந்தியப் பெண்களின் அந்தரங்கங்களைப் பற்றி ஒரு சர்வே வெளியிட்டிருந்தார்கள். அதில் திருமணத்திற்கு முன் உங்கள் துணைவரை என்னவெல்லாம் செய்ய அனுமதிப்பீர்கள் என்ற கேள்விக்கு, 50 சதவீதப் பெண்கள் சொல்ல முடியாது, தெரியவில்லை என்றெல்லாம் சொல்லியிருந்தனர். அந்தப் பெண்களுக்கு இந்தப் படத்தில் ஒரு பதிலை வைத்திருக்கிறார்களாம். இதுதான் 'காதல் செய்ய விரும்பு' படத்தின் கதையாம்.

"என்ன இப்படியொரு வில்லங்கமாய் இருக்கே?" என ஏரியாவில் விசாரித்தால் "இதென்ன வில்லங்கம்". இதைவிட பெரிய வில்லங்கம் இருக்கு என்றார்கள்.

இந்தப் படத்தில் கல்லூரி மாணவியின் விபசாரக் காட்சி ஒன்றின் மூலம் அரசாங்கங்களுக்கு ஒரு அழுத்தமான கோரிக்கை ஒன்றை வைத்துள்ளார்களாம்.

"அதுமட்டும்தானா வில்லங்கம்?", "அதுக்குமேலும் ஒரு வில்லங்கம் இருக்கிறது."

அது என்ன வில்லங்கம்?

"யூஸ் பண்ணுடா...என்னை யூஸ் பண்ணுடா....யோசிக்காம என்னைக் கொஞ்சம் பியூஸ் பண்ணுடா...லவ் பண்ணுடா...லவ் பண்ணுடா...ஜாலியான ஐஸ்கிரீம் லவ் பண்ணுடா..."என்று ஏடாகூடமாய் ஒரு பாடலும் இருக்கிறது. இந்தப் பாடலுக்கு நாயகி அஸ்விதவும், நாயகன் எஸ்.ஏ.சந்தோஷும் ஆடியன்ஸுக்கு ஜுரம் வருகிற அளவுக்கு ஆட்டம் போட்டிருக்கிறார்களாம்.

"என்ன இவ்வளவு கேவலமாக வார்த்தைகள் இருக்கிறதே?" என்று யூஸ் பண்ணுடா பாடலை பாட மறுத்துவிட்டாராம் பின்னணிப் பாடகி பாப் ஷாலினி. அதன்பிறகு டைரக்டர் பார்கவன் ஷாலினியைத் தொடர்புகொண்டு 'இப்படியெல்லாம் அலைஞ்சான் கேஸாகப் பாடிக்கொண்டு அலைகிற ஒரு பெண், அதன் பிறகு எப்படி மாறுகிறாள், என்ன பிரச்சினைகளைச் சந்திக்கிறாள் என்று சொல்கிறோம். ஒரு நல்லவிஷயத்தைச் சொல்வதற்காக, இப்படியொரு மோசமான விசயத்தை முதலில் சொல்லி இறுதியில் நல்லது சொல்கிறோம். அதற்காகத்தான் இந்தப் பாடல்' என கதையை விளக்கிச் சொன்ன பிறகு, கதைக்கு ரொம்ப முக்கியமான பாட்டுத்தான் எனப் பாடச் சம்மதித்தாராம் ஷாலினி.

ரொம்ப முக்கியமான பாட்டுத்தான் போலிருக்கு.


ஆட்டோகிராப் மல்லிகா பத்தாம் வகுப்புத் தேர்வு எழுத கேரளா சென்றிருக்கிறார்.

அலிபாபாவும் 40 திருடர்களும் எம்.ஜி.ஆர்., உத்தம புத்திரன் சிவாஜி போன்ற கெட்டப்களில் கோமதிநாயகம் படத்தில் கலக்குகிறார் பொன்வண்ணன்.

கொடூரமான வில்லனாக நடிக்க வேண்டும் என ஆசைப்படுகிறார் காமெடி நடிகர் சார்லி.



## முகப்பில் த்ரிஷா



படம் : என் கண்ணில் என் விழுந்தாய்
ஷான் – தேஜாஸ்ரீ

# விவகாரம்

நாகர்கோவில் இளம் பெண் சுஜிபாலா. 'கிச்சா வயசு 16', 'நினைவெல்லாம் நீயே' என நாலைந்து படங்களில் இரண்டாம் நாயகி! சமீபத்தில் 'நினைவெல்லாம் நீயே' படப்பிடிப்பிற்கு திருச்சி அருகே துறையூர் போயிருந்தனர். நாயகனும் நடிகை ஷெரீனின் மாஜி காதலனுமான ரோஹன் சுஜிபாலாவை டேட்டிங் போகக் கூப்பிட்டிருக்கிறார். அம்மணி மசியவில்லை. நாயகியான மேற்கு வங்காளப் பெண் ப்ரீத்தியைக் கூப்பிட...உடனே 'சரி' சொல்லிவிட்டார். திருச்சியில் ஒரு ஹோட்டலில் ரூம் போட்டு உய்யலாலா பண்ணிவிட்டனர்!

இங்கே படப்பிடிப்புக் குழுவினர் நாயகன், நாயகியைத் தேடி மண்டைக் காய்ந்துவிட்டனர். மறுநாள் வந்து சேர்ந்தது ஜோடி. படத்திற்கு நாயகன் பைனான்ஸ் பண்ணுவதால் அவர் மீது கோபம் காட்ட முடியாத டைரக்டர் ரத்னராஜா, நாயகி ப்ரீத்தியை படத்திலிருந்து தூக்கிவிட்டார்.



ப்ரியங்கா ஷைலு

கேமராமேன் சபாபதி சத்யராஜை வைத்து ஒரு படத்தைத் தயாரிக்க முடிவெடுத்திருந்தார். இப்போது பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். படம் 'ஆசி'.

'அழகிய தீயே' பிரசன்னா சேரனுடைய சொந்தப் படம், ராதாமோகனின் அடுத்த படம் எனப் பிசியாக இருக்கிறார். அத்துடன் கலைப்புலி தாணு தயாரிக்கும் விஜய் படத்தில் ஒரு முக்கியமான கேரக்டரில் நடிக்கிறாராம்.

'சந்திரமுகி' படம் வந்தால் பிரபுவின் மார்க்கெட் மறுபடியுயும் சூடுபிடிக்கும் என்று நம்பி, அவர் நடித்து பாதியில் நிற்கும் 'ஆசை வச்சேன் உன்மேல', 'ஆயிரம் பொய்சொல்லி', ஆகிய படங்களை முடிக்கும் முடிவில் இருக்கிறார்கள்.

வினிதா 'துள்ளும் காலம்' படத்தை சொந்தமாகவே தயாரிக்கிறார். காரணம், படத்தின் நாயகன் வினிதாவின் தம்பி.. இந்தப் படத்தில் தன் தம்பிக்கு அக்காவாகவே நடிக்கிறார் வினிதா.

எஸ்.ஜே.சூர்யா 'பெஸ்ட் பிரண்ட்' (பி.எப்.) என வைத்திருந்த தலைப்பை 'பிரியமுள்ள தோழி' என்று மாற்றியுள்ளார். தொடர்ந்து 'இசை' என்கிற டைட்டிலையும் பதிவு செய்துள்ளார்.

இந்தியன் தியேட்டர்ஸுக்காக டூரிங் 'டாக்கீஸ்', பஞ்சு அருணாசலத்துக்காக 'பொக்கிஷம்', அன்புத்தோழி படத்தில் கெஸ்ட் ரோல், விஸ்வாஸ் சுந்தர் தயாரிப்பில் பாரதிராஜா இயக்கத்தில் ஒரு கிராமத்து சப்ஜெக்ட் என ரொம்பப் பிசியாக இருக்கிறார் சேரன்.

பாஸில், நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழில் ஒரு படத்தை இயக்க இருக்கிறார். இந்தப் படத்தில் பாஸிலின் மகனும் ஷாமும் சேர்ந்து நடிக்கிறார்கள். இதற்கான பாடல் கம்போசிங் சத்தமில்லாமல் நடந்திருக்கிறது. இசை வேறு யார்? இளையராஜாதான்.

கங்கை அமரன் இயக்கத்தில் இளையராஜா மீண்டும் படம் தயாரிக்கிறார். ஹீரோவாக நடிப்பது அனேகமாக தனுஷ்.

ஹாலிவுட் சூப்பர் ஸ்டார் தான் எடுத்து வரும் 'மித்' படத்திற்காக கர்நாடக மாநிலத்தில் ஹம்பியில் படப்பிடிப்பு நடத்தி வருகிறார். ஜாக்கிஜானை எப்படியாவது பார்த்துவிட, அருண்குமார், ஜெயம் ரவி, சிம்பு, சிபிராஜ், தனுஷ் ஆகியோர் ஒரு குரூப்பாகச் செல்லவிருக்கிறார்கள். ஹீரோக்களின் ஹீரோ ஜாக்கி போல.

'காசி' படத்தைத் தயாரித்த அரோமா மணிக்கு, ஷாஜிகைலாஷ் இயக்கத்தில் ஒரு படம் பண்ண இருக்கிறாராம் விக்ரம். அதோடு சொந்தப் படம் ஒன்று தயாரிக்கிற ஐடியாவிலும் இருக்கிறார். எது முதலில் என்பது 'அந்நிய'னுக்குப் பிறகே முடிவாகும்.

அரவிந்தசாமி, மாதுரி தீட்சித் ஆகியோரை வைத்து ஆறேழு வருடங்களுக்கு முன் 'இஞ்சினியர்' என்ற படத்தை மிகப் பிரம்மாண்டமாகத் தொடங்கினார் டைரக்டர் காந்தி கிருஷ்ணா. சில பிரச்சினைகளால் அந்தப் படம் நின்று போனது. இப்போது 'செல்லமே' மூலம், கமர்ஷியல் டைரக்டராகிவிட்ட காந்தி கிருஷ்ணா, 'எஞ்சினியர்' படத்தை மறுபடி தொடங்க இருக்கிறார்.

சரத்குமாரின் 'சத்ரபதி' படம் தீபாவளி ரிலீஸ் ஆனது. அதையடுத்து 'ஏய்', அதன் பிறகு பொங்கலுக்கு 'அய்யா', அதைத் தொடர்ந்து 'சாணக்யா'. அதன் பிறகு 'சாரதி' படத்தில் கெஸ்ட் ரோல். அதன் பிறகு அவரின் 100வது படம். யார் டைரக்‌ஷன் என்பதெல்லாம் தெரியாது. தயாரிப்பு திருமதி ராதிகா சரத்குமார்.

'சும்மா' என்கிற அடுத்த கவிதைத் தொகுப்பைத் தயார் செய்து வருகிறார் பார்த்திபன். 'கண்ணாடி பூக்கள்' படம் முடிந்ததும் 'பச்சைக் குதிரை' என்கிற படத்தையும் தயாரித்து, இயக்கி, நடிக்க உள்ளார்.



படம் : அந்த நாள் ஞாபகம்
ரமணா – ஸ்ரீதேவி

தமிழ் இரசிகர்களுக்கு மச்சம்தான். ஹேமலதா, பபிதா, ப்ரீதா ஸ்வீட்டி, பிரிசாத் என ஐந்து அழகிய பிகர்கள் 'மும்பை கேர்ள்ஸ்' படம் மூலம் ஹோலிவுட்டுக்கு வருகிறார்கள்.

தன்னுடைய சொந்தப் பேனரில் இயக்கத்தில் ஆனை, ஹென்றி புரொடக்‌ஷனுக்காக அஹிம்சை, திருவள்ளுவர் கலைக்கூடத்துக்கு வெங்கடேஷ் இயக்கத்தில் 'அறுவா', அப்புறம் 'மணிகண்டா'என அர்ஜுனின் கால்ஷீட் டைரி பிசியாகவே இருக்கிறது.

'குடைக்குள் மழை' மதுமிதா, தொடர்ந்து 'ஃபேர் அன் லவ்லி' படத்தில் ஜெய் ஆகாஷுக்கு ஜோடியாகவும், 'சாணக்யா' படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாகவும், எழில் இயக்கத்தில் 'அமுதமே' படத்திலும் நடித்து வருகிறார்.

பெருமாள் சாமி படத்தில் சத்யராஜோடு மீண்டும் கூட்டணி சேர்கிறார் கவுண்டமணி. கைதிகளைத் தூக்கில் போடும் வேடம் சத்யராஜுக்கு. கவுண்டமணிக்கு ஜெயில் வார்டன் வேடம்.

தெலுங்கு டைரக்டர் கிருஷ்ண வம்சியை டும்டும்டும் பண்ணிக்கொண்ட ரம்யா கிருஷ்ணன் இப்போது நாலு மாதக் கர்ப்பிணி.

ஆட்டோகிராப் கோபிகா செம பிசி. எம்.ஜி.ஆரின் அண்ணன் சக்கரபாணியின் பேரனும் எம்.ஜி.சுகுமாரின் மகனுமான இந்திரஜித்துடன் மலையாளப் படம் ஒன்றில் நடிக்கிறார். தொடர்ந்து ஸ்ரீகாந்த்துக்கு ஜோடியாக 'கனாக்கண்டேன்', சேரனுடன் 'டூரிங் டாக்கீஸ்', சிம்புவுடன் 'தொட்டி ஜெயா' போன்ற படங்களிலும் நடிக்கிறார்.




இளையராஜா ஊடகச் சந்திப்பில்

விஜய் டி.வி.யின் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிக்காக வந்திருந்தார் மாஜி நாயகி ரூபிணி. அவரை சரத்குமாரின் அக்காவாக நடிக்க 'சத்ரபதி' படத்துக்குக் கேட்டனர். அக்கா வேடம் என்பதால் மறுத்துவிட்டார்.

ரேவதி இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க இருக்க இருக்கிறார் மாதவன்.

இசையமைப்பாளர் இமான், 'கிஸ்....கிஸ்...கிஸ்மத்' எனும் இந்திப் படத்திற்கு இசையமைக்கப் போகிறார்.

'அது ஒரு கனாக்காலம்' முடிந்ததும் எழுத்தாளர் சுஜாதாவின் 'நகரம்' என்ற நாவலை டெலிபிலிமாக எடுக்கிறார் பாலுமகேந்திரா.

'வர்ணஜாலம்' படத்தை இயக்கிய நகுலன் பொன்னுசாமி அடுத்த படத்துக்கு ரெடி. அநேகமாக ஹீரோ கார்த்திக் எனத் தெரிகிறது.




## நினைவில் என்றும் நீ!

மௌனத்தினால் என்னுள்
குடியமர்ந்தவளே...
இன்று எங்கே சென்று
வாசம் வீசுகிறாய்?
காதலாய் தானே
என்னுடன் உறைந்தாய்.
இல்லை என்று இன்று
எங்கு சென்றாய்?
காதலின் சுகம்
இருவரும் பகிர்ந்தோம்.
காதலின் வலி ஏன்
எனக்கு மட்டும் தந்தாய்
உன்னை நினைக்க
கற்றுத் தந்தது நீதானே!
மறக்கக் கற்றுத்தராமல்
ஏன் சென்றுவிட்டாய்?
நினைத்ததை எல்லாம்
நீ மறந்துவிட்டாய்.
நீ மறந்ததையே இன்னும்
நான் நினைத்து
தவித்துக்கொண்டிருக்கிறேன்.

-ப.திபியா, சங்குவேலி.



## தீண்டல்கள்....!

கனவு
கவிதை
துக்கம்
கடற்கரை
விடியல்
குளிர் காற்று
நட்பு
உறவு
சிரிப்பு
டயரி
வேலைத்தளம்
விளையாட்டு
இரவுகள்
இடைக்காலப் பாடல்
மொட்டைமாடி
நிலவு
மழலைமொழி
கல்வி
பயணம்
சினிமா
சில விசேஷங்கள்...!

இப்படி
இன்னும் எத்தனையோ.....
எல்லாமே
வெறுத்துப் போனது;
நீ சிரித்துப் போனதால்!

—நஸீம் ரூமி, புத்தளம்.

## வேதவாக்கு

"குடி", குடியைக் கெடுக்குமென
கூறிடுவாள் அம்மா அடிக்கடி...!
அன்று அது காதில் ஏறவில்லை!
அம்மாவின் அறிவுரையை
அலட்சியம் செய்துவிட்டு
"ஆட்கொல்லி" மதுவோடு
ஐக்கியமானவன் நான்!!

இளமையின் இறுமாப்பில்....
ஈன்றவள் சொல் கேளாமல்
இரவு பகல் பாராது
இழந்தேன் எனை சாத்தானிடம்!

"பெருங்குடிகாரன் நீ" என்று
கொண்டவளே விரட்டி விட்டாள்!
கூடப் பிறந்தோரும் என்னை
கைகழுவி விட்டகன்றார்!
பெற்றெடுத்த பிள்ளைகளோ
பாராமுகம் காட்டி நின்றார்!

காலரத வேகத்திலே
கரைந்ததென் இளமையெல்லாம்!
முதுமையின் முற்றுகைக்குள்
முடமாகிப் போய்விட்டேன்!

நலிவுற்று நடை தளர்ந்து
நடைப்பிணமாயுருமாறி
வழி கெட்டு வீதியிலே
விடப்பட்டேன் தனிமையிலே!!

என் புலன்களெல்லாம்
செயலிழப்பினும்......
பெற்றவள் சொல்வாக்கு மட்டும்,
"தேவ வாக்காய்",
எதிரொலிக்கும்!!!

—யாழுமீர் மர்சூன், மொறட்டுவ.

## அலுத்துப்போயிற்று

என்ர குடிலுக்குப் போறதுக்கு
சின்ன ஒழுங்கைதான்
இப்பவும் இருக்கு;
பேரப்புள்ளயளும் கண்டிட்டன்.
இன்னமும் அத றோட்டாக்கிறாங்களில்ல.
சமுர்த்தி ஆக்களிட்ட சொல்லி
அலுத்துப்போயிற்று.
மற்றது இருட்டொழுங்கை.
கறண்டாச்சிலும் வந்தா
கொழுவியாச்சிலும் எடுப்பன்.
யாரெண்டாலும் உதவுங்கோ.
வயர் வெட்ட வரும்போது
அவங்கள நான் கவனிப்பன்.

—தயா, தம்பிலுவில்.

## அந்த ஒரு நொடிப் பொழுதில்

உடல் வியர்த்துப் போனது
உள்ளம் அதிர்ந்து போனது
உயிரே உனைக் கண்ட
அந்த ஒரு நொடிப்பொழுதில்....

இதயத்திற்குள்ளும் ஒரு
கடிகாரம் இயங்கிக்
கொண்டிருப்பதாய் ஒரு உணர்வு

அழகே உனைக் கண்டு
அகமகிழ்ந்ததில்
மௌனமாகிப் போனேன்
அந்த ஒரு நொடிப்பொழுதில்....

நம் அருகிலிருந்த அந்த
மலர்ச்செடிகளின் நுனிகளை
என்னையறியாமலே என்
கரங்களிரண்டும் மேய்ந்து
துப்பிக்கொண்டிருந்தன.

ஒரு நூற்றாண்டே வாழ்ந்ததாய்
ஒரு பிரமை உன்னருகிலிருந்த
அந்த ஒரு நொடிப்பொழுதில்.....

-இராமச்சந்திரன் தவேந்திரன், ஹாலி-எல.

## எதிர்பார்க்குது மனசு......

சோகங்களின் முற்றுகையால்
தூக்கத்தை
விவாகரத்து செய்துவிட்ட
விடியாத இரவு....

கவலையும் கண்ணீரும்
சிநேகமானதால்
என்னில் கோரம்....

நீ என்னை
தூக்கி எறிந்ததால்
ஊனமானது
என் உடலும் உள்ளமும்....

என்
இதய அறையில்
ஒளிந்திருந்து
எட்டிப் பார்க்குது
உன் முகம்....
அதனைத் துரத்தவோ
தூர விலக்கவோ
மறுக்குது
என் இதயம்....

நீ என்னை
வெட்டிவிட்ட போதும்
தூசென
தட்டி விட்ட போதும்....
என்றோ ஒரு நாள்
என்னைத்
தேடி வருவாய் என
எதிர்பார்க்குது
என் மனசு.....

—எம்.சி.எம்.நபீல், பள்ளிவாசல்துறை.

## வேண்டும் துணை!

எனக்கொரு துணைவன்
வேண்டும்
என் மனம் போலும் வேண்டும்.
கலை பல கற்றல் வேண்டும்
காவியம் படைக்க வேண்டும்
நிலையினில் உயர்தல் வேண்டும்
நீண்ட ஆயுளும் வேண்டும்
மனம் கவர் தோற்றம் வேண்டும்
அன்னை தந்திடல் வேண்டும் -
அதை
என் தம்பி ஆக வேண்டும் -
அவன்

-ஆரா தில்பர், மருதமுனை.

## தலையணை

படுக்கை விரிப்புகளுடனும்....
கட்டில்களோடும்...
ஒட்டி உறவாடி...
வாழ்வைக் கிழித்திடும்
வைராக்கியசாலி...

பலரது இரகசியங்களை...
அறிந்திருந்தும்....
மற்றவருக்குத்...
தெரியப்படுத்த முடியாத...
பிறவி ஊமை....

தனிமையில்...
பல கதைகள் கேட்டு...
காலம் முழுவதையும்...
கோமாவில் கழித்திடும்...
நோயற்ற நோயாளி...

எத்தனையோ கண்ணீர்க்
கதைகளைக் கேட்டும்
சிறிதளவேனும்...
அனுதாபம் காட்டிடாத
அஃறிணை...

மனைவியின்
மந்திரத்திற்கு...
மறுப்பேதுவும் காட்டாது...
கணவனைக் கைக்குள்..
போட உதவும் பஞ்சுப் பொதி...

கதலனுக்கு காதலி
காதலிக்கு காதலன்
இரவில் தூக்கத்தில்
புலம்பும் விடயங்களை
அறிந்திருக்கும்..
அனுபவசாலி...



—என்.சஹாப்தீன், பிறைந்துரையூர்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

"மனிதனுக்கு சிறகுகள் இல்லை என்ற குறையைத் தீர்க்கவே கவிதை. எல்லா மனிதரும் சகல மனிதரோடும் இரத்த சம்பந்தமான உறவை உண்டாக்கிக்கொள்ள முடியாததை ஈடுசெய்யவே கவிதை. ஆண், பெண் உட்படப் பிரபஞ்சப் பொருள் எதுவும் அழகாயில்லையென்று எல்லாம் தாண்டிய அழகிற்காக உண்டானது கவிதை. மழை காலம் முழுதும் குளித்தும், வசந்தம் முழுதும் தளிர்த்தும் பூத்தும் காய்த்தும் பூரிக்கும் ஒரு தாவரமாக வாழ முடியாத அபாக்கியத்தினின்றும் தப்பிக்க கவிதை. புல் முளைப்பதும் பூ பூப்பதும் புதுப் பொருள் காண்பதும் ஆச்சியங்களாய் விரிந்துகொண்டே தெரியும் குழந்தையாகவே வாழ்ந்து முடிக்கக் கவிதை."

நா.முத்துக்குமாரின் கவிதைகள் "பட்டாம்பூச்சி விற்பவன்", "நியூட்டனின் மூன்றாம் விதி" ஆகிய தொகுதிகளாக வந்திருக்கின்றன. திரைப் பாடலாசிரியராகவும் இன்று முன்னணியில் இருப்பவர்.

"வார்த்தைகளுக்கு இடைப்பட்ட மௌனத்தில் கண்ணுக்குத் தெரியாத அன்பை நெய்வதே என் கவிதைக் கொள்கை" என்று சொல்கிற நா.முத்துக்குமாரின் மூன்று கவிதைகள்.



### வெண்டைக்காயில் ஒளிந்தவர்கள்

எல்லா வீடுகளையும் போலவே
கிணற்றடித் தண்ணீரை
குடித்து வளரும்
தோட்டம் ஒன்றிருந்தது
எங்கள் வீட்டிலும்.

வதங்கிச் சுருண்டு
இலைகளில் தொங்கும்
செம்பருத்திப் பூக்கள் தவிர்த்து,
அம்மாவினுடையதும்
அக்காவினுடையதுமாக
விரல்களைக் கடன்வாங்கி
பச்சையாய் துளிர்க்கும்
வெண்டைக்காய்ச் செடிகள்
அத்தோட்டத்தின் தனித்தன்மை.

"மூளைக்கு நல்லது" என்று
மருத்துவ குணம் கூறி
அதன் காய்களில் ஒளிந்திருக்கும்
என் அல்ஜிப்ரா கணக்கிற்கான
விடைகளை நோக்கி
ஆற்றுப்படுத்துவாள் அம்மா.

மதிய உணவில்
பெரும்பான்மை வகிக்கும்
அதன் "கொழகொழ"த் தன்மை
வழக்கம் போல் பள்ளியில்
என் விரல்களில் பிசுபிசுத்து
வராத கணக்கைப் போல்
வழுக்கிக் கொண்டிருக்கும்.

முன்புக்கும் முன்பு
அதன் காம்புகள் கிள்ளி
கம்மல் போட்டுக் கொள்ளும்
அக்கா இப்போது,

வைரங்களை நோக்கி
விரியுமொரு கனவில்
"உங்களுக்கு வாக்கப்பட்டு
என்னத்தைக் கண்டேன்" என்று
அத்தானிடம் பொருமுகிறாள்.

கடன் முற்றித் தத்தளித்த சூழலில்
கியான் சந்த் அண்ட் சன்ஸுக்கு
கைநடுங்கி கையெழுத்திட்டு
வீட்டுடன் தோட்டமும்
விற்றார் அப்பா.

முன்வாசலில் தொங்கும்
குரோட்டன்ஸ் செடி கடந்து
பிஞ்சு வெண்டைகள் பொறுக்கி;
கூர்முனை ஒடித்து;
தள்ளு வண்டிக்காரனிடம்
பேரம் பேசுகையில்
இப்போது உணர்கிறேன்....

ஒவ்வொரு வெண்டைக்காயிலும்
ஒளிந்திருக்கிறார்கள்
மென்மையான
விரல் கொண்ட
ஒரு அம்மா;

கனவுகள் விரியும்
ஒரு அக்கா;

கைகள் நடுங்கும்
ஒரு தந்தை;

மற்றும்
கணக்குகள் துரத்தும்
ஒரு பையன்.

* * *

### செய்முறை

சாக்லேட் உறைகளில்
பொம்மைகள் செய்வது
மிகவும் எளிது.

சிற்சில மடிப்புகளுக்குப் பின்
மேற்பாகம் திருகி
கீழ்ப்பகுதியை விரித்தால்
பாவாடை விரிக்கும் சிறுமியோ
பரதமாடும் பெண்ணோ
புன்னகையுடன் புலனாவார்கள்.

நீள அகலங்களைப் பொறுத்து
குட்டி இளவரசி அல்லது
குண்டு கோகிலா என
பெயரிட்டுக் கொள்ளலாம்.

பெரும்பாலும்
பெண் பொம்மைகளாகவே
செய்ய முடிகிற
இத் தொழில் நுட்பத்தில்
இரண்டு நன்மைகள்.

ஒன்று
நாடகங்கள் தராத
பெண்ணுரிமையை
நாம் தருவதாகப் பறைசாற்றி
தொலைக்காட்சிப் பெட்டிகளின்
தலைமேல் வைக்கலாம்.
இரண்டு -
முந்தானையில் மூக்குறிஞ்சும்
அம்மாக்களைப் போலவோ
கண்கள் சிவந்து பிறந்த வீடேகும்
அக்காக்களைப் போலவோ;
"நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன்" என
பொம்மைகள் எப்போதும்
கண்ணீர் விடுவதில்லை.

* * *

### ஐந்து கட்டளைகள்

I

ஆறேழு வண்டுகளுடன்
அந்தியில் இறக்கிய
தென்னங் கள்ளை
நுரைக்க நுரைக்கக் குடித்துவிட்டு
வயற்காட்டுப் புழுதியில்
விழுந்து கிடக்கும்
அப்பன்களை எழுப்பும்
நகராட்சிப் பள்ளியில்
நான்காம் வகுப்புப் படிக்கும்
பிள்ளைகளுக்கு
சத்துணவு சாப்பாட்டின் மூலம்
தோள்வலிமை பெருகுவதாக.

II

நாயக்கர் தோட்டத்தில்
ஆடுகளைப் பத்தும்
ஆறுமுகத்திற்கு....
தொறட்டியில் தழைகளைப்
பறிக்கையில்
ஏடாகூடமாய் சிக்கிவிட்ட
கோவைஇலைக் கொடிகள்;
பால்யத்தில்
வாய்ப்பாடு எழுதிய சிலேட்டையும்,
அழுந்தத் துடைத்த
கோவையிலையின் பச்சைக்
கரையையும்
ஞாபகப்படுத்தாமல் இருப்பதாக.

III

மின்சாரம் கடத்தும்
இரும்புக் கூடுகள்
பட்டங்களைக் கடத்தாமல்
பறக்க விடுவதாக.

IV


போட்டியில்லாத பின்னிரவில்
பனங்காட்டுப் புதர்களில்
பனம்பழம் பொறுக்க வரும்
சிறுவர்களுக்கு முன்பாகவே
புணர்ந்து முடித்து
பாம்புகள்
பிரியக் கடவதாக.

V


சதா சண்டையிடும்
கணவன்களிடம் கோபித்து
பேருந்து நிற்காத அகாலத்தில்
கூட்டு ரோட்டில்
லாரிகளிடம் கெஞ்சி
மூட்டைகளுக்கிடையே அமர்ந்து
சத்தமில்லாமல் அழுதபடி
பிறந்த வீட்டுக்குப் பயணிக்கும்
அம்மாக்களின் குழந்தைகளுக்கு
எதிர்காலம்
பயமுறுத்தாமல் இருப்பதாக.

* * *


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : எம்.மன்சூர்
வயது : 22
முகவரி : கச்சகொடித்தீவு, கிண்ணியா — 05.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரிவி.



பெயர் : பி.பிரதீபன்
வயது : 22
முகவரி : இல. 92, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு : பத்தரிகை, ரிவி.



பெயர் : எம்.ரி.சமந்த குமார்
வயது : 18
முகவரி : இல. 27சி, கே.கே. வீதி, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர் : து.வசந்தன்
வயது : 25
முகவரி : வசாவிளான் தெற்கு, திடற்புலம், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு : பேனா நட்பு, பத்திரிகை.

# லேடீஸ் ஸ்பெஷல்

# கூந்தல் அலங்காரமும் பராமரிப்பும்

### உண்மையான அழகு!

ஒரு பெண்ணின் முகமும் உடலும் அழகாக இருந்தாலும், உண்மையான - இயற்கையான அழகைக் கொடுப்பதும் கூந்தல்தான். அழகான தோற்றத்திற்கு மேலும் வளர்ச்சியைத் தருவது அடர்ந்த அழகிய, கருகிய கூந்தல்தான்! இந்தக் கூந்தலைப் பெண்களில் பலர் பாதுகாத்துக்கொள்ளத் தெரிந்துகொள்வதில்லை! ஆண்களும் சரி, பெண்களும் சரி, கூந்தலைப் படிய வாரிவிட்டுக்கொள்ள வேண்டும்.

சில பெண்கள் - குறிப்பாக நகரங்களிலும், பட்டணங்களிலும் வாழும் பெண்கள் தலையைக் கண்டபடி வாரிவிட்டுக் கொள்கிறார்கள். சினிமா நடிகைகளைப் போல் கண்டபடி கலைத்து விட்டுக் கொள்ளும் பெண்களும் இருக்கிறார்கள். இப்படித் தலையை இலேசாக வாரிவிட்டபின் கலைத்து விட்டுக்கொள்வதால் அழகு அதிகமாகும் என்று எண்ணுவது தவறு. கலைந்த கூந்தலைவிடப் படிந்த அடக்கமான கூந்தல்தான் அழகு! கலைந்த கூந்தல் வெகு விரைவில் உதிர்ந்துவிடும். அழகாக இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு உண்மை அழகை எளிதில் இழக்கலாமா?

கூந்தலை எப்போதும் படியப் படிய வாரிவிடுவதுதான் மேலானது. திரையில் தோன்றுபவர்களுக்குக் கலைத்து விடப்பட்ட கூந்தல் அழகாக இருப்பதைப் போல் இருக்கும். ஆனால் நேரில் பார்க்கும் பொழுது அவர்களே அப்படி வாரி விட்டுக் கொள்வதில்லை. மேலும் பெண்கள் நேரில் பார்ப்பதைப் போல் அவர்கள் புகைப்படத்தில் இருப்பதில்லை. புகைப்படத்தில் நன்றாக இருப்பதைப் போல் நேரில் பார்க்கச் சகிப்பதில்லை! ஆகையால் சினிமாப் படங்களையும் புகைப்படங்களையும் கண்டு பெண்கள் கூந்தலை வாரிவிடும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

### எவ்வளவு எண்ணெய் போட வேண்டும்?

கூந்தலுக்கு எண்ணெய் போட வேண்டுமா, வேண்டாமா என்பது ஒரு பிரச்சினை. தினமும் எண்ணெய் போடுவதால் தலை பிசுபிசுத்துப் போகிறது. அழுக்குப் படிகிறது. கூந்தல் அளவுக்குமேல் படிவதால் அழகு குறைகிறது என்று பலர் எண்ணுகிறார்கள். வாரத்திற்கு ஒரு முறை எண்ணெய் தடவி தலை வாரும் பெண்களும் இருக்கிறார்கள். மற்ற நாட்களில் இவர்கள் எண்ணெய் தடவாமலேயே தினமும் சும்மா தலையை வாரி விட்டுக் கொள்கிறார்கள். கூந்தலுக்குத் தினமும் எண்ணெய் தடவ வேண்டும். தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் தடவுவது நல்லது. கண்ட வாசனை எண்ணெய்களை வாங்கி உபயோகிப்பது ஆபத்து. வாசனை எண்ணெய்களை பயன்படுத்துவதால் பணம் பாழாவதுடன் கூந்தலும் பாழாகி விடுகிறது?


எண்ணெய் தடவுவதாகச் சொல்லிக் கொண்டு சிலர் கூந்தலை அப்படியே எண்ணெயில் தோய்த்து எடுக்கிறார்கள். இது மிகவும் கேடானது. தினமும் எண்ணெய் தடவ வேண்டும். பொதுமான அளவுக்குத் தடவ வேண்டும். அளவுடன் தடவ வேண்டும். தினமும் கூந்தலில் மட்டும் எண்ணெய் பட்டால் போதாது. கூந்தலின் அடியில் தலையில் படும்படி எண்ணெய் தடவி நன்றாகத் தேய்க்க வேண்டும், விரல்களின் நுனியால்! •

### கூந்தலுக்கு உயிர் உண்டா?

புல் இல்லாத தரை அழகாக இருப்பதில்லை. இலை இல்லாத செடி அழகை இழந்து காணப்படுகிறது. இதைப் போலவே கூந்தல் இல்லாத பெண்களும் சா;ி ஆண்களும் சரி, அழகாக இருப்பதில்லை. அழகைக் கொடுக்கும் இந்தக் கூந்தலை எல்லோரும் பாதுகாக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நகங்களை நாம் அழகாக வெட்டி அளவுடன் வைத்துக்கொண்டு பாதுகாக்கவில்லையா? அதைப் போலவே கூந்தலையும் நாம் அழகுடன் வைத்துக் கொள்ள வேண்டும். நகங்களுக்கு எப்படி உயிர் இல்லையோ அப்படியே கூந்தலுக்கும் உயிர் இல்லை. நகங்களை வெட்டினால் வலி எடுப்பதில்லை. அதைப் போலவே கூந்தலைக் கத்தரித்தாலும் வலி எடுப்பதில்லை. கூந்தலில் நரம்புகளோ, இரத்தமோ இல்லை. அதனால்தான் வலி எடுப்பதில்லை.

ஆகையால் துன்பம் இல்லாமல் கூந்தலை அழகாக அளவுடன் வெட்டி அழகுபடுத்திக் கொள்ளலாம். மேல்நாட்டுப் பெண்களைப் போலவே நம் நாட்டுப் பெண்களில் பலர் இப்போது கிராப்பு வைத்துக்கொள்கிறார்கள். பாப் வைத்துக் கொள்ளும் முறை நம் நாட்டிற்கு ஏற்றதல்ல. பாப் வைத்துக்கொள்ளும் பெண்களும் மேல் நாட்டுப் பெண்களைப் போல் ஆடைகளை அணிந்தால்தான் அழகாக இருக்கும். ஆகையால் கூந்தலை வெட்டுவது என்பது ஆண்களுடன் நிற்க வேண்டும். பெண்களுக்கு கூந்தல் அடர்த்தி யாக



நீளமாக வளருவதுதான் அழகு!

கூந்தலின் அடியில் தலையில் புதைந்திருக்கும் பாகத்தில் - கூந்தலின் வேரில் உயிர் அணு இருக்கிறது. கூந்தலைப் பிடுங்கிவிட்டாலும் இந்த உயிருள்ள அணு அப்படியே இருப்பதால்தான் மீண்டும் கூந்தல் வளர்கிறது. இந்த அணுக்களில் இரத்தம் பரவவும் இந்த அணுக்களுக்குப் போதிய சத்துள்ள உணவு கிடைக்கவும் நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த அணுக்களில் இரத்த ஓட்டம் குறைந்தாலும் இரத்தம் பரவாவிட்டாலும் எவ்வளவுதான் எண்ணெய் தடவினாலும் எத்தனை தடவைதான் தலை வாரினாலும் கூந்தல் கொட்டிவிடும்.

விரலின் நுனிகளால் விடாமல் தலையைக் கோதி விடுவதுடன், சத்துள்ள உணவுகளையும் தினமும் சாப்பிட வேண்டும். இலங்கையிலுல் உள்ள பெண்களில் பெரும்பாலோருக்குக் கூந்தல் கொட்டுவதற்குக் காரணமே சத்துள்ள உணவு இல்லாததுதான்! வைட்டமின் சத்துக்களும், புரதப் பொருள்களும் நிறைந்த அளவில் உணவில் சேர வேண்டும். கோதுமை, பழங்கள், கீரை வகைகள் முதலியவைகளை அடிக்கடி சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### யாருக்கு கூந்தல் கொட்டுவதில்லை?

பொதுவாக மாமிசம் உண்பவர்களுக்குக் கூந்தல் எளிதில் கொட்டுவதில்லை. அதில் நிறையப் புரதப் பொருளும் வைட்டமின்களும் கிடைக்கின்றன. வெறும் காய்கறிகளைச் சாப்பிடுபவர்களுக்குப் போதிய அளவுக்கு வைட்டமின்கள் கிடைக்க பழங்களையும், பச்சைக் காய்கறிகளையும் நிறையச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### பிரஷினால் அடிக்கடி கோதிவிடக் கூடாது!

பிரஷினால் தலையைக் கோதிவிடுவது ஒரு நல்ல முறைதான்! பிரஷினால் தலையைக் கோதிவிடும்போது தலையில் உள்ள மயிர் அணுக்கள் தூண்டி விடப்பட்டு சுறுசுறுப்படைந்து நன்றாக இயங்குகின்றன. இரத்தம் மிகுதியாகப் பரவும். ஆனால் அடிக்கடி கண்டபோதெல்லாம் கூந்தலை பிரஷினால் அழுத்தி கோதிவிடக் கூடாது. அடிக்கடி இப்படிக் கோதிவிடுவதால் சிலருக்கு இதமாக இருக்கும். ஆனால் கூந்தல் பாழாகி அடியோடு கொட்டிவிடும். அளவுக்கு மேல் போனால் எல்லாமே விஷம்தானே?

நமது தலையில் இயற்கையாக ஓர் எண்ணெய்ப் பசை வழிகிறது. இந்த எண்ணெய்ப் பசை பரவ - தலை முழுவதும் பரவ - நாம் தினமும் ஒரு தடவை காலையில் மட்டும் உச்சந்தலையில் கை விரல்களால் தேய்த்து விட்டால் போதும். ஆனால் அடிக்கடி தேய்க்கக் கூடாது. பிரஷினாலும், அடிக்கடி வாரிவிடக் கூடாது. கைகளால் கோதிவிடவும் கூடாது.

### கூந்தலில் அழுக்குப் படியாமல் இருக்க......

கூந்தலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். கூந்தலில் அழுக்கு சேர்ந்தால் ஆரோக்கியத் தோற்றம் இருக்காது! அத்துடன் தொற்று நோய்க் கிருமிகளும் மிகச் சுலபமாய்த் தலையில் தொற்றிக்கொண்டு பொடுகை உண்டாக்கும்.

கூந்தலைச் சுத்தமாக வைத்துக் கொள்வதாகச் சொல்லிக்கொண்டு அடிக்கடி தலையில் தண்ணீரைக் கொட்டி கூந்தலைப் பாழாக்கக் கூடாது. அடிக்கடி கூந்தலில் தண்ணீரைக் கொட்டிக் கசக்கினால் கூந்தல் தனது உறுதியை இழந்துவிடுகிறது. வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தடவைகள் கூந்தலைச் சுத்தம் செய்தால் போதும். முடிந்த அளவுக்குக் கூந்தலில் அழுக்குச் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கோடைக் காலத்தில் வாரத்திற்கு இரண்டு தடவையும் குளிர் காலத்தில் வாரத்திற்கு ஒரு முறையும் தலைக்கு ஊற்றிக்கொண்டு கூந்தலைச் சுத்தம் செய்யலாம்.

---

# முதுகு வலி

பெண்கள் சாதாரணமாக அவஸ்தைப்படும் ஒரு நோய் முதுகுவலி. பிரசவத்தின்போதும், அதற்கு முன்பும் அவர்களுக்கு ஏற்படும் சிரமத்தின் விளைவாக அநேகம் பெண்களுக்கு முதுகுவலி ஏற்படுகிறது. பிராஜஸ்ட்ரோன் என்ற பெண்களுக்கு உரிய ஹார்மோன் முதுகில் உள்ள எலும்புக்கு வலு அளிக்கிறது. பெண்களுடைய கர்ப்பப்பை உறுப்புகளில் ஏற்படும் விளைவு எதுவானாலும் அது முதுகுவலியுடன் சேர்ந்து வருகிறது. பெண்களுக்கு அடிக்கடி ஏற்படும் சிறுநீர் தொற்றுநோய், முதுகிலும் முதுகின் பின் பகுதியிலும் வலியை உண்டு பண்ணுகிறது.

குழந்தைக்குப் பால் கொடுக்கும் போது உடம்பில் பெருமளவு கல்சியம் வெளிப்படுவதால்



கடுமையான முதுகு வலி ஏற்படக்கூடும். எப்போது முதுகுவலி தோன்றினாலும் உடனே டாக்டரிடம் போய் அது எதனால் ஏற்படுகிறது என்பதைத் தெரிந்துகொண்டு அதற்குரிய மருத்துவம் செய்துகொள்வது மிக அவசியம்.

அதனுடைய மூல காரணத்தைப் பொறுத்து வைத்தியம் வேறுபடும். ஆனால் வைத்தியத்தைத் தவிர சில முக்கியமான நடைமுறைகளையும் பெண்கள் அனுசரிக்க வேண்டியது மிகவும் அவசியம். சத்துள்ள உணவை உண்பதும், கெட்டியான படுக்கையில் படுப்பதும், முதுகை நேராக வைத்துக்கொள்வதற்கு ஏற்ற இடை ஆடைகள் அணிவதும், முதுகுத் தசைகளுக்கு ஏற்ப பயிற்சிகளைச் செய்வதும் பலன் தரும். கல்சியம், விட்டமின டி ஆகியவைகள் கொண்ட டானிக்குகளைச் சாப்பிடுவதும் உபயோகமாக இருக்கும்.

---

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருபவது -ஷோபா-*

## காலிபிளவர் மஞ்சூரி

*5-8 பேருக்குப் போதுமானது*

**தேவையான பொருட்கள் :-**

| | |
|---|---|
| காலி பிளவர் | - 1 பெரியது |
| பம்பாய் வெங்காயம் | - 2 |
| பச்சை மிளகாய் | - 5 |
| மஞ்சள் தூள் | - 1 தே.கரண்டி (மட்டமாக) |
| மசாலாத் தூள் | - 1 தே.கரண்டி (நிரப்பி) |
| கறிமிளகாய்த் தூள் | - 3 மே.கரண்டி (நிரப்பி) |
| உப்புத் தூள் | - அளவிற்கு |
| மிளகு தூள் | - அளவிற்கு |
| சோயா சோஸ் | - 3 மே.கரண்டி |
| கறிமிளகாய் | - 1/4 கிலோகிராம் |
| தே.எண்ணெய் | - 8 மே.கரண்டி |
| இஞ்சி | - 1 துண்டு |
| உள்ளி | - 4 பல்லு |
| கேசரிப் பவுடர் | - 2 சிட்டிகை |
| தக்காளிப் பழம் | - 100 கிராம் |
| கோன்பிளா | - 2 மே.கரண்டி. (நிரப்பி) |

**செய்முறை**

காலிபிளவரை மொட்டுகளாகத் தனித்தனியாக உடைத்து உப்பு நீரில் கழுவி நீரை வடியவிட்டெடுத்துக் கொள்க.

உள்ளி, இஞ்சி என்பவற்றை பசுந்தையாக அரைத்தெடுத்துக் கொள்க.

பின்பு காலிபிளவரை பாத்திரத்திலிட்டு, மிளகாய்த் தூள், அரைத்த விழுது, மஞ்சள் தூள், மசாலாத் தூள், உப்பு என்பவற்றையிட்டு 3/4 தம்ளர் தண்ணீர் விட்டு 5 நிமிடத்திற்கு மூடி அவியவைக்கவும்.

வெங்காயம், பச்சை மிளகாய், கறி மிளகாய், தக்காளிப் பழம் என்பவற்றை வட்டவடிவான துண்டுகளாக வெட்டிக்கொள்க.

5 நிமிடத்தின் பின்பு அடுப்பிலிருந்து இறக்கி, கோன்பிளா 1 மேசைக் கரண்டியை அதன் மேல் தூவி நன்றாகக் குலுக்கிக் கொள்க.

மீண்டும் 2 நிமிடங்கள் மூடி அடுப்பில் வைத்து இறக்கி மீண்டும் கரண்டி வைக்காமல் குலுக்கிச் சேர்த்துக் கொள்க.

தாச்சியில் எண்ணெயைவிட்டு அடுப்பில் வைத்துக் கொதித்ததும், வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், கறி மிளகாய் என்பவற்றையிட்டு வதங்கவிட்டு, நன்றாக வதங்கியதும் தக்காளிப்பழம், அவித்த காலி பிளவர் கலவை, சோயா சோஸ், 1 தம்ளர் தண்ணீரில் கோன்பிளா, கேசரிப் பவுடர் கரைத்த கலவை என்பவற்றைவிட்டு உப்புத் தூள், மிளகு தூள் என்பவற்றை அளவிற்கு இட்டு நன்றாகச் சேர்த்துக் கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்க.

குறிப்பு :- இதே முறையில் காலிபிளவருக்குப் பதிலாக இறைச்சியைப் பாவித்து மஞ்சூரி தயாரித்துக்கொள்ளலாம்.

# ஒரு தாய் மகள் 08

ஹோட்டல் வாசலில் அவனுடைய கார் நின்றிருந்தது. எல்லோரும் மறுபடி ஏறிக்கொண்டார்கள்.


"இது என் அம்மாவின் கார். எனக்கென்று ஒரு வண்டி இருக்கிறது. நான் வெளியே போவதென்றால் அதைத்தான் எடுத்துக்கொண்டு போக வேண்டும். ஆனால் அது ரொம்பக் கர்நாடகமான பழைய வண்டி. சனி ஞாயிறு விடுமுறைக்காக என் அம்மாவும் அப்பாவும் வெளியூர் போயிருக்கிறார்கள். அதனால் அம்மாவின் காரை எடுத்து வந்தேன். இது மெர்ஸிடிஸ் கார். வாங்கிப் பதினைந்து வருடமாகிறது," என்றான் பிலிப்.

கோல்டன் கேட் பாலத்தில் போய் உரிய கட்டணம் செலுத்திவிட்டு, முதலில் கிழக்குப் பாதையிலும், பிறகு தெற்குப் பாதையிலும் சென்று யூனியன் ஸ்ட்ரீட்டை அடைந்தார்கள். சுற்றிச் சுற்றித் தேடித்தான் காரை நிறுத்த இடம் கிடைத்தது.

கடைகளிலும் ரெஸ்டாரண்டுகளிலும் நல்ல கூட்டம். வேடிக்கை பார்த்தபடி சிரித்துப் பேசிக்கொண்டு நால்வரும் நடந்தார்கள். குளிர் இல்லாத அந்த இரவு நேரம் மிக இனிமையாக இருந்தது ஆலிஸனுக்கு.

பிலிப் அவள் தோளை அணைத்தவாறு நடந்தான். செப்டம்பர் மாதம் அவன் கல்லூரிக்குப் போகப் போகிறானாம். அதைப்பற்றி உற்சாகமாக விவரித்தான்.

"எனக்கு யேல் யூனிவர்ஸிடியில் சேர வேண்டும் என்று ஆசை. ஆனால் என் அப்பா அம்மாவுக்கு வயசாகிறது.




என்னை ரொம்பத் தூரம் அனுப்பப் பிரியப்படவில்லை. நான் ஒரு பிள்ளையாச்சே! அதனால் பக்கத்து ஊரில் சேரச் சொல்லியிருக்கிறார்கள்" என்று சிரித்தவன் "செப்டம்பர் மாதம் நீ என் ஹாஸ்டலுக்கு வருகிறாயா? தமாஷாகப் பொழுது போகும்" என்றான்.

அந்த அழைப்பே ஆலிஸனுக்குக் கிளுகிளுப்பாக இருந்தது. ஆனால் அவள் அப்படியெல்லாம் தனியே வெளியூர் போக வீட்டில் விடமாட்டார்கள். அதை நினைத்து "சரிதான்!" என்று கேலியாகச் சிரித்தாள்.

"புரிகிறது. உன் வீட்டில் உன்னை அனுப்பமாட்டார்கள்" என்றான் பிலிப். அவள் சொல்லாமலே பல விஷயங்களை அவன் புரிந்துகொள்கிறவனாக இருந்தான். அதனாலேயே அவனிடம் பேசப் பேச அவளுக்குப் பிரியம் அதிகரித்தது. ஒருமுறை அவன் அவளை மிகவும் நெருங்கி ஏதோ சொன்ன போது இருவர் உதடுகளும் கிட்டத்தட்ட உரசிக்கொண்டன. ஜேம்ஸும் க்ளோவும் அருகில் இருக்கிறார்கள் என்பதே மறந்துவிட்ட மாதிரி இருந்தது. அவர்களுக்கு.

ஜேம்ஸுக்கும் க்ளோவுக்கும் கூட அப்படித்தான். அவர்களுடைய உலகத்தில் அவர்கள் மெய்மறந்திருந்தார்கள்.

ரெஸ்டாரண்டில் ஒயின் எதுவும் அவர்கள் சாப்பிடவில்லை. காப்பிட்டுமே குடித்தார்கள். மணி பதினொன்று அடிக்க ஐந்து நிமிடம் இருந்தது.

> அவர்கள் காத்திருந்தபடி அவர்களின் நண்பர்களும் வந்து சேர்ந்தார்கள். எல்லோருமாகச் சேர்ந்து ஹோட்டலில் இரவு உணவை அருந்தச் செல்கிறார்கள். உணவை அருந்தலாம் என்று சென்றவர்கள் அங்கு ஒயின் ஆர்டர் செய்து அருந்துகிறார்கள். அவர்களுக்கு வரப்போகும் ஆபத்தை உணராமல் தாய் பேஜ் மகளுக்காக வீட்டில் காத்து இருக்கிறாள்

வீட்டுக்குத் திரும்பத் தயாராக ஒவ்வொருவராய்க் காரில் ஏறிக்கொண்டார்கள். இந்த நேரத்தில் சாலைகளில் கூட்டம் குறைந்திருக்கும். அம்மாவுக்குக் கொடுத்த வாக்குத் தவறாமல் பதினொன்றரைக்குள் வீட்டை அடைந்துவிட முடியும் என்று ஆலிஸன் நினைத்துக்கொண்டாள்.

காரில் பிலிப்பின் அருகே உட்கார்ந்து சீட் பெல்ட்டை மாட்டிக் கொண்டாள். "ரொம்ப ஜோராய்ப் பொழுது போயிற்று" என்றாள் மெல்லிய குரலில்.

"எனக்கும்தான்" என்றான் பிலிப்.

ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள் ஆலிஸன். பையனாக இல்லாமல் வயது வந்த வாலிபனாக அவன் தோற்றமளித்தான். சின்னப் பெண்ணான தன்னை இன்னொரு முறை இவன் வெளியே அழைத்துப் போவானா? அல்லது இந்த ஒரு தடவையோடு சரியா? அவளால் ஊகிக்க முடியவில்லை. ஆனால் அவனுடன் நெருக்கமாகப் பழக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

அவன் அமைதியாகவும் நிதானமாகவும் காரை ஓட்டினான். கோல்டன் கேட் பாலம் சமீபித்துக்கொண்டிருந்தது.

மனதை மயக்கும் இரவு நேரம். வானத்தில் அத்தனை நட்சத்திரங்களும் வெளியே வந்து கண்சிமிட்டின. விளக்குகள் வெகு பிரகாசமாக ஒளியை உமிழ்ந்தன. வெளிச்சத்தில் ஆற்று நீர் ஜொலித்தது. பாலத்தின் காற்று கதகதப்பாயும் மென்மையாயும் வீசியது. சான்பிரான்ஸிஸ்கோவின் வாடிக்கையான மூடுபனி அடியோடு மறைந்துவிட்டது. அப்படியொரு இரவு வேளையை ஆலிஸன் அனுபவித்ததே இல்லை.

பாலத்தின் மீது கார் ஓடத் தொடங்கியது. "ரொம்பப் பிரமாதமாயிருக்கிறது" என்று தனக்குத் தானே பேசிக்கொள்கிற மாதிரி கிசுகிசுப்பான குரலில் சொன்னாள்.

பின் ஸீட்டில் க்ளோவும் ஜேம்ஸும் ரகசியமாகச் சிரித்துக் கொண்டிருக்கும் ஒலி கேட்டது.

"இரண்டு பேரும் ஸீட் பெல்ட் மாட்டிக்கொண்டிருக்கிறீர்களா என்று பிலிப் ஸீரியஸாகக் கேட்டான்.

"நீ உன் வேலையைப் பாருப்பா!" என்று ஜேம்ஸ் சிரித்தான்.

"பெல்ட் போட்டுக்கொள்ளவில்லை என்றால் பாலத்தைத் தாண்டியதும் காரை நிறுத்திவிடுவேன்!" என்று மீண்டும் பிலிப் எச்சரித்தான். ஆனால் 'பக்கிள்' பொருத்திக்கொள்ளும் ஓசை எதுவும் கேட்கவில்லை. மாறாக நிசப்தம் நிலவியது. திரும்பிப் பார்க்க ஆலிஸனுக்குக் கூச்சமாக இருந்தது. பிலிப்பை நோக்கிப் புன்னகை செய்தான்.

"நாளை ராத்திரி உனக்கு ஏதாவது வேலை இருக்கிறதா?" என்றான். பிலிப்.

"வந்து... தெரியாது... ஆனால் ஞாயிற்றுக்கிழமை ராத்திரிகளில் நான் வெளியே போக என் வீட்டில் அனுமதிப்பது கிடையாது..."

பதினைந்து வயதுதான் ஆவதால் வீட்டில் தனக்குக் கட்டுப்பாடுகள் உண்டு என்பதை அவள் மறைக்கத் தயாராயில்லை. அவனிடம் நேர்மையாகப் பேச வேண்டும் என்று தோன்றியது.

வீட்டுக்கு வந்து அம்மா அப்பாவுடன் பிலிப் பேசிப் பழகட்டும் முதலில், பிறகு அவர்களே அனுமதிப்பார்கள் அவனுடன் வெளியே செல்ல.

அவள் வயது என்னவென்று பிலிப்புக்குத் தெரியும். ஆகவே அவளுக்குள்ள கட்டுப்பாடுகளைப் புரிந்துகொண்டான். எனினும் அவளுடைய அழகும் புத்திசாலித்தனமும் அவனைக் கவர்ந்தன. அவளுடைய நட்பை மேலும் மேலும் பெற வேண்டுமென்று அவன் விரும்பினான்.

"நாளை பிற்பகல் எனக்கு நீச்சல் வகுப்பு இருக்கிறது. அது முடிந்ததும். உனக்கு ஆட்சேபம் இல்லையென்றால் உன் வீட்டுக்கு வருகிறேன். உன் அப்பா அம்மாவைப் பார்த்த மாதிரி இருக்கும். என்ன சொல்கிறாய்?" என்றான். (தாய் தொடர்வாள்.....)



# ரஜினி வீட்டுக் கல்யாணம்!

**கா**ஞ்சி சங்கராச்சாரியாரின் பரபரப்புக்கு மத்தியிலும் பரபரப்பாகப் பேசப்பட்டது ரஜினி வீட்டுக் கல்யாணம் தனது மூத்த மகள் ஐஸ்வர்யாவை நடிகர் தனுஷுக்கு மணம் முடித்துக் கொடுத்திருக்கிறார். நாட்டுக்கு அவர் ஒரு சூப்பர் ஸ்டாராக இருந்தாலும் வீட்டுக்கு அவர் ஒரு பொறுப்புள்ள தந்தையாக இருந்து திருமணத்தையும் வரவேற்பு நிகழ்ச்சியையும் பொறுப்புடன் முறைப்படி செய்து முடித்திருக்கிறார்.

18ஆம் தேதி போயஸ் தோட்டத்தில் உள்ள ரஜினியின் வீட்டிலேயே திருமணம். குடும்ப நண்பர்கள், உறவினர்கள் தவிர வேறு யாரும் திருமணத்திற்கு அனுமதிக்கப்படவில்லை. முதல்வர் ஜெயலலிதா திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தியது ரஜினிக்கும் லதா ரஜினிக்கும் ஏகப்பட்ட சந்தோஷம்.

திருமணத்தைத் தொடர்ந்து 20ஆம் திகதி காலையிலும் மாலையிலும் நடந்த வரவேற்புதான் பரபரப்பாகப் பேசப்பட்டது. ரஜினி வீட்டுத் திருமணம்





என்றால் சும்மாவா? பெரிய பெரிய வி.ஐ.பி.கள் வருகையில் சென்னை ராஜா அண்ணாமலைபுரமே ஸ்தம்பித்தது.

முன்னாள் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நிகழ்ச்சியின் தொடக்கத்திலேயே தனது பாதுகாப்புப் படை சூழ வந்துவிட்டார். ரஜினி, அவரைக் கட்டித் தழுவி வரவேற்றார். விடை பெறும் போது "தனுஷ் யார்?" என்று சந்திரபாபு நாயுடு கேட்க, "இப்போது பரபப்பாகப் பேசப்படும் இளம் ஹீரோ. எங்கள் எல்லோருக்கும் அவரைப் பிடித்துவிட்டது. அதனால் மாப்பிள்ளையாக்கிக்கொண்டோம்" என்று பதிலளித்தார் ரஜினி.

ரஜினி அரங்கிற்குள் வரவர, ஏகப்பட்ட கைதட்டல்கள். 'மருமகனின் வரவேற்பு நிகழ்ச்சியில் மாமனாருக்கு இவ்வளவு கைதட்டல்களை நாங்கள் பார்த்ததே இல்லை' என்று சொல்லாத ஆட்களே இல்லை.


கலைஞர் தன் பேரன்கள் தயாநிதி, கலாநிதி, மகள் செல்வி, மத்திய அமைச்சர் ராஜா, கே.கே.எஸ். எஸ்.ஆர். புடைசூழ வந்து வாழ்த்தினார். கலைஞருக்கு சால்வை அணிவித்தபோது, ரஜினியின் தோளில் கைபோட்டபடி கலைஞர் ஏதோ பேச ரஜினி சிரித்துக்கொண்டார்.

ஒரு பெரிய நடிகை பட்டாளம் கலர்புல் டிரெஸ்ஸில் வந்து கலக்கினார்கள். குஷ்புவுக்கு உற்சாக வரவேற்பு அளித்தது இரசிகர்கள் கூட்டம். மாளவிகா கொஞ்சம் கிளாமர். லேட்டாக வந்த கார் டிரைவரை டோஸ் விட்டுக் கொண்டிருந்தார் ரம்பா.

'அந்நியன்' கெட்டப்பில் கூடுதலாக குறுந்தாடி வைத்தபடி வந்தார் விக்ரம்.

இந்தி சூப்பர் ஸ்டார் அமிர்தாப்பச்சன் தன் மனைவி ஜெயாவுடன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். மணமக்களுக்குத் தங்க மோதிரம் பரிசாக வழங்கினார் அமிர்தாப். ரஜினி அமிர்தாப்பைக் கட்டித் தழுவி







முத்தமிட்டு நலம் விசாரித்தார். நடிகர்கள் வினோத்கன்னா, ஜாக்கி ஷெராப் போன்ற இந்தி வி.ஐ.பி.களும் வந்து ரஜினியைக் கௌரவித்தார்கள்.


நடிகை சோனியா அகர்வால் தன் தாய், தந்தையுடன் வந்த முதல் நிகழ்ச்சி இதுவாகத்தான் இருக்கும். மணமக்களுடன் ரொம்பவே விருப்பப்பட்டு படம் எடுத்துக்கொண்டார். அந்தச் சமயம் பார்த்து செல்வராகவன் மேடையில் மிஸ்ஸிங்.

சரியாக இரவு 9.30 மணிக்கு தனுஷ் - ஐஸ்வர்யா மேடையை விட்டு ஜூட் (ம்... புரியுது). விழா ஆரம்பித்ததில் இருந்து கடைசி வரை




மாறாத புன்னகையுடன் நின்றுகொண்டே அனைவரையும் வரவேற்று உபசரித்துக் கலக்கினார் சூப்பர் ஸ்டார் ரஜினி.

நன்றி:- குமுதம்







"கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர்; வசீகரமிக்க வார்த்தைகளுக்குச் சொந்தக்காரர் கவிஞர் வைரமுத்து-

# வைரமுத்துவின் கவிதைப் பக்கம்



கற்பனைச் சிறகில் ஏறி
கனவுலகின் எல்லாப்
பரிமாணங்களையும்
அளந்திட ஆசையா?
சொல்லின் தோளேறி
சுகானுபவங்களை சுவைத்திட
எண்ணமா?
அலைகளின் முதுகேறி
தொடுவானத்தைத்
தொட்டிழுத்திட தோன்றுகிறதா?
ஆகாயத்தின் மறுபக்கத்தையும்
புரட்டிப் பார்த்திட ஆவலா?

தென்றலைத் துணைக்கழைத்துக்
கொண்டு
திக்குத் தெரியாத
வனாந்திரங்களில்
ஒளியில் இருட்டையும்
இருட்டில் ஒளியையும்
கண்டு திளைத்திட வேண்டுமா?
வாருங்கள், தம்பி
வைரமுத்துவின் கவிதை
வரிகளைப் பாருங்கள்"
என்கிறார் - கலைஞர் மு.
கருணாநிதி அவர்கள்.

"உள்ளத்துள்ளது கவிதை
இன்பம் உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்
உண்மை தெரிந்துரைப்பது
கவிதை"
என்றார் கவிதை பற்றி கவிமணி
தேசியவிநாயகம்பிள்ளை.

"தலைமுறை தலைமுறையாக
தளைத்து வருவது தமிழ்
வாழையடி வாழையாக
வளர்ந்து வருவது தமிழ்க்
கவிதை

உலகத்தில் எந்த
மொழிக்குமில்லாத
சிறப்பொன்று தமிழுக்குண்டு

இந்தக் கருப்பு
மனிதனுக்குள்ளேயே
இத்தனை நெருப்புப்
பிழம்புகளா?
இவன் கற்பனை ஊற்றுக்குள்ளே
இத்தனை பனி மலைகளா?
இவன் இதயப் பைக்குள்தான்
எத்தனை கர்ப்பப் பைகள்....

இவன் கவிதை மொழியைக்
கேட்டுப்பார்ப்போம்!

குழந்தை என்றால் நமக்கு
கொள்ளைப் பிரியம்;"
குழந்தைகள் பற்றி கவிஞர்
வைரமுத்து இப்படி எழுதுகிறார்!

"மொட்டுத் தொட்டிலில்
முகிழ்த்துக் கிடக்கும்
பட்டுக் குழந்தையை பார்த்து
சிரிக்கிறேன்!

விந்தைத் தின்றுயிர் விளைந்ததே
அதுதான்
விந்தை மாபெரும் விந்தை
மண்ணில்
விழுந்ததும் குழந்தை வேதனை
பாடி
அழுவதும் முனகி அசைவதும்
ஏனோ?

இருளின் நிழலில் இருவிழிமூடி
இருவர் நடாத்திய இன்ப
வழக்கின்
விளக்கஞ் சொல்ல வெடித்த
சாட்சி
என்கிறார் குழந்தை பற்றி கவிஞர்
வைரமுத்து....


காதல் மனித குலத்தின் வற்றாத
ஊற்று
அதன்
சுகமும் அந்த சுக அனுப
வத்தின் வேதனையையும்
நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா?


கவிஞர் வைரமுத்து வறுமைமிகு
சூழலில் பிறந்தவர்; தமிழ் நாட்டின்
ஒரு சிறு கிராமமான
வடுகப்பட்டியில் பிறந்து
பாடசாலைக்கு பாதணி இல்லாமல்
சென்றவர்; ஏழ்மையைப்
புலமையாகக் கொண்டு இன்று
தமிழகத்தின் கவிதைச் சிகரத்தில்
வீற்றிருப்பவர்.

கவிஞர் வைரமுத்துவின்
படைப்புகள் மரபுக்கவிதை,
புதுக்கவிதை, திரைக்கவிதை,
உரைநடை என்று
பல்வகைப்படுத்தலாம். இவரின்
புதுக்கவிதை ஏனையோரின்
புதுக்கவிதைகளை விட
வித்தியாசமானது, தனித்தன்மை
வாய்ந்தது.

வைரமுத்து தமிழ்த் திரையுலகிற்கு
பாட்டெழுத வந்தபோதுதான்
தமிழ்த் திரைப்படப் பாடல்கள்
நவீனத்திற்குள் பிரவேசிக்கின்றது
என்கிறார் ஒரு திரைப்படப் பாடல்
விமர்சகர்.

தனது கிராமத்தைப் பற்றி கவிஞர்
வைரமுத்து





தமது இளம்பராயத்து

பாடும்போது

"ஊரின் நுனியில்
அதோ நான்
ஞானப்பாலும்
பவுடர் பாலும் உண்ட
பள்ளிக் கூடம்

எங்கள் வராக நதியில்
தண்ணீர் வர வேண்டும்
என்னும் வரம் வேண்டி
கரையோரம்
ஒற்றைக் கால் தவமிருக்கும்
ஒரு நூறு தென்னைமரம்

ஊரின் ஒதுக்கத்தில்
செல்லாத காசுகளைச்
சேமிக்கும் உண்டியலாய்
ஓர் இடுகாடு

தூரத்து வயல்களில்
தொலைந்து போன
தங்கள் வாழ்வை
நிலங்களில் குனிந்து
நிமிராமல் தேடும்
நிரந்தரக் கூலிகள்

அங்கே
சேற்றுச் செருப்பணிந்து
வரப்பு நடை பயிலும்
வயல் மயில்கள்"

என்கிறார் -
கவிஞர் வைரமுத்து

கவிதைகளின் ஊடே
தனது கிராமத்தை
எமது மனக்கண் முன்
காட்சிப்
படுத்திவிடுகிறார்

வைரமுத்து-நாமும் வைரமுத்துவின்
கிராமமான வடுகப்பட்டியை ஒரு
தரம் மனப்பமைத்தில் கண்டு
நிற்கிறோம் அல்லவா?

வறுமைநிலை, வாழ்ந்த
வாழ்க்கை, வாழ்வில் நிகழ்ந்த
சோதனைகளை இவர்
கவிதைகளில் நாம் காணலாம்!

மொழி, மொழியின் செழுமை,
சொல்வளம், ஓசை ஒழுங்கு
என்பன இவரது கவிதைகளுக்கு
கிரீடம் சூடி உலா வருகிறது.

காதல் கவிதைகளுக்கும்,
காதலிப்பவர்களுக்கும், காதலை
நேசிப்பவர்களுக்கும்-வைரமுத்து
இதய வீணையின் கவிதை
நாயகன்

"சிற்பத்தின் அழகு - அது
நஷ்டப்பட்ட கல்லில் இருக்கிறது
என்றான் பெயரை நினைவில்
வைத்துக்கொள்ள முடியாத ஒரு
பெரியவன்.

கவிஞர் வைரமுத்துவின் காதல்
உயில் என்ற கவிதையை நாம்
கேட்டுப் பார்ப்போமா?

"உன்னை நான்
பார்த்திராவிட்டால்
என்
கவிதை நோட்டு
வெள்ளையாகவே இருந்திருக்கும்

உன் கூந்தல்
விண்ணப்பித்திராவிட்டால்
என் தோட்டத்தில்
பூச்செடிகள் வைத்திருக்கமாட்டேன்

உன்னை
ஸ்பரிசித்திராவிட்டால்
உலகில் மிகவும் மிருதுவானவை
தளிர்களே என்று
தப்பாகச் சொல்லியிருப்பேன்

உனது
ஒரே பார்வையில்
அரச இலையாக இருந்தவன்
தென்னங்கீற்றாய்க் கிழிந்தேன்


மழையில் நனைந்து
என்
ஜன்னலோரம் ஒதுங்கிய
மாலை நேரக் காற்றாய்...
சின்னச் சின்ன நினைவுகள்
சில்லிடுகின்றன.

கதை பிரசுரமானதும்
தபால்காரனை நேசிக்கும்
ஓர்
ஏழை எழுத்தாளனைப்போல்
உன்
கடிதங்களுக்கு
நான்
காத்திருந்ததுண்டு

உனது முகவரியை
எழுதும்போதெல்லாம்
என் பேனா
தூரிகையாய்
அவதாரமெடுத்ததுண்டு

ஒரு மேகத்தைப் போல்
சுதந்திரமாய் இருந்தவனை
ஒரு மழைத்துளியைப் போல்
கைது செய்துவிட்டாய்

உதய காலம் போன்றவளே
உன் சுவாசம்
என்னைச் சுடுகின்ற தூரத்தில்
நாம் நடந்து போன
அந்த
நல்ல நாட்களில்
நான்



தாகங்களால் குடிக்கப்பட்டேன்
மௌனங்கள் என்ன பேசின.

என் இனியவளே
உனக்கு என் நன்றி
உன்
பார்வையின் கிரணங்கள்
விழாமல் இருந்தால்
இந்த இலை
ஒளிச்சேர்க்கை செய்யாமலே
உதிர்ந்திருக்கும்

காதல் என்னும்
ஒரே சொல்லின் அர்த்தங்களை
நீ
தவணை முறையில் விளக்கினாய்
என் சுவாசங்களை
எனக்கு
நீ
பரிசளித்தாய்

என் மனதில் உதிர்ந்த மகரந்தமே
நான்
எழுதப்போகும் உயில் இதுதான்
கார்ல்மார்க்ஸ்
நாற்காலியில்
உட்கார்ந்து கொண்டே
உயிர் விட்டமாதிரி

உன் இமைகளின்
நிழலில் இருந்து கொண்டே
நான்
என் கடைசிக் காற்றை
சுவாசித்துவிட வேண்டும்
அவ்வளவுதான்."

இது கவிஞர் வைரமுத்துவால்
1980ஆம் ஆண்டு எழுதப்பட்ட
கவிதையாகும்.

அடுத்த வாரம் ஒரு பெண்ணின் வாழும் வரலாறு இடம் பெறும்.

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## திருநெல்வேலித் தாக்குதல் நடத்தப்பட்டது ஏன்?

இந்தியா தன்னைத் தானே இலங்கை விவகாரத்தில் மத்தியஸ்தராக நியமித்துக்கொண்ட தென்றும் இலங்கையில் தலையீடு செய்யும் கொள்கையைக் கடைப்பிடிக்கிறதென்றும் இவர்கள் விமர்சனம் செய்தனர். ஆனால், ஹமீத் எச்சரித்தது போல இலங்கை இன விவகாரத்தில் இந்தியா பங்களிப்புச் செய்வதற்கு நரசிம்மராவின் விஜயம் அடிகோலியது.




இந்திரா காந்தி, தனது விசேட பிரதிநிதியாக நரசிம் மராவை இலங்கைக்கு அனுப்பு வதற்கு முன்னர், இலங்கை வன்செயல்கள் குறித்து இந்தியா உத்தியோகபூர்வ அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தது. 'இலங் கையைப் போல் இந்தியாவுக்கு அண்மையில் இருக்கும் ஒரு அயல் நாட்டில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் குறித்து அக்கறை செலுத்தாமல் இந்தியாவால் இருக்க முடியாதென்று' அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் குழப்பங்களின் காரணமாக ஏறக்குறைய இரண்டு இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக தமிழகம் சென்றடைந்தனர். வசதிபடைத்த மேல்தட்டுத் தமிழர்கள் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கும் மத்தியதர தமிழ் மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களி லொருவரான கலாநிதி நீலன் திருச்செல்வம், ஜூலை இனக் குழப்பங்கள் ஓய்ந்த கையோடு "இந்தியா ருடே" என்ற சஞ்சிகைக்குப் பேட்டியளித்திருந்தார். "தமிழ்ச் சமூகத்தின் பொருளாதார மற்றும் அறிவுசார் அடித்தளத்தை அழித்தொழிப்பதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சியே இது" என்று ஜூலைக் குழப்பங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் அப் பேட்டியின்போது தெரிவித்திருந்தார். 'தமிழ்ப் புத்திஜீவிகள் மீதும் தொழிலதிபர்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலென்று நீலன் திருச்செல்வம் அதனை வர்ணித்தார். ஆனால் இலட்சோப இலட்சம் அப்பாவித் தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்களென்ற உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமையிலான இ.தொ.கா. நன்கு திட்டமிடப்பட்ட குழுக்களால் மேற்கொள்ளப்பட் தாக்குதலென்று மிகச் சரியாகவே வர்ணித்திருந்ததை ஏற்கெனவே குறிப்பிட்டி ருந்தோம். "தமிழ் மக்களின் மனதில் பாதுகாப்பில்லை யென்ற உணர்வை இக் குழப்பங்கள் ஏற்படுத்தியுள்ளன" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் அக் காலக் கட்டத்தில் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

**சார்ள்ஸ் அன்ரனியின் படுகொலைக்குப் பழிவாங்கு முகமாகவே திருநெல்வேலித் தாக்குதல் நடத்தப்பட்டதாக இந்திய "சண்டே" இதழுக்கு வழங்கிய பேட்டியில் பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார். 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தப் பேட்டி அச் சஞ்சிகையில் பிரசுரமாகி யிருந்தது. அனிதா பிரதாப் என்ற பெண்மணி பிரபா கரனைச் சந்தித்து இப் பேட்டியைக் கண்டிருந்தார். பின்னாட்களில் 'இரத்தத் தீவு' என்ற ஈழப் போராட்டம் பற்றிய நூலை எழுதிய பத்திரிகையாளர் இவர். ஓரளவு பக்கச் சார்பின்றி எழுதக்கூடிய துணிகரமான பத்திரிகையாளர் இவரென்றும் ஊடக வட்டாரங்களில் பேசப்படுவதுண்டு.**

அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட ஜூலை இன சங்காரத்துக்கு வித்திட்ட சம்பவம், இராணுவத்தினர் மீது திருநெல்வேலியில் பிரபாகரன் தலைமையில் நடத்தப்பட்ட கெரில்லாத் தாக்குதலாகும். இத் தாக்குதல் நடத்தப்பட்டமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்டன. தமிழ்ப் பெண்களைப் படையினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாலேயே இத் தாகுதல் நடத்தப்பட்டதாக அப்போது சில தரப்புகளில் தெரிவிக்கப்பட்டது. திருநெல் வேலித் தாக்குதலுக்கு ஒரு கிழமைக்கு முன்னர்தான்

*(அரசியல் தொடர்)*

படையினர் நடத்திய தாக்குதலில் சீலன் என்றழைக் கப்படும் சார்ள்ஸ் அன்ரனி கொல்லப்பட்டார். அவரது கொலைக்குப் பழிவாங்குவனென்று உறுதிபூண்ட செல்லக்கிளியே இத் தாகுதலை முன்னின்று நடத்தினாரென்று இயக்கத்தைச் சேர்ந்த வேறு சிலர் பேசிக்கொண்டனர். மீசாலையில் ஜூலை மாதம் 15ஆம் திகதி இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் சார்ள்ஸ் அன்ரனி கொல்லப்பட்டார். சார்ள்ஸ் அன்ரனி அப்போது புலிகள் இயக்கத்துக்குள் மூத்த தளபதியாகச் செயற்பட்டவர். இவரது பெயரையே பிரபாகரன் தனது மூத்த புதல்வருக்கு வைத்தாரென்பதும் சார்ள்ஸ் அன்ரனியின் பெயரால் சக்திவாய்ந்த படைப் பிரிவொன்று பின்னாட்களில் புலி இயக்கத்துக்குள் உருவாக்கப்பட்ட தென்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

சார்ள்ஸ் அன்ரனியின் படுகொலைக்குப் பழிவாங்கு முகமாகவே திருநெல்வேலித் தாக்குதல் நடத்தப்பட்டதாக இந்திய "சண்டே" இதழுக்கு வழங்கிய பேட்டியில் பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார். 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தப் பேட்டி அச் சஞ்சிகையில் பிரசுரமாகி யிருந்தது. அனிதா பிரதாப் என்ற பெண்மணி பிரபா கரனைச் சந்தித்து இப் பேட்டியைக் கண்டிருந்தார். பின்னாட்களில் 'இரத்தத் தீவு' என்ற ஈழப் போராட்டம் பற்றிய நூலை எழுதிய பத்திரிகையாளர் இவர். ஓரளவு பக்கச் சார்பின்றி எழுதக்கூடிய துணிகரமான பத்திரிகையாளர் இவரென்றும் ஊடக வட்டாரங்களில் பேசப்படுவதுண்டு. இந்தியரொருவரை முன்னர் திருமணம் புரிந்திருந்த இப் பெண் பத்திரிகையாளர், பின்னர்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம் + அம்பி மகன்**

புதுடில்லியிலுள்ள நோர்வே தூதரகத்தில் பணியாற்றிய நோர்வேத் தூதுவரைக் காதலித்துத் திருமணம் புரிந்துகொண்டாரென்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. 'இரத்தத் தீவு' (Island of Blood) என்ற தனது நூலில் மாத்தயா விவகாரம் பற்றிக் குறிப்பிடும்போது அனிதா பிரதாப் கீழ்க் கண்டவாறு சொல்கிறார்.

"பிரபாகரனுடனான பேட்டி முடிந்ததும் ஒலி நாடாவையும் குறிப்புப் புத்தகத்தையும் மூடிவைத்து விட்டு அன்ரன் பாலசிங்கத்துடனும் சாவகாசமாக உரை யாடினேன். மத்தியான உணவு கொண்டுவரப்பட்டது. இந்த நேரத்தில் ஒருவர் உள்ளே வந்தார். அவரைப் பார்த்ததும் சப்த நாடிகளுமடங்கி நான் ஊமையாகினேன். ஆமாம், அவர் மாத்தையா. ஆனால் எனக்குத் தெரிந்த மாத்தையா அல்லர் அவர். இந்த மாத்தையா அடித்து நொருக்கப்பட்ட நாய் போலக் காட்சியளித்தார். கம்பீரம், கட்டுமஸ்தான உடல். ஒளி நிறைந்த கண்கள் எதையுமே காணவில்லை. பாதாளச் சிறையிலிருந்து கூட்டிவரப்பட்ட கைதி போல் காட்சியளித்தார். நீண்டகாலமாக அடிமையாக இருந்ததற்கான வெளித் தோற்றம், சித்திரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் ஆகியன வெளியே தெரியாவிட்டாலும் என்ன நடந்திருக்குமென்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. ((Island of Blood))

"மாத்தையா கொல்லப்பட்டுவிட்டாரென்று பரவலாகப் பேச்சடிபடுகிறதே, உண்மை என்ன?" என்று தான் அப் போட்டியின்போது பிரபாகரனைக் கேட்டதாகவும், "இல்லை" என்று கூறிய பிரபாகரன் "மாத்தையாவைப் பார்க்கப் போகிறீர்களா?" என்று கேட்டதாகவும் "ஆம்" என்று சொன்ன பின்னர் அவர் கூட்டி வரப்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டே மேற்கண்டவாறு அனிதா பிரதாப் குறிப்பிடுகிறார்.

மாத்தையா விவகாரம் பற்றிப் பின்னர் விரிவாகப் பார்ப்போம். திருநெல்வேலித் தாக்குதலில் பதின்மூன்று படையினர் கொல்லப்பட்டபோது, புலிகள் தரப்பில் சுமார் பத்துப் பேர் தாக்குதலில் பங்குபற்றியபோதும், செல்லக்கிளி மட்டுமே கொல்லப்பட்டார். இரண்டாவது லெப்டினனட் குணவர்த்தன பயணம் செய்த ஜீப் வண்டியிலிருந்த ஆறு பேருமே குண்டுத் தாக்குதலில் உடல் சிதறி மரணமானார்கள். பின்னால் வந்த ட்ரக் வண்டியிலிருந்த ஒன்பது பேரில் ஏழு பேர் வண்டியிலிருந்து குதித்தபோது அல்லது குதிக்க முன்னரேயே புலிகளின் சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் ஸ்தலத்திலேயே பலியானார்கள். படையினர் திருப்பித் தாக்காத நிலையில் செல்லக்கிளி எப்படி மரணமாரென்று மாற்று இயக்கங்கள் மத்தியிலும் புலி இயக்கத்துக்குள்ளும் கேள்விகள் எழுப்பப்பட்டன. செல்லக்கிளி தாக்குதலில் பங்குபற்றிய புலிகளாலேயே சுட்டுக் கொல்லப்பட்டாரென்று சந்தேகங்களும் குற்றச்சாட்டுகளும் எழுப்பப்பட்டன. அப்படியானால் இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்களைப் பாதிப்புக்குள்ளாக்கிய ஜூலை இன சங்காரத்துக்கு முன்னோடியாகப் பலிபீடத்தில் காணிக்கை செலுத்தப்பட்ட தமிழ் இளைஞர் செல்லக்கிளியா? அதுவும் புலிகளே தமது மூத்த உறுப்பினரொருவரைச் சுட்டுக் கொன்றார்களா?

(தொடர்ந்து வடியும்....)




**வ**ணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!! போன வாரம் ஆரம்பிச்ச மாவீரர் தினக் காச்சல் இந்த வாரமும் விட்டபாடில்லையுங்கோ. எண்டாலும் பிரச்சினைகளோடை விடிஞ்சு விடிஞ்சு ஒவ்வொரு பொழுதும் இருண்டுபோனது எண்டதுதான் உண்மை சரியுங்கோ. தேவையில்லாம மேலச் சொல்லப்போய் வம்பில மாட்டிக்கொள்ள ஏலாதுங்கோ. எப்படா வந்து மாலை போடுவ மெண்டு வம்பு வரிஞ்சு கட்டிக்கொண்டு கடப்புல வந்து நிக்குது. அதால நேரடியா விசயத்துக்கு வருவம்.

***சின் :-*** *அண்ண மாவீரர் தின நிகழ்வுகள் எல்லாம் நல்லபடியா முடிஞ்சிட்டுதெண்டு நினைக்கிறன். நீங்கள் என்ன நினைக்கிறியள்.*

**மன் :-** அது சரி முடிஞ்சுட்டுது. முடியுறதுக் கிடையில நடந்த பிரச்சினைகள்தான் இன்னும் முடிஞ்சபாடில்லை.

கொடி ஏத்திறது ஒப்பந்தத்துக்கு முரண் எண்டினம் - பிறகு என்னடாவெண்டால் ஏத்தியே தீருவமெண்டு மக்கள் அடம்பிடிக்கினமாம். இதால படையினருக்கும் மக்களுக்கும் கைகலப்பாம். படையினர் தாக்கிச்சினமாம். மக்கள் தாக்குப் பட்டதில இயக்கப் பெடியள் காயப்பட்டிருக் கினமாம். பிறகு படையினர் மக்களை வீடுகளில கொண்டுபோய் பாதுகாப்பா விட்டிச்சினமாம். என்னடாப்பா இது குழப்பமா இருக்கோ இல்லையோ. அது சரி, மாவீரர் நாள் எண்டால் ஒருவரெல்லோ! மாவீரர்கள் எண்டால்தானே நிறையப் பேர் அப்பிடியெண்டால் யாருக்கான நினைவு நாளிது. ஒருவேளை அவையளின்ர நினைவு அலங்கரிப்புகளில இவரின்ர பிறந்த நாள் எண்டதுக்காக சொல்லினமோ! முதல்நாள் கொண்டாட்டம் மறுநாள் - துக்க தினம் வித்தியாசமா இருக்குதெல்லோ.

***சின் :-*** *அண்ண நிப்பாட்டுங்கோ. நீங்கள் குழம்பிப் போயிருக்கிறியள் எண்டால் எங்களையும் ஏன் குழப்புறியள்.... எங்கட சம்பந்தமானவரின்ர மகன் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதே.*

**மன் :-** சம்பந்தரின்ர மகனாக இருக்கட்டும் வேறயாரமாகவும் இருக்கட்டும்; எந்தவொரு உயிர் மீதும் புரியப்படும் இவ்வாறான தாக்குதல்கள் மிக மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதுதான். எங்கட சம்பந்தமானவர் என்னதான் முழியை உருட்டி, சில நேரத்தில உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாலும் ஆயுதக் கலாசாரத்தின் மீது விருப்பங் கொண்டவரில்லை எண்டது எனக்குத் தெரியும். அதாலதான் வேற ஆக்கள் இனந் தெரியாத நபர்களால சுடப்பட்டாலோ வெட்டப்பட்டாலோ கூட சம்மந்தமில்லாம விலத்திப் போறவர் அவர் மௌனமாக இருக்கட்டும். அது அவரது அரசியல். அவர் மகனுக்குப் புரியப்பட்ட சம்பவத்தை நான் கண்டிக்கிறேன்.

***சின் :-*** *அண்ண நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்ற கணக்கா இருக்கிற உங்கள நினைச்சா புல்லரிக்குதண்ண. பாராளுமன்றத்துக்கு முன்பாக எங்கட கூட்டமைப்பு எம்.பி.மார் மாவீரர் தின நிகழ்ச்சிகளை செய்திருக்கினமே...*

**மன் :-** இதில ஆச்சரியப்பட ஒண்டுமில்லை. ஏனனெண்டால் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியாவிலையும் சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கு. கூட்டமைப்பு எம்.பி.மாரை "என்ன செய்திருக் கிறியள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறியள்" எண்டு மின்னிற நிகழ்ச்சி செய்யிற தம்பி இருக்கி அடிக்கடி அதட்டுற பாணியில கேட்கிறவரெல்லோ அவருக்கு அடித்த ஆப்புதான் இதெண்டு எம்.பி.மாரே பேசியிருக்கினம். இனி என்ன கேட்கப் போராரெண்டு.

***சின் :-*** *என்னண்ண! நான் எதையோ கேட்க நீங்க எதையெதையே முடிச்சுப்போட்டுக் கதைக்கிறியள். அந்தத் தம்பியும் இல்லை யெண்டால் அவையளை யார்தான் கேள்வி கேட்கிறது.*

*அரசியல் வெறுமையை இனியும் அனுமதிக்க முடியாதெண்டும் அரசு உடனடியாப் பேச்சுக் களை ஆரம்பிக்காவிட்டால் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்க வேண்டி வருமெண்டும் உங்கட தம்பி தனது உரையில் சொல்லியிருக்கிறாரே.*

**மன் :-** சொன்னதில தப்பொண்டுமில்ல. இதைத்தான் இரண்டு தரப்பும் சொல்லுகினம், யுத்தமில்லாம சமாதானமுமில்லாம வெறுமனே சமாதானமெண்ட போர்வையில கொலைகள் மட்டும் நடைபெறுவதை மக்களுந்தான் விரும்பயில்லை. அரசியல் வெறுமை எண்ட சொல்லு கொஞ்சம் லேட்டஸ்ட்டா இருக்கு. இவர் பேசி முடிச்சிட்டார் இதற்கு தவில் வாசிக்கிறவையளின்ர தமிழ்க் கட்சித் தலைவர்களை நினைச்சால்தான் பயமாக் கிடக்கு. எதிர்காலத்தில அவங்களும் ஆளுக் கொரு உரையை வருசத்தின்ர கடைசியில உளறுவாங்களோ எண்டு.

***சின் :-*** *எண்டாலும் தம்பிய விட்டுக் குடுக் காமச் சடைஞ்சு போட்டியள். ஏன்ன விரைவாப் பேச வேணுமெண்டு பிடி கொடுக்காமப் பேசினவர். ஒரு காலக்கெடுவைச் சொல்லி யிருந்தால் அம்சமா இருந்திருக்கும். அப்படி யில்லாதது விளைவு எண்டதின்ர அர்த்தத்த தேட வச்சிட்டுது... எதிர்க்கட்சி அரசுக்கு வழங்கி வந்த எல்லாவிதமான ஆதரவையும் வாபஸ் வாங்கிக்கொள்வதாகதெரிவித் துள்ளதே.*

**மன் :-** இந்த வருஷத்தின்ர கடைசி ஜோக் இதுதானாக்கும். இவையள் இதுவரை எந்த வகையில ஒத்துழைப்புகளை வழங்கி வந்திச்சினம் அதுகளை வாபஸ் வாங்கிறது அமெரிக்காவில புஷ்ஷுக்கு எதிர்ப் போட்டி யாளராகப் போட்டியிட்டு கணிசமான வாக்குகளால ஜனாதிபதியாக முடியாமல் தோத்துப்போன கெரியை எவ்வித எதிர்ப்பு மனப்பான்மையோ, காழ்ப்புணர்ச்சியோ இல்லாமல் உதவி ஜனாதிபதியாக நியமிச் சிருக்கிறார் புஷ். அதுக்கு முன்னால இங்கு நடக்கிற எதுவும் பெரிசாத் தெரியேல்லை. நாங்க கற்றுக்கொள்ள நிறைய இருக்குது. விளங்குதோ?

***சின் :-*** *நீங்க சொன்ன அமெரிக்காவின்ர மெஸேஜில நான் கேட்ட கேள்வியையே மறந்திட்டன். சூப்பரண்ண. இனி, புஷ்ஷின்ர மூவிங்குகளை நானும் அவதானிக்கப் போறன்....! ஊடகவியலாளர்கள் ஒன்றியம் இந்த ஆண்டுக்கான விருதுகளை வழங்கி யிருக்கே! தெரியுமோ?*

**மன் :-** அறிஞ்சனான். போட்டோக்களோடை போட்டுத் தாக்கியிருக்கினம். நானும் இத்தனை வருஷமா ஊடகக்காரனெண்டு இருக்கிறன். ஒரு அறிவித்தலாவது தந்தாங்களோ! இல்லையே. ஊடகங்கள்தான் அப்பிடி யெண்டால் ஊடகக்காரர்களும் ஆக்களப் பாத்துத்தான் நடக்கினம். நிமலராஜன் விருது, நடேசன் விருது எண்டு வழங்கினது சந்தோசம்தான். எங்கட அற்புதனை எப்பிடி ஓரங்கட்டினாங்கள் எண்டதுதான் புரியாத புதிராக் கிடக்கு. எப்பிடித் தெரிவு செய்யப்பட்டி ருந்தாலும், யார் யார் பெற்றிருந்தாலும் பின்னணில யார் இருந்து இயக்கியிருந் தாலும் நடந்தது ஊடகவியலாளர்களைக் கௌர விக்கும் வைபவம் எண்ட வகையில அற்பு தனின் நினைவுகளைச் சுமக்கும் என் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

***சின் :-*** *ஒரு அழைப்புக் கூட விடுக்காதவர் களையும் வாழ்த்துறதெண்டது பெரிய விஷயம்தான். அது உங்களிட்ட தாராளமாவே இருக்கு. ஊடக தர்மம், ஊடக நியாயம், ஊடக பாரம்பரியம் இவையெல்லாம் இன்னும் இங்கே இருக்கிறதா நினைச்சாத்தானே யார் மீதும் குறை சொல்ல வேண்டியேற்படுகிறது. இல்லையென்று ஆகிவிட்டதால் எல்லோரும் வாழ்த்துக்குரியவர்களே! என் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.*

**மன்னவரும் சின்னவரும்**

# தாகம்......

நமக்குள் கருத்து வேறுபாடே வரக் கூடாது என்ற இரும்புத்தனமான எண்ணத்துடன் மணவாழ்க்கையைத் துவங்குவதுதான் கணவன் - மனைவி உறவில் விரிசல் உண்டாவதற்கான முக்கியமான காரணம்.

வெவ்வேறு சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த கணவனும் மனைவியும் ஞாயிற்றுக்கிழமையை எப்படிச் செலவழிப்பது? போனஸ் பணத்தில் என்ன வாங்குவது? என்று குடும்பத்தில் எழுகிற அத்தனை கேள்விகளுக்கும் எப்படி ஒரே மாதிரியான கருத்து வைத்திருக்க முடியும்?

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே, கருத்துப் பரிமாற்றம் என்ற போர்வையில் ஆரம்பிக்கும் உரையாடல் சூடாகும்போது, இருவரில் ஒருவர் விழித்துக்கொண்டு கட்டுப்படுத்தாவிட்டால் அது சண்டையில்தான் முடியும். இந்த மாதிரி நேரத்தில், கணவன் - மனைவி இருவரில் யாராவது ஒருவர் டென்ஷனைக் குறைத்துக்கொள்ள சென்ஸ் ஆ.்.ப் ஹியூமர் அவசியம். ஆனால், நகைச்சுவை என்ற பெயரில் சிலர் பிரச்சினையை விசிறி விட்டுவிடுவார்கள். இது மாதிரி....

மனைவி :- (இலேசான ஆதங்கத்துடன்): என்னைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று கல்யாணத்துக்கு முன்னால் ஆபீஸ், வீடு, பஸ் ஸ்டாண்ட் என்று என் பின்னால் நீங்கள்தான் சுற்றிச் சுற்றி வந்தீர்கள்! நினைவிருக்கிறதா?

கணவன் :- (நக்கலாக): நாச்சரலி! எலியைப் பிடிக்க நினைக்கும் எலிப்பொறி, எலியைச் சுற்றுவதில்லை! மாறாகச் சிறைப்பட்டுத் தவிக்கப் போகும் எலிதான், எலிப்பொறியைச் சுற்றும்.

தொடர்ந்து அந்த வீட்டில் பூகம்பம் வெடிக்கும்!

கணவன் மனைவிக்கிடையே மனத்தாங்கல் வருவதற்கு இன்னொரு காரணம், ஒப்பீடு!

"நான் பிறந்து ஐந்து வருடம் கழித்துப் பிறந்தவள் என் தங்கை. அவள் நான்-ஸ்டிக் குக்கிங் பேன் வாங்கிவிட்டாள். வாக்குவம் க்ளீனர் வாங்கிவிட்டாள். ஆனால், உங்களைத் திருமணம் செய்துகொண்டு நான் எந்த சுகத்தைக் கண்டேன்...!" இப்படி வருத்தப்படுகிற மனைவிகள் நிச்சயம் இருக்கிறார்கள்.

"உன் தங்கை தன் புருஷனிடம் எத்தனை கனிவாக - கலகலப்பாக இருக்கிறாள் பார்! நீயும் இருக்கிறாயே, உம்மனா மூஞ்சி" என்று கணவனின் பதிலும் ஓர் அப்பீலாகவே வரும்.

இந்த இடத்தில் ஜென் மதத்திலிருந்து ஒரு சின்னக் கதை சொல்கிறேன்.

மாற்று உடைகூட இல்லாத அந்த ஜென் துறவியைத் தேடிக் காலையிலிருந்து மாலை வரை மக்கள் கூட்டம் அலைமோதும். பலர் அந்தத் துறவியின் காலைத் தொட்டுக் கண்ணிலே ஒற்றிக்கொள்வார்கள்.



நாட்டின் தளபதிக்கு இது பொறுக்கவில்லை. ஒருநாள் நேரே துறவியிடம் கிளம்பிப் போனான். நான் இந்த நாட்டின் சாமுராய்...ஆயுதம் ஏந்திய ஆயிரமாயிரம் போர் வீரர்கள் என் கீழே இருக்கிறார்கள். ஆனால், சாப்பாட்டுக்கே மற்றவர்களின் கையை எதிர்பார்க்கும் கிட்டதட்ட ஒரு பிச்சைக்காரன் நிலையில் இருக்கிற உனக்குத்தான் அதிக மரியாதை கொடுக்கிறார்கள். அது எப்படி?" என்று கேட்டான்

துறவி சமுராயை அழைத்துக் கொண்டு தன் குடிசையிலிருந்து பூந்தோட்டத்துக்கு வந்தார். அன்று பௌர்ணமி. வானத்தைக் காட்டி "அது என்ன?" என்று அவனிடம் கேட்டார். சாமுராய், "நிலா" என்றான்.

தோட்டத்திலேயே பூத்திருக்கும் ரோஜாப் பூவைக் காட்டி "இது என்ன?" என்றார். "ரோஜாப் பூ" என்றான் எரிச்சலுடன்.

"இந்த ரோஜா எப்போதாவது 'ஐயோ, நாம் அந்த நிலாவைப் போல பால் நிறமாக இல்லையே' என்று தன்னை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்கிறதா? இல்லை. அந்தச் சந்திரன்தான் 'நாம் ரோஜா மாதிரி ரோஸ் கலரா இல்லையே' என்று மனப்புழுக்கம் அடைகிறதா? ரோஜா ஓர் அழகு என்றால்...நிலா வேறு மாதிரியான அழகு!"

உதாரணம் சொன்ன துறவி முத்தாய்ப்பு வைப்பதற்கு முன்பே சமுராயின் கண்கள் திறந்துவிடுகின்றன. கண்கலங்கி மன்னிப்புக் கேட்டு விடைபெற்றான்.

ஒப்பீடுகள் உங்களை எந்த அளவுக்குச் சஞ்சலம் அடையச் செய்யும் என்பதற்கு இன்னொரு கதையும் சொல்லிவிடுகிறேன்.

வழி தவறி ஒரு காட்டுக்குள் வந்து மாட்டிக்கொள்கிறது ஒரு நாய். உச்சி வெயில் மண்டையைப் பிளக்கிறது. நீர்நிலையே தென்படாமல் தாகத்தால் தவித்துப் போகிறது அந்த நாய். நீரைத் தேடி அலைந்து திரிகிறது. அந்தச் சமயம் இறைவனே அமைத்தது போல் ஒரு சின்ன நீர்த் தேக்கம் தென்படுகிறது. வெயிலிலேயே அலைந்து திரிந்து களைத்துப் போன அந்த நாய், உயிரைப் பிடித்துக்கொண்டு தண்ணீரை நோக்கி ஓடுகிறது. குனிந்து தண்ணீரைக் குடிக்கப் போன சமயம், தண்ணீரிலே தனது பிரதி பிம்பத்தைப் பார்த்துவிட்டது.

நாய்க்கு இப்போது தண்ணீர் கண்ணுக்குத் தெரியவில்லை. தன் பிம்பத்தைப் பார்த்துக் குரைக்கத் தொடங்கிவிட்டது. ஏற்கெனவே பசியில், தாகத்தில், வெயிலில் அலைந்து திரிந்த நாய் தொடர்ந்து குரைத்ததால் சீக்கிரமே பலவீனமாகிவிடுகிறது. அப்போது பலமான காற்று வீச, இதுவரை தண்ணீரிலே தெரிந்த நாயின் பிம்பம் கலைந்து அலை அலையாக நீர் தெரிகிறது. தாகம் தீர தண்ணீர் குடிக்கிறது நாய்!

எதிர்வீட்டுக்காரர் வாங்கிய புது டு-வீலரும், உங்கள் தங்கைக்கு அவரது கணவர் வாங்கிக் கொடுத்த வாக்குவம் க்ளீனரும் உங்கள் வாழ்வில் கிடைத்திருக்கிற நல்ல விஷயங்களைக் கண்களுக்குத் தெரியவிடாமல் பண்ணிவிடுகின்றன!


**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 98



### இடமிருந்து வலம்

1. பாட்டுக்கொரு புலவன் (குழம்பியுள்ளது).
4. வஞ்சனை (திரும்பியுள்ளது).
6. உடலுக்குக் கேடு என்று தெரிந்ததும் அடிப்பார்கள் (திரும்பியுள்ளது).
8. வேதம்/யானைக்கு ஏற்படுவது (குழம்பியுள்ளது).
16. ஆடு, மாடு அடைத்து வைக்குமிடம் (குழம்பியுள்ளது).
19. லிபிய அதிபரது பெயரின் பிற்பாதி (திரும்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. அன்பு.
2. போதை தருவது
3. ரமணாவின் இயக்கத்தில் விஜய்- ஜோதிகா நடித்த படம் (குழம்பியுள்ளது).
7. வானம்பாடி.
10. பொற்கொல்லன்.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 07.12.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-98
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 96க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

இ. சுதர்சினி, மணியகம், வாசிகசாலை வீதி, கொம்மாந்துறை, செங்கலடி.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. புஸ்பம் சூசைப்பிள்ளை, கர்த்தர் கோவில் (அருகாமையில்), கீரி, மன்னார்.
2. எம். கலைதாசன், 220, பிரதான வீதி, குறிஞ்சாக்கேணி-02, கிண்ணியா.
3. இரத்தினசிங்கம் சுபாஜினி, பிரதான வீதி, பெரியநீலாவணை-01, கல்முனை.
4. சி. ஜெயருக்ஷன், இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம்.
5. நா. விஷ்ணுவர்த்தன், 107, பாடசாலை வீதி .சேனைக்குடியிருப்பு 01, கல்முனை.
6. மரீனா கொன்டினென்டல், இல. 96 காலி வீதி, தெகிவளை.
7. எம்.எம்.ஜெ யாசினி, 95, முதலாம் மாடி, புதிய பஸ் நிலையம், வவுனியா.
8. கே.எம்.எம். கலீல், குளியாப்பிட்டிய வீதி, ஹொறம்பாவ.
9. ஐ.எஸ்.எம். லா.்.பர், 323/1, கண்டி வீதி, பரகஹதெனியா, வாதுவ.
10. ஆர். பொற்செல்வி, செல்வி அகம், கல்முனை-03.

**குறுக்கெழுத்துப் போட்டி 96 விடைகள்**




ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

72

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................
கையொப்பம்:...............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



* ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
* மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
* ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-12-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சேலை?
கல்கிசை வாசகிக்கு அதிர்ஷ்டம்! 70

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

க. சயந்தினி.
204/1, காலி வீதி, கல்கிசை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# தூரப் பார்வை

மணி ஓசை கேட்டதும் மனதிற்குள் ஒரு நிம்மதித் தென்றல் வீசியது. 'அப்பாடா! ஒரு மாதிரியாக இப் பாடவேளை முடிந்துவிட்டது' மனதிற்குள் கூறியபடி திருத்த வேண்டிய பயிற்சிக் கொப்பிகளை எடுத்துக் கொண்டு ஓய்வறைப் பக்கமாக நடந்துகொண்டிருந்தாள் நிவேதா.

"டீச்சர்.....எங்கட கிளாசிற்கு தமிழ்ப் பாடம்....." ஏதோ சொல்ல வந்த மாணவன் தலைப்புச் செய்தியை மட்டும் வாசித்துவிட்டு, என்ன பதில் வரும்? எனும் எதிர்பார்ப்புடன் நிவேதாவின் முகத்தை நோக்கினான்.

"வாறன்....வாறன் போய் கிளாசில் இருங்கோ...இவைகளைக் கொண்டு வச்சிட்டு வாரன்..." நிவேதாவின் கட்டளைக்குச் செவிசாய்த்த வகுப்புத் தலைவன், வகுப்பறையை நோக்கிச் செல்கிறான்.

ஒரு பாடவேளை முடிந்த சந்தோசம். மறுபாடவேளைக்கான ஆரம்பத்தால் குறைந்து கொண்டிருப்பதை அறிந்தது அவளது மனது. கடிகாரத்தைப் பார்த்தாள். ஒரு மணி 22 நிமிடங்களை உயிரூட்டிக் கொண்டிருந்தன முட்கள் பரபரப்புடன் அடுத்த நிகழ்விற்கான புத்தகங்கள், கற்பித்தல் சாதனங்கள் என்பவற்றுடன் வகுப்பறைக்குப் பயணமானாள் நிவேதா.

"டீச்சர்....."எனத் தயங்கியபடி தன் கரத்தில் இருந்ததைப் பயத்துடன் நீட்டிய மாணவியிடம் "என்ன?" எனும் கேள்வியை விழிகளால் கேட்டு நின்றாள் அவள்.

மத்திய கிழக்கு நாடுகளை உலகப் படத்தில் குறித்துக்கொண்டு வரச் சொன்னீங்க டீச்சர்... எல்லோரும் குடுத்துட்டாங்க. நான் மட்டும் குடுக்கல. அதான் எடுத்துக்கொண்டு வந்தன்...

"சாந்தி! நான் பாடம் முடியும்போது ஒருக்கா கேட்டன்தானே.ஷ யார் இன்னும் தரல என்று. அப்ப எல்லோரும் குடுத்திட்டம் என்று ஏன் என்கிட்ட பொ்ய் சொன்னீங்க."

"சொறி டீச்சர். ஒரு இடம் குறிக்காததால....நான் அப்படிச் சொன்னன்."

தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட சாந்தி பார்வையைத் தாழ்த்தினாள். "சரி...தாங்க....இனிமே இப்படி நடந்துக்கக் கூடாது. பொய் சொல்றது எனக்குப் பிடிக்காது. என்கிட்ட கேட்டிருந்தா அந்த இடத்த குறிக்க உதவி இருப்பன்தானே....." மாதிரி உலகப்படத்தை வாங்கிக்கொண்டாள் நிவேதா...

"தேங்க்யூ டீச்சர்...." புன்னகையுடன் சென்றாள் சாந்தி. நிவேதா நடையை விரைவாக்கி பாதங்களை நகர்த்தினாள். மனதிற்கு என்னவோ போல் இருந்தது. பாடம் ஆரம்பித்து மூன்று நிமிடங்கள் கடந்துவிட்டதால் தயக்கத்துடன் நடந்தாள் அவள்.

புதிய இடம். புதிய முகங்கள். இன்னும் வகுப்பறைகள், மாணவர்கள்கூட சரியாக பழக்கம் இல்லை அவளுக்கு. நேரசூசியைப் பார்த்துத்தான் எந்த வகுப்பிற்குச் செல்ல வேண்டும் என்பதை அறிய வேண்டும். வந்து மூன்று வாரம் ஆகிவிட்டது. இன்னமும் இயல்பாக்கம் அடையவில்லை அவள். பாடம், மாணவர் இதற்கிடையில் அவளது கற்பித்தல் பாடங்களைப் புரிந்துவைத்துள்ள அளவிற்கு அவளால் மாணவர்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால் கற்பித்தலில் சில இடையூறுகளைச் சந்தித்த வண்ணம் இருந்தாள். புதிய பாடசாலையில் கற்பித்தல் பயிற்சியை ஆரம்பித்திருக்கும் அவள், இன்னும் ஒரு மாதப் படியைத் தாண்டாதவள். இருந்தாலும் மாணவர்களைப் புரிந்துகொண்டு கற்பிப்பது தன் கடமையின் கூறு என்பதை உணர்ந்த ஆசிரியை அவள்.

பாடம் நடந்துகொண்டிருந்தது. இலக்கணப் பகுதி, மாணவர்கள் விளங்கிக்கொள்வதில் எதிர்நோக்கிய பல்வேறுபட்ட சிக்கல்களைத் தீர்த்து வைத்து எளிமையாகப் புரிந்துகொள்ள உதவியவள் குறிப்புகளை வழ்ங்கிக்கொண்டிருந்தாள். அவள் கரும்பலகையில் எழுதியவற்றைப் பார்த்து தமது பயிற்சிக் கொப்பிகளில் எழுதிக்கொண்டிருந்தனர் மாணவர்கள். மாணவர்கள் எழுதி முடிந்ததும் மீண்டும் பாடப்பரப்பினை விளங்கப்படுத்தினாள் நிவேதா.

தனது கற்பித்தலினை முடித்துக்கொள்ள பத்து நிமிடங்கள் எஞ்சியிருந்தன. படிப்பித்தவை மாணவர்களிடம் சென்றடைந்துள்ள விதத்தினைப் பரீட்சிக்க மதிப்பீட்டு வினாக்களை வழங்கிவிட்டு மாணவர்கள் பதில் எழுதுவதைக் கண்காணித்துக் கொண்டிருந்தாள். வகுப்பறை முழுவதிலும் சுழன்ற பார்வை, ஓரிடத்தில் நங்கூரம் இட்டு நின்றது. அவளது விழிகளின் தேடலில் அகப்பட்டது அக் காட்சி.

ஒரு மாணவன் எழுதிக்கொண்டிருக்க, அவனுக்கு அருகில் இருந்த மற்றொரு மாணவன் அவன் எழுதியதைப் பார்த்துப் பார்த்து எழுதிக்கொண்டிருந்தான். நிவேதாவின் உதடுகள் துடித்தன. இன்னும் கொஞ்சம் பொறுமையாக அவதானிப்போம் என வேறு பக்கமாகத் திரும்பி, பின் மீண்டும் அம் மாணவர்களை அவதானித்தாள்.

அப்போதும் முன்பு போல் ஒருவன் எழுத, மற்றவன் பார்த்து எழுதிக் கொண்டிருந்தான்.

அவள் கொண்டிருந்த பொறுமை எங்கோ பறந்து செல்ல, பரபரப்படைந்தாள். மறு வினாடி அவர்களின் முன் ஆத்திரத்துடன் நிவேதாவின் உருவம் போய் நின்றது. ஆவேசத்துடன் அம் மாணவனை எழுப்பினாள். அவன் பயந்து விழித்துக்கொண்டிருந்தான்.

"நான் படிப்பித்தது விளங்கலயா?"

"விளங்குச்சி டீச்சர்....."

"அப்ப ஏன் பக்கத்தில் இருந்தவர் எழுதியத பார்த்து எழுதினீங்க?"

"அவன் பதில் சொல்லவில்லை. குனிந்து



-செல்வி டி.ராதா, வெலிப்பெண்ணை.

கொண்டான். அவளது கோபம் அதிகரித்தது. மற்ற மாணவனிடம் "இவர் பார்த்து எழுத, நீங்களும் சும்மா இருந்தீங்க...வேண்டாம் என்று சொல்லக் கூடாதா?"

பதற்றமாய் எழுந்து நின்றவனும் மௌனமாக நின்றான். "என்ன நான் கேட்டது காதுல விழுதுதானே? ஏன் அவர்டத பார்த்து எழுதினீங்க?" இரு மாணவரும் மௌனமாக இருக்க நிவேதாவின் குரல் சற்று ஓங்கி ஒலித்தது.

"என்ன ரெண்டு பேர்ட வாயிலயும் பிட்டா இருக்கு. சொல்லுங்களேன்."

பார்த்து எழுதியவனையும் மற்றவனையும் மாறி மாறிப் பார்த்தாள். பார்த்து எழுதிய மாணவனின் கண்கள் பனித்து நின்றன. கண்ணீரைக் கண்டதும் மென்குரலில் "இப்ப நான் என்ன கேட்டன். எதுக்கு அழுறீங்க. ஏன் பார்த்து எழுதினீங்க எண்டுதானே கேட்டன்." பரிவோடு நோக்கி னாள். அப்போதும் அவன் பேசவில்லை.

"கண்ணத் துடைச்சிக்கங்க....சரி சொல்லாட்டி பரவாய் இல்ல. உட்காருங்க..." அவன் உட்காரவில்லை.

"என்னடா நான் சொல்றது எதயும் செய்றான் இல்ல என தனக்குள் கேட்டபடி நகர்ந்தவளை, "டீச்சர், மதனுக்கு" என்ற குரல் தடுத்தது.

"மதனுக்கு என்ன?" "இல்ல டீச்சர் அவனுக்கு அதான் அவனுக்கு என்ன என்று கேட்கிறன்" நாற்காலியில் அமர்ந்தபடி வகுப்புத் தலைவனை அவளது முகம் நிமிர்ந்து பார்த்தது. அருகில் வந்தவன் குரலைத் தாழ்த்தி மெதுவாக "டீச்சர் மதனுக்கு கண் பார்வைக் குறைவு....அதான் அவன் யாராவது போர்ட்ல எழுதுறதப் பார்த்து எழுதினப் பிறகு, அதப் பார்த்து எழுதுவான்..."நிவேதாவின் கண்கள் அகல விரிந்தன. சடுதியாய் நாற்காலியை விட்டு எழும்பி நின்றாள்.

மதன் உட்காராமல் கண்கலங்கி நின்றுகொண்டிருந்த காட்சி அவளது கண் திரையில் பதிந்து போக கன்னத்தின் வழியே நீர்த்துளிகள் பயணித்துக்கொண்டிருந்தன. மதனின் அருகே சென்று, அவனது கண்களைத் துடைத்த நிவேதாவால் பேச முடியவில்லை. வார்த்தைகள் முடமாகிட தடுமாறியபடி "ஸொறி மதன்! இதப்பத்தி தெரிஞ்சிக்காம இருந்துட்டன். உட்காருங்க...நாளைக்கு நீங்க இந்த இடத்தில் இருக்க வேண்டாம்."

"டீச்சர் அப்ப மதன் எங்க இருப்பான்?" "மதன் இனிமேல் முன்வரிசையிலத்தான் உட்கார்வார். நான் உங்க கிளாஸ் டீச்சர்கிட்ட சொல்லி உட்கார வக்கிறன்..." நிவேதா மெல்லிய புன்னகையுடன் கூறினாலும் மனதினில் வேதனை படர்ந்து கொண்டிருந்தது.

அவள் நடந்துகொண்ட விதம் அவளுக்கே தப்பாக இருந்தது. ச்சே! என்ன முட்டாள்தனமா நடந்துக்கிட்டன். அந்த பையன் குறைய முழு வகுப்புமே தெரியும்படி.... எனக்கே வெறுப்பாக இருக்கு. இருந்தாலும் நான் அப்படி அவசரப்பட்டு எல்லார் முன்னிலையிலும் அவனது குறைய பெரிதுபடுத்துற மாதிரி கேட்டு இருக்கக் கூடாது. வகுப்புக்குப் போய் படிப்பிக்கும் முன் பிள்ளைகள்ட நிலைகள நன்றாக தெரிஞ்சுக்கிட்டுத்தான் போகணும். அப்பதான் அதுகள் மனசு நோகாம நடந்துக்கலாம். பாவம் அவன். அவன் குறைய நான் அவன்கிட்டயே கேட்டபோது எப்படி துடிச்சிருப்பான். முழு வகுப்புக்கும் இப்ப தெரிந்து போச்சு. இப்படியொரு குறையுள்ள பிள்ளைக்கு ஏதாவது பரிகாரம் பண்ணியிருக்கலாம். யாருக்காவது அந்த மனசு இருந்திருந்தால் இன்றைக்கு மதன் கண்கலங்கத் தேவை இல்ல. பெற்றோரின் அறியாமை என்றாலும் டீச்சர் கவனிச்சிருந்தால் இவ்வளவு நாளைக்கும் இந்தக் குறை வளர்ந்திருக்காது.

மனது ஆறுதல் தேடியது.

மறுநாள் அதிபருடன் அதுபற்றிக் கதைத்துவிட்டு மதனின் பெற்றோருடன் கலந்தாலோசித்து முடிவொன்றை எடுக்க வழி செய்தாள். அவள் மருத்துவமனைக்குச் சென்று மதனது கண்களைப் பரிசோதித்து தூரப் பார்வைக்கான மூக்குக் கண்ணாடியைப் பெற்றுத் தந்து தனது மனதினைத் தேற்றிக்கொண்டாள் நிவேதா.

இப்போதெல்லாம் நிவேதா மாணவர் விடும் தவறுகளை, பிழைகளை ஏன் எதற்கு என ஆராயாமல் முடிவெடுப்பது கிடையாது. அவள் ஒரு ஆசிரியை. மாணவரைப் புரிந்துகொண்டுதான் அதன்படி படிப்பிக்க வேண்டும் என்பது அவளுக்கு ஆணித்தரமாய் விளங்கிவிட்டது. மனது என்பது கண்ணாடியைப் போல. தூசு படிந்தால் துடைத்துவிடலாம்; ஆனால் வார்த்தைகளின் கீறல்களால் ரசம் இன்றிப்போனால் மனம் எனும் கண்ணாடி உடைந்துவிட்டதற்குச் சமம். எனவே புரிந்துணர்வுடன் இருக்க விரும்பும் அவள், பிள்ளைகளின் மனம் நோகாது இருக்கும்படி நடந்துகொள்ள முயற்சித்து, மனங்களின் எண்ணங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறாள்; ஒரு ஆசிரியை மாணவியாக மாறி.......

# வேலை இல்லாதவன்

செய்வதற்கு வேலை என்று ஒன்றும் இல்லாத போதும் இயல்பில் ஆதவனைப் போல தினசரி அதிகாலையில் எழுந்துவிடும் மாதவன் ஒரு வேலையில்லாதவன். ஏ.எல். முடித்து மேலதிகமாய் ஒரு கம்பியூட்டர் கோர்ஸும் செய்தவன். வேலைக்காக தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்து விண்ணப்பம் செய்வதும், அதற்கு வரும் நேர்முக அஞ்சல்களை எடுத்துக்கொண்டு நேர்முகத்திற்குச் சென்று வருவதும் கடந்த இரண்டு மூன்று வருடங்களாக இவனது வேலையாக இருக்கிறது. இவன் இதுவரை விண்ணப்பங்களுக்கும், நேர்முகங்களுக்குப் போய் வருவதற்குச் செலவு செய்த பணத்தைச் சேர்த்து வைத்திருந்தாலும் சிறியதாய் ஒரு பெட்டிக் கடை போட்டு ஏதேனும் வியாபாரம் செய்திருக்கலாம். ஆனாலும் எப்படியும் தனது படிப்பிற்கேற்ப ஒரு தொழில் அமையும் எனும் நம்பிக்கையில் குடும்பத்தாரினதும், அக்கம் பக்கத்தினரினதும் 'தண்டச்சோறு' எனும் மேலதிகப் பட்டத்தைப் பெற்றவனாய், தன் முயற்சியில் தளராத விக்ரமனைப்போல் தொடர்ந்தும் முயற்சித்துக் கொண்டிருந்தான்!

அன்றும் அப்படித்தான் ஒரு நேர்முகத்திற்குப் போய் ஏமாற்றங்களால் கோணல் முகத்தோடு வீட்டுக்குள் நுழைந்தான்.

"அண்ணா வா....இந்தா உனக்கொரு கடிதம். ஏதோ வெளிநாட்டுக் கடிதம் போல் இருக்கிறது" தந்து விட்டுப் போன தங்கையிடம் இருந்து வாங்கிப் பார்த்தான். அது அவனோடு ஒன்றாய் படித்த உயிர் நண்பன் விக்ரம் எழுதியது.

சந்தோசத்தோடு கடிதத்தைப் பிரித்துப் படித்தவனுக்கு சந்தோசம் மழைக்காலத்தில் பெருக்கெடுக்கும் பூண்டுலோயாவின் பெரிய ஆறாய் பாய்ந்தது. காரணம், இவன் நிலைமை அறிந்த விக்ரம் தன்னோடு, தான் வேலை செய்யும் நாட்டிற்கு வருவதற்கு ஒரு விசா அனுப்பி இருந்தான்.

"அம்மா....அம்மா" என்று சத்தமிட்டவாறே ஓடிச்சென்று அந்த வீசாவை தாயிடம் காண்பித்து, "அம்மா விக்ரம் எனக்கு கட்டார் போறதுக்கு வீசா அனுப்பியிருக்கிறான். அங்கே போனதும் ஏதாச்சும் வேலை தேடித் தாறானாம். டிக்கெட்டிற்கும், மெடிக்கலுக்கும், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு காப்புறுதியாய் கட்டும் பணம் கட்டினால் போதுமாம். ஒரு முப்பதினாயிரம் இருந்தால் போதும். நான் அங்கே போய் வேலையில் சேர்ந்திடுவேன். அம்மா! அப்பாவிடம் சொல்லி எப்படிச்சரி பணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் கேட்டால் தரமாட்டார்." மூச்சுவிடாமல் சொல்லி முடிக்க உண்மையாவாடா!"

"இதோ பாரும்மா இதுதான் வீசா கொப்பி. இத அப்பாவிடம் காண்பிங்கம்மா, சரி சரி கொடு நான் அவர்



வந்ததும் கேட்டுப்பார்க்கிறேன். இவ்வளவு பணத்திற்கு அவர் என்ன செய்வாரோ!"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. எப்படி சரி ஏற்பாடு செய்யுங்க."

சரி சரி நீ கடைக்குப் போய் இந்த பலசரக்குச் சாமான்களை வாங்கி வா" என அனுப்பி வைத்தாள்.

செல்லும் வழியில், 'இவ்வளவு காலம் பட்ட கஷ்டத்திற்கு ஒரு நல்ல வழி அமைந்துவிட்டது. இனி வெளிநாடு போய்விட்டால் எல்லாக் கஷ்டமும் தீர்ந்துவிடும். தங்கையின் கல்யாணத்தை முடித்துவிட்டு நாலு காசு சம்பாதித்து நாலு பேரைப் போல் நல்லா இருக்கலாம்' என பலவாறான எண்ணங்களோடு சென்றவன் வரும் வழியில் சந்தியில் இருந்த பிள்ளையார் கோவிலுக்குச் சென்று தேங்காய் உடைத்து வேண்டிக்கொண்டான்.

வீட்டுக்கு வந்ததும் அப்பாவும் வேலைக்குச் சென்று திரும்பி இருந்ததைக் கண்டதும் சந்தோசமாக இருந்தது. உள்ளூரில் வேலை தேடி அலைந்த பொழுதுகளில் வருத்தப்பட்ட அப்பாவும் தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைந்தபோது மகிழ்ச்சியுற்று ஊரில் தனக்குத் தெரிந்தவர்களிடம் எப்படியோ பணத்தைப் பெற்று அடுத்த வாரமே 'எயார் லங்கா' மூலம் மாதவனை கட்டாருக்கு அனுப்பி வைத்தார். தோஹா விமான நிலையத்திற்குச் சென்று மாதவனை அழைத்து வந்த விக்ரமும் தனது அறையிலேயே மாதவனை தங்கவைத்தான். விசா கொடுத்த ஷேக்கிடம் கூட்டிச் சென்று அறிமுகப்படுத்தி தொழில் விசாவும் பெற்றுக் கொடுத்தான். எல்லாம் நன்றாகவே நடந்து முடிந்தது. வேலை மட்டும் வெளியில் தேட வேண்டும் என் நிர்ப்பந்தத்திற்குட்பட்டவனாய் இங்கு வந்ததும் வெலை தேடத் தொடங்கினான். விக்ரமும் பல இடங்களில் சொல்லி வைத்தான். இருந்தும் பயன் பூச்சியமாய் போக, இங்கும் வேலை தேடும் தனது பழைய வேலையால் நண்பனுக்கும் உபத்திரவமாய், நாட்டிற்கும் திரும்ப முடியாமல் ஆறு மாதங்களைக் கடத்திவிட்டான். உள்நாட்டில் வேலை இல்லை என்று வெளிநாடு வந்தபோதும், வெளிநாட்டிலும் வேலை இல்லை என்னும் துரதிர்ஷ்டம் இவனோடு விமானம் மூலமாகத் துரத்திக்கொண்டே வந்துவிட்டது. "என்ன செய்ய" எல்லாவற்றிற்கும் ஒரு யோகம் வேண்டும்" என தினசரி பெருமூச்சிலும், கண்ணீரிலும் காலத்தைக் கழிக்கும் மனம் நொந்த மாதவனைப் போல் ஏராளமான மாதவன்கள் இங்கும் உள்ளார்கள் என்பதை வெளிநாட்டுக் கனவுகளில் மிதக்கும் யாவரும் கொஞ்சம் சிந்திப்பார்களா?

"இது நிஜங்களின் நிழல்கள்."

**-மெய்யன் நட்ராஜ், டோஹா - கட்டார்.**

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

## சிந்தித்துப் பார்க்க...

# சந்தேகம் புற்று நோய்க்குச் சமம்

* இன்று நீங்கள் சொல்லும் பொய்யானது மீண்டும் நாளையும் உங்களைப் பொய் சொல்லத் தூண்டும்.
* உங்களுடைய திறமையும் நற்குணங்களும் தவறாக உபயோகிக்கப்பட்டால், இழப்பை அடைபவர் நீங்களே.
* உண்மை, உண்மையேதான்.
* உங்களுக்குத் தெரியுமென நீங்கள் கூறலாம், ஆனால் அது உங்கள் செயல்களால் தெரிய வரும்.
* தூய அன்பே நிலைபேறான உறவுகளுக்கு அடிப்படையானது.
* தூய பண்புகள் கருணை நிறைந்தவை, தூய்மையற்றவை அவமானத்தை தேடித் தருகின்றன.
* நியாயமானவர்கள் ஆகும்போது நீங்கள் பிழைகளிலிருந்து விடுதலை பெறுவீர்கள்.
* தன்னை அறிவதற்குத் தனக்கே உண்மை உடைவனாய் இருத்தல் அவசியம்.
* ஒருவர் எளிமையாக இருக்க வேண்டும். ஆனால் மதிகெட்டவராக அல்ல.
* உங்கள் மனச்சாட்சி ஒரு நல்ல நண்பன். அதற்கு அடிக்கடி செவிமடுக்கவும்.
* இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவது உங்களுடைய சொந்த விருப்பத்தை நிறைவேற்றுவதாகும்.
* இறைவனின் குழந்தையாக இருப்பது அவரது நற்குணங்களை வெளிப்படுத்துவதாகும்.
* நீங்கள் பிழையைச் செய்த பின்னர் அதனைச் சரியென்று நிரூபிக்க முயலுவீர்களாயின் காலம் உங்கள் மடமைத்தனத்தைப் பார்த்து நகைக்கும்.
* எனது மனதில் உள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்யவில்லையெனில் அது புற்றுநோயை வளர விட்டதற்கு ஒப்பாகும்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

# கொடைக்கு ஒரு பாரி; மழைக்கு ஒரு மாரி

அடித்து ஊற்றிய மழை தன் பாய்ச்சலை நிறுத்திவிட்டிருந்தது. இப்போது நீர்த்துளிகள் மட்டும் சடசடவென்று கொட்டிக்கொண்டிருந்தன. பிறகு அவை வேகம் இழந்து மென்மையான தாளமாக மாறின.

உயிர் முழுதும் நிறைந்து ஊற்றிய மழையையும், இப்போது வெள்ளத்தின் மீது தட் தட்டென விழுந்து துள்ளும் இனிய தாளத்தையும் இரசித்தவாறு நின்றிருந்தாள் நயனா. மழை குறித்த பெருமித உணர்வுகள் அவளுள் நிறைந்தன.

மழையின் பயன்களை நினைத்தா அது பற்றிய பெருமித உணர்வுகள் அவளுள் நிறைந்தன.

மழையின் பயன்களை நினைத்தா அது பற்றிய பெருமித உணர்வு மனிதர்களுக்கு ஏற்படுகிறது? என யோசித்தாள். மழையின் ஓசை, பாய்ச்சல், குளிர்மை, வெட்கையின் எரிச்சலைப் போக்கிவிடும் இதம்...... இதெல்லாம் கூட மழை மனதைக் கும்மாளமிட வைப்பதற்குக் காரணம் என்று தோன்றியது.

ஆனால், அதற்கும் மேலாக, இந்த மழை வானத்திலிருந்து மனிதர்களுக்கு வருகிற மாபெரும் கொடை அல்லவா! பூமியைச் செழிக்க வைத்து மேலும் கொடைகளை நாம் வாழத் தந்து கொண்டிருப்பதல்லவா!

மழையும் நிலமுமாக இணைந்து தரும் இந்தக் கொடைகளுக்குக் கைமாறாக மனிதர்கள் என்ன தர முடியும்?

இந்த மழையிடமிருந்தும் பூமியிடமிருந்தும் நம் வாழ்வுக்கு எவ்வளவை எடுத்துக் கொள்கிறோம்! இதற்கெல்லாம் யாரால் பிரதியுபகாரம் செய்ய முடியும்? உபகாரம் செய்ய வேண்டாம், இயற்கை தந்த வளங்களை அழிக்காமலாவது

**தருவது முழடில்யன்**

இருக்க வேண்டாமா? வானமும் பூமியும் தரும் இந்தச் செல்வங்களைக் கொள்ளையடிக்க நமக்கென்ன அதிகாரம்?

உடல் நடுங்கிக் குளிர்ந்தது. அந்தக் குளிரை முழுதுமாக அனுபவிக்கும் ஆவலில் நயனா போர்த்திக் கொள்வதைத் தவிர்த்தாள். கைகளால் உடலை இறுக்கிக் கொண்டாள். உடலைக் குறுக்கிச் சற்றே குனிந்து மழைக்கு மரியாதை செய்தாள்.

இந்த மரங்களும் செடிகளும்தான் எத்தனை குதூகலமாக மழையை வரவேற்று அசைந்தாடுகின்றன. சிலிர்த்துச் சிரிக்கின்றன! மழைக்குத் தலை தாழ்த்தி, மழை விட்டவுடன் தலையாட்டிக் களிப்பை வெளிப்படுத்தின புற்கள். வேலியோரப் பூக்கள் ஊதாவும் சிவப்பும் மஞ்சளுமாக குளித்த மலர்ச்சியோடு சிரித்தன.

மழைக்குள்ளும் அணையாத தீச்சுடர்களாக மாமரத்தின் கொழுந்துகள் நெளிந்து வான்நோக்கி அசைந்தன. இன்னும் வானம் இருண்டே கிடந்தது.

மரங்கள் மழையில் நனைந்து பிரமையில் அமிழ்ந்தாற் போல் அசைவற்றிருந்தன.



தரையில் சிறு சிறு குளங்கள், விழும் ஒவ்வொரு துளிக்கும் சலனமுற்று வட்டங்கள் வரைந்து கொண்டிருந்தன. ஆங்காங்கே மின்னியது. வானம், ஒரு கருநீலத் திரை இலேசாக அசைவது போலத் தெரிந்தது. நயனாவுக்கு அத்தனை குளிரிலும் அதைப் பார்த்துக் கொண்டே வெளியே நிற்கலாம் போலிருந்தது. பார்த்துப் பார்த்து அப்படியே மிதந்து ஆகாயத்திற்குள் சென்று மறைந்துவிட வேண்டும்; ஒன்றுமில்லாமல் ஆகிவிட வேண்டும். மழைக்குள் தன்னைக் கரைத்துக் கொள்ள வேண்டும்.

'இந்த மண்ணுக்கு மழை கொடுப்பது எல்லோருக்கும் தெரிகிறது. அந்த மழைக்கு கடல் கொடுப்பது யாருக்கும் தெரிவதில்லை' என்று யாரோ எழுதியிருந்தது ஞாபகத்திற்கு வந்தது.

மீண்டும் மழை பலமடைய ஆரம்பித்தது. அதுவரை தெரிந்த காட்சிகள் அனைத்தையும் நீர்த் தாரைகள் மங்கலான திரையாக்கி மறைத்தன.

மழை பொழிந்த மண்ணின் குளிர் வினோத நறுமணமாய் அவள் ஆத்மாவுடன் உரையாடுவதை உணர்ந்தாள். உள்ளத்திலும் பல மொட்டுகள் மலர்ந்தன.

கொட்டிய நீர்த்தாரைகளின் ஊடே நீலமும் பசுமையும் படர்ந்து தூரத் தெரிந்த மலைகள் கண்ணை நிறைத்தன. அவற்றைப் பார்த்தபடியிருந்த நயனாவுக்கு அவை அசைவதாகவும் தோன்றியது. மழைக் குளிரில் அவை தம் அழைப்பை அனுப்பிக் காத்திருப்பவையாகத் தோன்றின. மேகங்கள் கனவுத் திரள்களாக மலைகளை மூடியிருந்தன.

மலையின் சிகரங்களுக்கு மழையின் ஊற்றுப் பிறக்கும் மேகங்களைத் தழுவும் வாய்ப்பு! நினைத்தாலும் நெருங்க முடியாத தூரத்தில் சிகரத்தை வைத்திருக்கும் அந்த மலைகளை எண்ணியும் அவள் மனதில் ஏக்கம் உண்டானது.

குளிர் தடவி வந்த காற்றுக்கு உடல் சில்லிட்டது. மழை மகிழ்ச்சியால் தன்னை நிறைப்பதை நயனா உணர்ந்தாள். இந்த மழைக்குத் தானம் கொடுத்த கடலையும் மனதுள் நினைந்தாள்.

மழையின் கொடையைப் பாராட்டிப் புகழ்வதுபோல, பாரியின் கொடையை ஏத்திய கபிலரின் பாடல் நினைவுக்கு வந்தது. கொடைக்காகப் பாரியை மட்டும் புகழ்வது சரியல்ல, அவனுக்கிணையாக உலகைக் காப்பதற்கு மழையும் இருக்கிறது என்று ஞாபகப்படுத்துவது போல அவர் பாரியைப் போற்றிய விதமும் அவள் நெஞ்சை நனைத்தது.

*பாரி பாரி யென்று பல ஏத்தி*
*ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்*
*பாரி ஒருவனும் அல்லன்*
*மாரியும் உண்டு ஈண்டு*
*உலகு புரப் பதுவே.*
*(புறம் - 107)*

---

**✉ பெரும்பான்மைத் தமிழ் மக்கள் ஒரு கொலையை எதிர்க்காமலிருக்கும் போது அதை ஒருவர் மட்டும் எதிர்ப்பது எப்படிச் சரியாகும்?**

-த.நிருபன், தோப்பூர்.

ஈராக்கில் புகுந்து அந்த மக்களைக் கொன்று குவித்துக்கொண்டிருப்பதை எதிர்க்கத் தேவையில்லை என்றுதான் பெரும்பான்மை அமெரிக்கப் பொதுமக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். அது போன்றதொரு இறுமாப்புச் சுயநலத்தைச் சரியென்று ஒப்புக்கொள்வது போலத்தான் இதுவும்!

**✉ "கேள்விப்பட்டேன்" என்று சொல்வது போல "விடைப்பட்டேன்" என்று ஏன் சொல்வதில்லை?**

-ஆர்.உமாதேவி, கினலன் எஸ்டேட்.

இந்தக் "கேள்வி" அல்ல அது. 'கேள்விச் செல்வம்' என்பது காதால் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் அறிவு. அதனால்...கேள்விப்படலாம்! விடைப்படுவது எருதேறுவதில்தான் முடியும்!

**✉ நீங்கள் போக விரும்புவது சொர்க்கத்திற்கா? நரகத்திற்கா?**

-கோபி பிரியா, வெலிமடை.

கண்ணதாசன் சொன்னதுதான்.... எதுவானாலும் மகிழ்ச்சி. இரண்டு இடங்களிலும் எனக்குப் போதுமானளவு நண்பர்கள் இருக்கிறார்கள்.

**✉ புலிகளைப் போல கருணாவிற்கும் இடைக்கால நிருவாகத்தை மட்டு - அம்பாறைக்குக் கேட்கத் தார்மீக உரிமை உள்ளதல்லவா?**

-எஸ்.ஜெயந்தன், திருகோணமலை.

தார்மீக உரிமை என்பது, எதிர்த்துப் பேசுகிறவர்களையெல்லாம் தயக்கம் எதுவும் இல்லாமல், தடை எதுவும் இல்லாமல் கொன்றுவிடக்கூடிய பலம் இருக்கிறதா என்பதைப் பொறுத்தது!

**✉ அர்ஜுனின் 'கிரி' எப்படி?**

-வ.ஸ்ரனி, கொடிகாமம்.

தமிழ் ஹீரோவுக்கு எத்தனை கொலைகளை வேண்டுமானாலும் செய்வதற்கு யாரும் ஏன், எதற்கு என்று கேட்டுவிட முடியாத அங்கீகாரம் உண்டு. கொடூரமாகவும் குரூரத்தனத்தோடும் அவன் வெறிகொண்டு தாக்கி, 'சதக் சதக்'கென்று கொலைகள் செய்வதை திருப்தியோடு, மகிழ்ச்சியோடு, இன்னும் இன்னும் என்ற எதிர்பார்ப்போடு இரசிக்கிற பார்வையாளர்களை அடையாளப்படுத்துகிற மற்றுமொரு தமிழ்ப் படம்! ஒரு மனிதன் இன்னொரு மனிதனை வதைக்கும், அந்தக்கால அடிமைச் சண்டைக்கு ஒப்பான கேளிக்கை உணர்வுடன், எப்படி ஆர்ப்பரித்து இரசிக்க முடிகிறது இன்றைய பண்பாட்டு வளர்ச்சி பெற்ற மனிதனால்? என்ற கேள்வி எழுவதை தியேட்டரிலிருந்து வெளியே வருகையில் தவிர்க்க முடியாது.

**✉ வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு ஏதாவது யோசனை சொல்லுங்களேன்?**

-என்.சலேத், ஹாலி - எல.

அக்பருடைய அரசவையில் இருந்த பிரபல இசைக் கலைஞரான தான்சேன் பற்றி இப்படிச் சொல்கிறார்கள் : "அவரிடம் யாரையும் தோற்கடிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்ததில்லை. அதனால்தான் அவர் தொடர்ந்து வெற்றி பெற்றுக்கொண்டே இருந்தார்."

நீங்களும் முயற்சி செய்து பாருங்கள்.

**✉ அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியைத் தோற்கடிக்க என்ன வேண்டும்?**


-றெ.பி.மரியநேசன், நானாட்டன்.

அணித் தேர்வாளர்கள் மற்றும் கிரிக்கெட் அதிகாரிகளை அரசியல் ரீதியாக நியமிக்காத ஒரு நாட்டின் அணி.

**✉ "யுத்தமோ, சமாதானமோ எதற்கும் தயார்" என்று தலைவர் அறிவித்திருக்கிறாரே?**

-எம்.சசி, வட்டக்கச்சி.

சரி, 'மக்கள் தயாரா?' என்று திருப்பிக் கேட்க நினைக்கும் கோழைகள், துரோகிகளைப் போட்டுத் தள்ளிவிட வேண்டியதுதான்!




**✉ அண்மையில் உங்களை மகிழ்ச்சிப்படுத்திய விஷயம்?**

-இரா.பரந்தாமன், குயின்ஸ் டவுன்.

"உழைப்பை ஒழிப்போம்" என்ற தலைப்பில் போல் ல.'.பாக், போப் பிளாக் ஆகியோர்(எழுதிய கட்டுரைகளைப் படித்தது. உழைப்பதின் பெருமையையும், சுறுசுறுப்பின் மேன்மையையும் உன்னதமான விஷயங்களாக ஏழைகளுக்குப் போதிக்கப்படுவது....உல்லாசத்தை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களின் ஏமாற்றும் மோசடியும்தான் என்கிறார்கள் கட்டுரையாளர்கள். "சுதந்திரமாகவும் சோம்பலைச் சுகித்து வாழும் அமெரிக்கன், பிரெஞ்சு விவசாயியின் எருது போன்று உழைத்து வாழும் வாழ்க்கையை விட, ஆயிரம் முறை மரணத்தைத் தழுவ ஒப்புக்கொள்வான். பிரான்ஸில் மிகக் கடினமானதாகவும் தொழிலாளர்களை வேறு எதுவும் செய்ய விடாமல் முடக்குவதாகவும் உள்ள உழுதல், அமெரிக்க மேற்கில், உட்கார்ந்துகொண்டே எந்தக் கவலையுமில்லாமல் புகைத்துக்கொண்டே செய்யும், விருப்பபூர்வமான திறந்தவெளிப் பொழுதுபோக்காக இருக்கிறது..."என பல்வேறு உதாரணங்களை அடுக்குகிறார்கள். "இனி யாரும் உழைக்காதீர்கள். உலகத் தொழிலாளர்களே.... ஓய்வெடுங்கள்" என்று அறைகூவுகிறார்கள். 'வயிற்றைக் கழுவ மாய்ந்து மாய்ந்து உழைப்பதைத் தவிர வேறு வழியில்லையே' என்று சலித்துக் களைப்படையும் மனத்துக்கு, "ஹையா!" என்று துள்ளிக் குதிக்கவைக்கும் வாதங்களைப் பார்த்தால் மகிழ்ச்சி இல்லாமல் வேறென்ன!

**✉ யதார்த்தவாதி என்றால் என்ன?**

-ஏ.எம்.ஏ.அஸீஸ், காத்தான்குடி - 05.

தென்னிந்திய நடிகர்களில் இன்றைய திகதிக்கு அதிக படங்களில் நடித்துக் கொண்டிருப்பவர் சத்யராஜ். ஒரு கோடி ரூபாய் செலவுக்குள் படத்தை எடுத்து முடித்துவிட வேண்டும். தன் சம்பளமும் அதற்குள்ளேயே! நாற்பது நாட்களில் படத் தயாரிப்பு முடிந்து திரைக்கு வந்துவிட வேண்டும். இவைதான் அவரது நிபந்தனைகள். இதற்கு அவர் சொல்லும் காரணம். "இந்தச் செலவுக்குள் படத்தை முடித்தால், மூன்று வாரமே ஓடினாலும் பணம் போட்டவருக்குக் கொஞ்ச லாபம் வந்துவிடும். நானும் ஏதோ சும்மா இருக்காமல், வேலை செய்து சம்பாதித்துக்கொண்டிருப்பதாக

## சிந்தியா பதில்கள்

இருக்கும்...இதற்கு மேல் நான் வேறென்ன எதிர்பார்க்க முடியும்?

இதுதான் அது.

**✉ அரசின் உளவாளிகள் என்றும், விடுதலைக்குத் தடையானவர்கள் என்றும், துரோகிகள் என்றும் நிராயுதபாணிகளான பலர் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய போரற்ற சூழ்நிலை பற்றி என்ன சொல்கிறீர்?**

-ஏ.அகமது முகம்மது, காத்தான்குடி.

வலியவர்கள் எளியவர்களை அழிக்கும் போது கேள்வி கேட்பார் யாருமில்லை என்ற ஆதி மனித காட்டுமிராண்டிக் கால நியாயம்... திரும்பவும் நம் நாகரிக வாழ்க்கையாக!

**✉ அணு அணுவாய் சாவதற்கு காதல் மட்டும்தான் வழியா?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

அணு அணுவாய் வாழ்வை இரசிப்பதற்கும் அதுதான் வழி!

**✉ மனிதர்களை யார், எப்படி என்று அடையாளங் கண்டுகொள்ளச் சுலபமான வழி ஏதும் இருக்கிறதா?**

-பெ.கோகிலன், மேபீல்ட்.

ஓர் அரசன். அவனுடைய சபைக்கு வந்து மாபெரும் இசை மேதைகளெல்லாம் பாடியிருக்கிறார்கள் - ஒரே ஒரு பாடகரைத் தவிர. அது அவனுக்கு மிகவும் கவலையாக இருந்தது. "அவர் ஏன் வரவில்லை? என்ன காரணம்?" என்று கேட்டான். மந்திரிகள் பதில் சொன்னார்கள். "அவருடைய விதிமுறைகள் பைத்தியக்காரத்தனமானவை. அவருடைய இசையைக் கேட்கும்போது யாருடைய தலையும் அசையக் கூடாதாம். அசைந்தால் அந்தத் தலைகளைத் துண்டித்துவிட வேண்டுமாம். இந்த நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டால்தான் அவர் வருவார்" என்றனர்.

அதற்கு அரசன், "நீங்கள் இதை முன்பே எனக்குச் சொல்லியிருக்க வேண்டும். உடனடியாக அவரை அழையுங்கள். யாரெல்லாம் அந்த இசையைக் கேட்க விரும்புகிறார்களோ, அவரது கட்டுப்பாட்டை ஏற்றுக்கொண்டால் வரலாம் என்று அறிவியுங்கள்" என்றான்.

அந்தப் பாடகரின் இசையைக் கேட்கப் பத்தாயிரம் பேர் வந்தார்கள். யாரெல்லாம் தலையை அசைக்கிறார்கள் என்பதைக் கண்காணிக்கும்படி தன் காவலர்களுக்கு உத்தரவிட்டான். இடையில் தலையை வெட்டினால், இதைக் கலைஞருக்கு இடையூறாகி விடுமென்பதால், கவனித்துக்கொள்ள மட்டும் சொன்னான். பன்னிரண்டு தலைகள் மட்டும் அசைந்தது கவனிக்கப்பட்டது. சங்கீதம் முடிந்த பிறகு, "பன்னிரண்டு பேர்கள் மட்டும் கட்டுப்பாட்டை மறந்து அசைந்தார்கள். அவர்களுடைய தலைகளை வெட்டிவிடவா?" என்று கேட்டான் அரசன்.

வேண்டாமென்று தலையாட்டிய அந்த இசைக் கலைஞர் சொன்னார், "இவர்கள் மட்டுமே என் இசையைக் கேட்கத் தகுதி படைத்தவர்கள். மற்றவர்களை அனுப்பிவிடுங்கள். அவர்களுடைய கவனமெல்லாம் தங்கள் உயிரைப் பற்றியே இருந்தது. அவர்களுக்கு இசை தேவையில்லை. இந்தப் பன்னிரண்டு பேர்களுக்கும்தான் இசை வாழ்க்கையை விட மேலான ஒன்று. இசையின் மேன்மை புரிந்தவர்கள் இவர்களே!"

சரியான ஆட்களை அடையாளம் காணும் வழி இதுதான்!

# கிரிக்கெட்டின் வரலாறு



தனது கிரிக்கெட் வாழ்க்கையிலேயே முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளரான ஆர்.ஏ.எல்.மெஸீ, கிரிக்கெட் விளையாட்டின் தங்க ஆலயம் என அழைக்கப்படும் லண்டன் நகரில் உள்ள லோட்ஸ் மைதானத்தில் தனது பந்து வீச்சின் மூலம் மறக்க இயலாத திறமையைப் பதித்துச் சென்றுள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் இப் போட்டி 1971ஆம் வருடம் ஜூன் மாதம் 22, 23, 24, 25ஆம் திகதிகளில் நடைபெற்றது. கிரிக்கெட் வரலாற்றில் இப் போட்டியானது மெஸீயின் போட்டி என்றே அழைக்கப்படுகின்றது.

மெஸீ முதலாவது இன்னிங்ஸின்போது 84 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்ஸ்ஸில் 53 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளுமாக இரண்டு இன்னிங்ஸ்களிலும் 137 ஓட்டங்களுக்கு 16 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இவரது சிறந்த துடுப்பாட்டம் காரணமாக மேற்படி போட்டியில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுகளால் இலகுவான வெற்றியை ஈட்டிக்கொண்டது.

லோட்டஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிகு டெஸ்ட் போட்டியின்போது அவுஸ்திரேலிய அணி சார்பில் கிரேச் செப்பல் மற்றும் இயன் செப்பல் சகோதரர்கள் விளையாடினர். கிரேக் செப்பல் இதன்போது 131 ஓட்டங்களையும் இயன் செப்பல் 56 ஓட்டங்களையும் பெற்றனர். அதே நேரம் இவர்கள் இருவரும் மூன்றாவது விக்கெட்டுக்காக 75 இணைப்பாட்டங்களைப் பெற்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இப் போட்டியின்போது இங்கிலாந்து அணி 272 - 116 என்ற ரீதியில் ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலிய அணி 308 மற்றும் இரண்டு விக்கெட்டுகளுக்கு 81 என்ற நிலையில் ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் திறமையாகப் பந்துவீசிய ஆர்.ஏ.எல்.மெஸீ அவுஸ்திரேலிய அணிக்காக 6 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமே பங்குபற்றி 31 விக்கெட்டுகளைப் பெற்றார்.

உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடைபெற்று 100 வருடங்கள் கழிந்த நிலையில் நடைபெற்ற நூற்றாண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போதும் முதலாவது போட்டியில் பெற்றதைப் போல் அவுஸ்திரேலிய அணி 45 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றது. இது ஒரு அபூர்வமான நிகழ்வாகவே கணிக்கப்படுகின்றது.

மேற்படி வரலாற்றுப் புகழ் மிக்க டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 1977 மார்ச் மாதம் 12, 13, 14, 16 மற்றும் 17ஆம் திகதிகளில் அவுஸ்திரேலியாவில் மெல்போன் நகரில் உள்ள மெல்போன் மைதானத்திலேயே நடைபெற்றது. இதேநேரம் உலகின் முதலாவது டெஸ்ட் போட்டி இதே மைதானத்தில் 1877 மார்ச் மாதம் 15 முதல் 19ஆம் திகதி வரை நடைபெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த நூற்றாண்டுப் போட்டியின்போது அவுஸ்திரேலிய அணி சார்பில் கிரேக் செப்பல், டக்வோல்டர்ஸ், ரொட்னி மாஷ் மற்றும் டெனிங் லிலி போன்ற உலகப் புகழ் பெற்ற வீரர்களும் இங்கிலாந்து சார்பில் டெரேக் அன்டர்வுட், டெனிஸ் ஏம்ஸ், எலன் நொட் போன்ற உலகப் புகழ் பெற்ற வீரர்களும் பங்கேற்றனர்.

இப் போட்டியின்போது அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸ்ஸில் 138 ஓட்டங்களையே பெற்றது. இங்கிலாந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. எனினும் இரண்டாவது இன்னிங்ஸின்போது இரு அணிகளுக்கும் கூடுதலான ஓட்டங்களைப் பெற முடிந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட் இழப்புக்கு 419 ஓட்டங்களைப் பெற்றது. ரொட்னி மாஷ் ஆட்டமிழக்காமல் 110 ஓட்ங்களைப் பெற்றார். இங்கிலாந்து அணி 417 ஓட்டங்களைப் பெற்றதால் அவுஸ்திரேலிய அணி 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சார்பில் டெரெக் 174 ஓட்டங்களைப் பெற்றார்.

உலகில் சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவராகக் கணிக்கப்படும் அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த டெனிங் லிலி முதலாவது இன்னிங்ஸின்போது 26 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளையும் இரண்டாவது இன்னிங்ஸ்ஸின்போது 139 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும் பெற்றார்.

இப் போட்டியின் நடுவர்களாக ரீ.எப்.பான்ஸ், எம்.ஜி.ஓ.கொனெல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அடுத்த இதழில் இலங்கையின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி குறித்துப் பார்ப்போம்.

**-மைந்தன்.**

# தமிழ் ஊடகங்கள் எதனை நோக்கிப் போகின்றன?

இலங்கையிலும் புலம்பெயர்ந்த தேசங்களிலும் பணியாற்றுகின்ற தமிழ்மொழி ஊடகங்களில் பல தார்மீகச் செயற்பாட்டுப் பொறுப்பிலிருந்து விலகிச் செல்வதையே காணக் கூடியதாகவுள்ளது. பெருமளவிலான அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் வரித்துக்கொண்டு பக்க சார்பான பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதை அண்மைக் காலத்தில் காணக் கூடியதாகயுள்ளது.

இத்தகைய போக்கு தமிழ் சமூகத்தை - அதன் சிந்தனையை மிக மோசமான பின்னடைவை நோக்கி தள்ளி வருவதை இங்கு சுட்டிக்காட்டுவது பொறுப்பு வாய்ந்த ஒரு பணியாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

ஒரு தனிமனிதனுக்கோ, ஒரு அமைப்புக்கோ, ஒரு ஊடக நிறுவனத்திற்கோ தமது கொள்கை, நோக்கங்களின் அடிப்படையில் எழுதுவதற்கும் விமர்சனம் செய்வதற்கும் தார்மீக உரிமையுண்டு.

எழுத்துச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரத்திற்கான உரிமையை யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது! இதனைத் துஷ்பிரயோகம் செய்யும் வகையிலும், அதனைத் தவறாக - சமூகப் பின்னடைவுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்துவது பற்றியுமே இங்கு நாம் பேசுகிறோம்.

இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகள், தமிழ் சமூகத்தின் உணர்வுகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் மிகச் சரியாகவும், நேர்மையாகவும் இருத்தல் வேண்டும். அவை வெறும் பக்கச் சார்பானவையாக இருத்தல் கூடாது. பத்திரிகையின் எழுத்துக்கள் அதிகார வர்க்கத்திற்குச் சார்பான மனோநிலையை வெளிப்படுத்தி மேலும் மேலும் தமிழ் மக்களை தவறான திசையிலும் அழிவையும் பின்னடைவையும் நோக்கியும் தள்ளக் கூடாது.

பத்திரிகைகள் ஏன் வெளிவருகின்றன? அவை மக்களுக்கு எத்தகைய வழிகாட்டுதல்களை தெளிவுகளை வழங்குதல் வேண்டும்? அவற்றின் சமூகப் பொறுப்பு என்ன என்பது தொடர்பாக நாம் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு வந்துவிட்டோம். இன்று பணி செய்கின்ற தமிழ் ஊடகங்கள், மிகக் குறிப்பாக அச்சு

**எழுத்துச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரத்திற்கான உரிமையை யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது! இதனைத் துஷ்பிரயோகம் செய்யும் வகையிலும், அதனைத் தவறாக - சமூகப் பின்னடைவுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்துவது பற்றியுமே இங்கு நாம் பேசுகிறோம்.**

ஊடகங்கள் அதிலும் வெகுஜன பத்திரிகைகள் தமது கடமையைச் சரிவர ஆற்றுகின்றனவா என்கிற கேள்வி நியாயமான ஊடகவியலாளர்களுக்கும் சமூக சக்திகளுக்கும் எழுந்துள்ளது.

தமிழ்த் தேசியத்தின்பால், தமிழர் உரிமையின்பால் தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்துவது இன்று சமூக அக்கறையுள்ள பத்திரிகைகளுக்கும் எழுத்தாளர்களுக்கும் முக்கிய பொறுப்பாகியுள்ளது. ஆனால், தமிழர் தேசத்தின் இன்றைய இறுகிய அதிகாரப் பசி, அது கோரி நிற்கும் ஜனநாயக மறுப்பு, மக்கள் படுகொலைகள், அச்சுறுத்தல்கள், மாற்றுக் கருத்துகளுக்கு எதிரான மனோவியல் தொடர்பாக இன்றைய பெருமளவிலான அச்சு ஊடகங்கள் மிகப் பக்கசார்பாகவே நடந்துகொள்கின்றன. மேற்குறிப்பிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் நியாயப்படுத்துவதாகவும், ஜனநாயக சக்திகளை மாற்றுக் குரல்களை துரோகிகளாக சித்தரிப்பதிலும் மேற்கூறப்பட்ட பத்திரிகைகள் 'நான் முந்தி நீ முந்தி' என அடிமை விசுவாசம் காட்டத் தொடங்கிவிட்டன. இத்தகைய நிலை உண்மையில் ஊடகச் சுதந்திரத்திற்கு எந்த அர்த்தத்தினை வழங்கும் என்பதை தங்கள் மனச்சாட்சியைத் தொட்டு இவர்கள் பார்க்க வேண்டும்; இக் கேள்விக்கு விடை அளித்தல் வேண்டும்.

இத்தகைய மோசமான போக்கை நாம் இலங்கை அரசிற்கும், புலிகளுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் அதிகமாகக் காணக் கூடியதாகவுள்ளது. பெருமளவிலான தமிழ்ப் பத்திரிகைகள் அடிமைச் சேவகத்திற்கு தமிழ் ஊடக உலகத்திற்குள் பெரும் போட்டியும் பொறாமையும் நிலவுகின்றது. மறைமுகமாகக் குத்துவெட்டுக்கள் தொடங்கிவிட்டன.

இவை எதற்காக? இத்தகைய பத்திரிகைகள் நியாயமாக நின்று ஏன் எழுதக் கூடாது? அரசியல் தவறுகள் தொடக்கம் ஜனநாயக மறுப்பினை எத்தனை பத்திரிகைகள் தட்டிக் கேட்டிருக்கின்றன? சுட்டிக்காட்டியிருக்கின்றன.

1985க்குப் பின் யாழ்ப்பாணத்திலும், 1990க்குப் பின் புலம்பெயர் தேசங்களிலும் வெளியான மாற்றுக் கருத்துக் கொண்ட பத்திரிகைகளைப் புலிகள் தடை செய்தனர். பத்திரிகையாளர்களைப் புலிகள் அச்சுறுத்தினர். பல பத்திரிகையாளர்கள் புலிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்து நாட்டை விட்டு தப்பியோட வேண்டியிருந்தது. பலர் கொல்லப்பட்டனர். 'சற்றடே ரிவியூ' பத்திரிகை தொடக்கம் செல்வி, விமலதாசன், 'புதியதோர் உலகம்' கோவிந்தன் வரை இதற்கு உதாரணங்களாகும்.

*-இளங்கோ - பிரான்ஸிலிருந்து.*

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமீ J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 6 : பிறந்த கிழமை செவ்வாய்

ஆறு அறிவு ஆறு குணங்கள் என்ற நிலையில் ஆறு மிகுந்த முக்கியத்துவமிக்க எண் என்பது உங்களுக்குத் தெரியும். இவ்வாற சிறப்பமிக்க எண் 6ஐயும் செவ்வாய் கிழமையினையும் உடைய நீங்கள் பேச்சுத்திறமையில் வல்லவராக இருப்பீர்கள் உலகத்தில் முன்னெற்றம் காணுக்கூடியவராக வாழ வேண்டுமாக இருந்தால் வங்கக் கடலையும் தாண்டிச் செல்லலாம் என்பார்கள் அரசியல்வாதியாக இருந்தால் என்ன? வியாபாரியாக இருந்தால் என்ன? பேச்சுக்கலை தெரியாவிட்டால் முன்னேற்றம் கிடையாது. அந்தளவிற்கு ஒரு மனிதனின் இதயத்திற்கு அடுத்த முக்கியமான ஒன்று குரல். அந்தக் குரலும் உங்களுக்கு இருக்கும். எந்தத் தொழிலாக இருந்தாலும் அந்தத் தொழிலில் தேர்ச்சியும் முதிர்ச்சியும் மிக்கவர்களாகத் திகழ்வீர்கள். செய்வன திருந்தச் செய் என்பதற்கேற்ப உங்கள் காரியத்தில் அழகும் ஆற்றலும் நிரம்பி இருக்கும்.

நீங்கள் மேற்கொள்கின்ற காரியம் எதுவாக இருப்பினும் நல்ல வருமானம் பெறுவீர்கள். நீங்கள் தொடங்கும் அல்லது தொடரும் எந்தத் தொழிலாக இருந்தாலும் அல்லது எந்தக் காரியமாக இருந்தாலும் முன்னேற்றம் நிகழுமே தவிர அந்தக் காரியம் தடைப்படாது. விடுபடாது.

அதிக இரக்கமும் பிறருக்கு உதவுகின்ற மனமும் உடைய நீங்கள் நல்ல அன்பும், பண்பும் பெற்றவர். கல்வியைப் பொறுத்தவரை மேன்மைநிலை உங்களுக்கு இருந்தாலும் தொடர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்காது. வாழ்க்கையில் அதிக அதிர்ஷ்டம் உடையவர் நீங்கள். உலகில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் அனுபவிக்கின்ற வாழ்க்கை வசதிகளை நீங்களும் அனுபவிப்பீர்கள். அந்தளவிற்கு யோகம் நிறைந்தவர்தான் நீங்கள்.

விஞ்ஞானம், வைத்தியம், சோதிடம் போன்ற கலைகளில் அதிக ஈடுபாடும் ஆராய்ச்சியும் கொண்டவராகத் திகழ்வீர்கள்.

ஓய்வு நேரத்திற்கூட மத, தத்துவ சம்பந்தமான போதனை நூல்களை வாசித்து நீங்கள் மட்டும் பயன் பெறுவது மட்டுமல்லாமல் பிறருக்கும் எடுத்துக் கூறி அவர்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பீர்கள். பிறர் உங்கள் மீது அதிக அன்பும் மரியாதையும் வைத்துப் பழகுவார்கள். நீங்கள் நல்லவர் என்ற பெயரெடுத்த வாழ்வீர்கள். முதுமைக் காலத்தில் நீங்கள் சிறந்த பக்திமானாகத் திகழ்வீர்கள்.

நீங்கள் கடினமான தொழில் செய்ய வேண்டிய நிலை இருக்காது. இலகுவான வகையில் தொழில் செய்த வருமானம் அதிகம் பெற்று சுகமாக வாழ்வீர்கள். 27 வயதுவரை உங்களுக்குத் தொழிலைப் பொறுத்த வரையில் வருமானம் இருக்காது. 28 வயது ஆரம்பித்து 31, 34, 37, 40 வயதுவரை படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். இதனால் உங்கள் வருமானமும் பெருகும். 41 வயதுக் காலத்தில் உங்களுடைய நண்பர் ஒருவருடன் கூட்டுச் சேர்ந்து பிடவை வியாபாரம் செய்வீர்கள். இதனால் 47 வயது வரை கூடுதலான வருமானம் உங்களுக்குக் கிடைக்கும். இதன் பின்னர் கூட்டு வியாபாரம் முறியும். இந்த வியாபாரம் உங்களுக்கு மட்டும் சொந்தமாகும். இதனால் காணி, கார், பங்களா, வேலையாட்கள் என்று ஆயுள்வரை சுகமாகவும் ஆனந்தமாகவும் வாழ்வீர்கள்.

43 வயதிங்குப் பிறகு உங்கள் தேக ஆரோக்கியம் பாதிப்புக்குள்ளாகும். இது வாத சம்பந்தமான நோயாகும். ஆதலால் வாத நோயை குணப்படுத்தக்கூடிய சாப்பாடு வகைகளைத்தான் நீங்கள் சாப்பிட வேண்டும். அத்திக்காய், அவ்வரைக்கீரை, அவரை பிஞ்சு, இஞ்சி, எருமைத் தயிர், எள்ளு, புளி, பெருங்காயம்,சீரகம்,கொள்ளு, கோதுமை, சுறாமீன்,நெய்,கோழி முட்டை, மிளகு,வயல் நண்டு போன்ற உணவு வகைகள். நீங்கள் உங்களுடைய வாழ் நாளில் ஒரு இடத்தில் மட்டும் வேர் கொண்டதுபோல் வசிக்காமல் பல ஊர்களிலும் வாழ்வீர்கள். இதனால் நல்ல வருமானம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தரக் கூடிய எண் எது தெரியுமா? அது எண் ஒன்பதுதான். ஆகவே மாதத்தில் வரக்கூடிய 9,18,27, ஆகிய திகதிகளில் எடுக்கின்ற எந்தக் காரியமாக இருந்தாலும் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.இந்தத் திகதிகள் நீங்கள் பிறந்த செவ்வாய்க் கிழமையில் அமையுமாக இருந்தால் சிறப்பு மேலும் அதிகமாகும்.

வெள்ளைச் சீலையில் எந்த நிறத்திலாவது கோடு போட்ட சேர்ட் அணிவது அதிர்ஷ்டத்தை உங்களுக்கு ஏற்படுத்தும்.வைரம்,புஸ்பராகம்,இமிடேசன் வைரம் இவைகளில் 7 கல் பதித்த தங்க மோதிரம் அணிந்தால் உங்களுக்கு யோகம் உண்டாகும். நீங்கள் எந்த எண் உள்ள வீட்டில் வசித்தாலும் நன்மையும், நலமும் கிடைக்கும்.

ஆகவே ஆதிக்க எண் 6ஐயும் செவ்வாய்க் கிழமையினையும் உடைய நீங்கள் ஆயுள் வரை ஆனந்தமாக வாழ என் நல்லாசிகள் உரித்தாகட்டும்.

பெரும் யோகம் ஆறுக்கும் செல்வாக்கும் வரும் என்பது உமது அதிர்ஷ்டம் தரும் கோடிச் செல்வமே சிறப்பும் ஒரு குறையும் உமக்கு இல்லையாகும்.

அடுத்து ஆதிக்கம் 6 புதன்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்!

# ஐசக் நியூட்டன்

# (1642 - 1727)

*சென்ற வாரத் தொடர்ச்சி*

முழுமைக் கலனத்தை (Inter gral calculus ) கண்டுபிடித்தது கணிதத்திற்கு இவர் அளித்த மாபெரும் நன்கொடையாகும். இவர் தமது 23 அல்லது 24ஆம் வயதிலேயே இந்தக் கணிதத்தைக் கண்டுபிடித்தார். நவீன கணிதவியலின் தலையாய சாதனை எனக் கருதப்படும் இந்தக் கண்டுபிடிப்பு, நவீன அறிவியல் கோட்பாட்டின் பெரும்பகுதி தோன்றுவதற்கு வித்தாக அமைந்தது மட்டுமன்றி, இது கண்டுபிடிக்கப்படாதிருந்தால் இன்றைய அறிவியல் முன்னேற்றம் ஏற்பட்டிராது என்று கூறும் அளவுக்கு இன்றியமையாச் சாதனமாகவும் விளங்கு கிறது.


நியூட்டன் வேறெந்தச் சாதனையும் செய்யா திருந்தாலும் அவர் கண்டுபிடித்த முழுக் கலனம் ஒன்றே தலைசிறந்த அறிவியல் அறிஞர்களின் வரிசையில் அவருக்கு இடந்தேடித் தந்தி ருக்கும்.

எந்திர வியல் துறை யில்தான் பெரும்பாலான முக்கிய கண்டு பிடிப்புகளை நியூட்டன் செய்தார். பருப்பொருள்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை விவரிக்கும் அறிவியலே எந்திரவியல் ஆகும். முதலாவது இயக்க விதியைக் கலிலியோ கண்டுபிடித்திருந்தார். புறவிசைகள் எவற்றுக்கும் உட்படாதிருக்கும்போது பருப்பொருள்களின் இயக்கத்தை இந்த விதி விவரிக்கிறது. ஆனால், நடைமுறைகளில் எல்லாப் பருப்பொருள்களுமே புற விசைகளுக்கு உட்படுகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் பருப்பொருள்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதே எந்திரவியலில் எழும் தலையாய கேள்வி. இந்தக் கேள்விகளுக்கு நியூட்டன் தமது புகழ் பெற்ற இரண்டாம் இயக்க விதியின் மூலம் விடை கண்டு கூறினார். "ஒரு பொருளின் முடுக்கமானது (அதாவது, அதன் வேக வளர்ச்சியின் வீதம்) அந்தப் பொருளின் மீதான நிகர விசையினை அந்தப் பொருளின் பொருண்மையினால் வகுப்பதால் கிடைக்கும் ஈவுக்குச் சமம்" என்பது இரண்டாம் இயக்க விதியாகும்.

இந்த விதியை $F = ma$ என்னும் கணிதச் சமன்பாடாகக் கூறலாம். இதில்

F= வய m= பொருண்மை a= முடுக்கம். முதல் இரு இயக்க விதிகளுடன் தமது புகழ்பெற்ற மூன்றாவது இயக்க விதியினையும்

## உலகை வியக்க வைத்தவர்கள்



நியூட்டன் சேர்த்தார். "ஒவ்வொரு வினைக்கும், அதாவது ஒவ்வொரு இயற்பியல் விசைக்கும் சமமான எதிர்வினை உண்டு" என்பதே அந்த மூன்றாவது விதியாகும். அத்துடன், புவிஈர்ப்பு விதியினையும் கண்டு பிடித் தார். இந்த நான்கு விதி களையும் ஒரு ங்கிணை த்துப் பார்க்கும போது, ஒரு கூட்டி ணைவாக விதியமைப்பு முறை கிடைக்கிறது.

இதனைக் கொண்டு ஓர் ஊசலின் அசைவாட்டத்திலிருந்து சூரியனை வட்டப் பாதையில் சுற்றிவரும் கோளங்களின் இயக்கம் வரையில் கண்ணுக்குப் புலனாகிற அனைத்து எந்திரவியல் அமைப்பு முறைகளையும் விளக்கிவிடலாம். அவற்றின் நடத்தை முறையினையும் ஊகிக்கலாம். நியூட்டன் இந்த எந்திரவியல் விதிகளைக் கண்டுபிடித்துக் கூறியதுடன் நின்று விடவில்லை. கலனம் என்னும் கணிதச் சாதனத்தைப் பயன்படுத்தி நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கு இந்த அடிப்படை விதிகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை அவர் மெய்ப்பித்துக் காட்டினார்.

நியூட்டனின் விதிகளை ஏராளமான அறிவியல் மற்றும் பொறியியல் சிக்கல்களுக்குத் தீர்வு காணப் பயன்படுத்தலாம்; பயன்படுத்தப்பட்டன. அவருடைய ஆயுட்காலத்திலேயே வானியல் துறையில் அவரது விதிகள் பயன்படுத்தப்பட்டு அதிசயமான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இத் துறையிலும் வழி காட்டியவர் நியூட்டனே ஆவார். அவர், 1687இல் தமது தலைசிறந்த நூலாகிய "இயற்கைத் தத்துவத்தின் கணித விதிகள்" என்ற நூலை வெளியிட்டார். இதில் அவர் தமது புவிஈர்ப்பு விதியினையும், இயக்க விதிகளையும் விரிவாக விளக்கிக் கூறியிருந்தார். சூரியனை வலம் வரும் கோளங்களின் இயக்கங்களைத் துல்லியமாக ஊகித்தறிவதற்கு இந்த விதிகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை அவர் விளக்கினார். இயக்கவியல் வானியலில் இருந்து வந்த முக்கியமான சிக்கல் அதாவது விண்மீன்கள், கோளங்கள் ஆகியவற்றின் நிலைகளையும், இயக்கங்களையும் ஊகித்தறியும் சிக்கல் - இதன் மூலமாக முற்றிலுமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. இதற்காகவே, வானியலறிஞர்களில் தலைசிறந்தவராக இவர் போற்றப்படுகிறார்.

அப்படியானால், நியூட்டனின் அறிவியல் முக்கியத்துவத்தைக் கணிப்பது எவ்வாறு? அறிவியல் கலைக்களஞ்சியத்தின் பொருட் குறிப்பு அகராதியை நோக்கும்போது, வேறெந்த தனி விஞ்ஞானியையும் விட மிக அதிகமான அளவுக்கு (இரண்டு மூன்று மடங்குகள் மிகுதியாக) நியூட்டனின் விதிகள், கண்டுபிடிப்புகள் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். மேலும், நியூட்டனைப் பற்றி மாபெரும் விஞ்ஞானிகள் கூறியுள்ளதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். லைப்னிட்ஸ் ஒரு சிறந்த விஞ்ஞானி. அவர் நியூட்டனுக்கு நண்பர் அல்லர். சொல்லப் போனால், நியூட்டனுடன் கடும் சர்ச்சையில் ஈடுபட்டிருந்தார். அவர் சொல்லுகிறார் : "உலகின் தொடக்கம் முதல் நியூட்டன் வாழ்ந்த காலம் வரையில் கணிதத்தை எடுத்துக் கொண்டால், கணிதத்திற்கு நியூட்டன் ஆற்றிய தொண்டுதான் பெரும்பகுதியாக இருக்கும். "லாப்லாஸ் என்ற தலைசிறந்த .:.. பிரெஞ்சு விஞ்ஞானி கூறுகிறார்," "இயற்கைத் தத்துவத்தின் கணித விதிகள் என்ற நூல், மனித அறிவின் வேறெந்தப் படைப்பையும் விட மிகச் சிறந்தது." "உலகில் அவதரித்த அறிஞர்கள் அனைவரிலும் தலை சிறந்தவர் நியூட்டன" என்று லாக்ராங்கே கூறினார்.

எர்ன்ஸ்ட் மார்க் 1901இல் எழுதுகையில், "நியூட்டன் காலம் முதற்கொண்டு எந்திரவியலில் ஏற்பட்டுள்ள விதிதரு முறையான, வடிவ முறையான, கணித முறையான வளர்ச்சி அனைத்தும் நியூட்டனின் விதிகளை அடிப்படையாகக் கொண்டவையே" என்கிறார். சுருங்கக்கூறின், இங்கொன்றும்

தொடர்ச்சி அடுத்த வாரம் வரும்.....

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை.
> *-காதில பூ கந்தசாமி-*

**காசிக்குப் போகும் சன்னியாசி...**
**உன் கடமை என்னான்னு நீ யோசி..!**

என்ன, சாமியார்ப் பாட்டோட தொடங்கிற னெண்டே பாக்கிறியள். பாருங்கோ பாருங்கோ. இப்ப சாமியார் சீன்தானே பொப்புலரா ஓடுது. என்ன பிரபல்யமாயிருந்த எங்கட வீரப்பன்ர கேசையும் அடிச்சள்ளிக்கொண்டு இண்டைக்கு இந்தியத் தமிழ்ப் பேப்பரெல்லாத்திலயும் ரெண்டு கிழமைக்கு மேல தலைப்புச் செய்தியா மட்டுமில்ல உட்பக்கம் உட்பக்கத்தின்ர உட்பக்கமெண்டு எங்கெங்கு காணிலும் சாமியார் செய்தியாத்தான் அடம்பிடிச்சபடி இடம் பிடிச்சுக் கிடக்கு. அந்தளவு சாதனையாப் போச்சுது இப்ப சாமியார் மெட்டர்.

சாமியார் கதை வெறும் தனிக்கதை யெண்டில்லாமல் கிளைக் கதைகளாக்கூடப் பல்கிப் பெருகிக்கொண்டு ஓடினபடி கிடக்குது. அந்த மெட்டரோட ஒட்டுப்பட்ட, உரசுப்பட்ட எத்தினையோ கெரக்டர்கள் பேப்பர்களில ஒவ்வொரு தலைப்பில பிளாஷாகுது. பேப்பருக்கென்ன யோக காலந்தான். நல்லாச் சேலாகுது.

ஒரு பக்கத்தால செக்ஸ் சாமிக் கதை பெரிய சுவாரசியக் கிசுகிசுவாய்ப் பப்ளிக்கா கிக்கொண்டிருக்குது. சதுர்வேதியெண்டொரு சாமியாராம். தான் கண்ணன்ர அவதாரமாமெண்டு வாய்க்குள்ளால விபூதி, கைக்குள்ளால சந்தனமெண்டு. எடுத்தெடுத்துக் காட்டி பெண்டுகளைக் கண் கிறங்க வைச்சிட்டு, அந்த மயக்கக் கிறக்கத்திலயே, "நீ ஆண்டாள் அவதாரம் நான்தான் உன்னை ஆட்கொள்ள வந்த கிரு'ண பரமாத்மா" எண்ட பிரம்ம ரகசியத்தை ஓதித் தன்ர இச்சைக்கு இரையாக்கி வந்தாராம். ஆசை மெத்திப்போய் அடைக்கலம் குடுத்து வீட்டில வைச்சிருந்த தொழிலதிபரின்ர மனைவி, மகள்களிலையும் கை வைக்கப் போய், கடத்திக்கொண்டோடிப்போய்க் கப்பம் கேக்க வெளிக்கிட்டு கடைசியில இப்ப கம்பியெண்ணிறாராம்.

கடைசியாப் பாத்தால் குடுத்த பிரசாத மெல்லாத்திலயும் மயக்க மருந்து கலந்திருந்ததாத் தெரிய வந்திருக்காம். ஆசாமி அம்பிட்டி ட்டாரெண்டவுடனதான் ஆளிட்ட ஏமாந்தவை கனபேர் இரகசியமிரகசியமா இன்பமேஷன்ஸ் குடுக்கத் தொடங்கியிருக்கினமாம். எல்லாஞ் சரி, சாமியாரப்பனே! "நீ செய்த செப்படி வித்தைய எங்களுக்கும் ஒருக்கால் செய்து காட்டு பாப்பம்" எண்டு பொலிஸார் கேக்கக்கதான், ஆள், "ஐ ஆம் சொறி, சனம் ஏமாந்ததுக்கு நானா பாடு" எண்டு கைவிரிக்கிறாராம். ம்... இன்னும் கூட எங்களில ஒரு வெள்ளம் சனம் இருக்குது, சாமியாரெண்டவுடன மதி மயங்கிக் காலில விழுகிறதுக்கு. டோண்ட் வொறி. பிடிபட்டது ஒரு போலிச் சாமிதான். இன்னும் தொழில் திறந்த கதவாத்தான் கிடக்குது. விரும்பினவை வேஷம் போடலாம். சனத்தின்ர சார்பில நான் கரண்டி பண்ணிறன். வீ ஆர் ரெடி டு பி .:.பூல்ஸ்.

அதுதான் கொஞ்சம் சுவாரசியமான செக்ஸ் மெட்டரெண்டு பாத்தால் மற்றப் பக்கத்தால திறில் மெட்டரா மேடர் மெட்டரெல்லோ முளைச்சுக் கிடக்குது. சாதாரண விஷயமில்ல கண்டியளோ. பெரிய கதை. பெரிய இடத்துக் கதை. எங்கட பக்தி மார்க்கத்தையே அசர வைக்கிற கதை!

ஒரு ரெண்டு மாசத்துக்கு முன்னால, போன செப்டம்பர் 3ஆம் திகதி காஞ்சி வரதராசப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் எண்ட பெரியவர் கடமை நேரத்திலயே படுகொலை செய்யப்பட்டார். கும்பிடுற தெய்வத்துக்குப் பூசை செய்யிற சாமியாரையே கொலை செய்யிற தேவை யாருக்கெண்டு யாருக்குத் தெரியும்? உங்களுக்கா எனக்கா? பொலிஸ"ம் தேடிப் பாக்கத் துடங்க, உங்களுக்கேன் வீண் கஷ்டம், நாங்களே வந்து சரணடையிறமெண்டு ஒரு நாலு குண்டர்கள் போய் தாங்களாவே சரணடைஞ்சிட்டினமாம். எங்கட சினிமாப் படக் கதை போல இருக்குதெல்லே...? எங்கயோ பாத்த ஞாபகம்... ஆ, எங்கட 'தளபதி' படத்திலயும் இப்பிடித்தான் எங்கட ரஜினிகாந்த ஜெயிலிலயிருந்து வெளியால எடுக்க, மம்முட்டி தன்ர ஆக்கள தாங்களாவே போய்ச் சரணடைய வைக்கிறார். பட், ஸேம் சீன் இங்க உண்மையாவே நடக்குதெண்டக்கதான் எனக்கு நம்ப ஏலாமல் கிடக்கு. சினிமாவை நம்பிற மாதிரி ரியலில நம்பிறது கஷ்டமெண்டு இப்பதான் ரியலைஸாகிச்சுது எனக்கு.

அது என்னடாவெண்டால் பாருங்கோ, பொலிஸ"ம் நம்பிற மாதிரி நடிச்சு, ஒரு ரெண்டு மாசம் சைலண்டா வேவுபாத்து இப்ப கப்பெண்டு பாஞ்சிருக்குது பெரிய இடமொண்டுக்கு மேல. பெரிசெண்டால் ரொம்பப் பெரிசு. காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மேலையே கொலைக் குற்றச்சாட்டு, அதுவும் முதலாம் எதிரியா! எப்பிடி இருக்கும் நம்மாக்களுக்கு? நெஞ்சு திக்கெண்டாப் போல ஆச்சுது எனக்கு. நம்பிறதா, நம்ப மறுக்கிறதா? நான் தூசு, ஒரு சிங்கிள் மேன். முழு இந்து உலகத்துக்கே இது ஒரு பேரதிர்ச்சி.

ஒருபக்கம் காஞ்சி மடாதிபதி சங்கரராமனைக் கொன்றது இவர்தானெண்டும், அதுக்கு கூலிப் படைகளை ஏவி விட்டாரெண்டும், இதப் போல இவரை எதிர்த்த இன்னொரு சாமியாரையும் கொல்லப் பாத்து அவர் தப்பி ஓடினாரெண்டும் கதை மேல கதை பேப்பர்களில வந்துகொண்டிருக்குது. கூலிப்படைத் தலைவர் உட்பட அடியாட்கள் ஒவ்வொருத்தராச் சரண்டராகிகொண்டி ருக்கிறாங்கள். சிலபேர் ஒப்புதல் வாக்குமூலமும் குடுக்கிறாங்கள்.

இன்னொரு பக்கத்தால இந்து அமைப்பு களெண்ட பெயரில சங்கராச்சாரியார் கைதுக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள். எல்லாம் எங்க போய் முடியப் போகுதோ எனக்கெண்டால் தெரியேல்லை. மதத்தை மக்களுக்கு வழிகாட்டிற மார்க்கமாப் பாவிக்காமல் மர்மங்களை மூடி மறைக்கிற போர்வை யாப் பாவிக்கினமோ எண்டு மயக்கமாக் கிடக்கு.

எதுக்கும் என்ர அட்வைஸ் இதுதான். இப்பி டித்தான் இப்ப வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்த நம்மாக்களும் ஆயிரத்தெட்டுக் கோயில்களைக் கட்டி, ஆளுக்காள் உரிமை பாராட்டிக்கொண்டு நிக்கினம். எங்க ஒழுங்காயிருக்குது? எங்க ஒழுக்காயிருக்குதெண்டு எனக்கெண்டால் தெரியேல்லை. ஒண்டுக்கு நாலு தடவை யோசிச்சுப்போட்டு உண்டியலுக்க காசைப் போடுங்கோ. சாமியோவ்!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(02.12.2004 தொடங்கி 08.12.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

விருச்சிகம்- சூரியன், புதன், வெள்ளி, மேடம் - இராகு கர்க்கடகம் - சனி கன்னி - வியாழன் துலாம் - செவ்வாய், கேது சந்திரன் துலாம், விருச்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

தொழில் நன்மை, பலவித பேறு, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், உத்தியோகப் பேறு, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**



**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

தொழில் சிறப்பு, கூடிய முயற்சி, அன்னியர் சகவாசம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக உயர்ச்சி, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி பேறு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**



**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

தொழில் பலிதம், எதிர்பார்த்த நன்மை, பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை, உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**



**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)

தொழில் பலிதம், பண வரவு, கூடிய எதிர்பார்ப்பு, வெளியிட நட்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**



**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

தொழில் கலக்கம், அன்னியரால் தொல்லை, பணச் செலவு, குடும்பச் சிக்கல், முரண்பாடு, உத்தியோக அலைச்சல், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**



**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின்முன்னரை)

தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி, இனசன நன்மை, காரியானுகூலம், குடும்ப சுகம், உத்தியோக மகிழ்ச்சி, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.

**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**



**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

தொழில் நன்மை, காரியானுகூலம், புதிய முயற்சி, பணச் செலவு, குடும்பப் பொறுப்பு, உத்தியோகக் கலக்கம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**



**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை )

தொழில் நன்மை, கௌரவம், பெரியோர் நட்பு, பிரயாண மிகுதி, அன்னியர் சகவாசம், உத்தியோக நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.


**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04**



**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

தொழில் மேன்மை, காரியானுகூலம், முயற்சி மேன்மை, குடும்பச் சிறப்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.


**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**



**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

தொழில் நன்மை, கடின உழைப்பு, அன்னியரால் தொல்லை, குடும்ப கலகம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.


**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**



**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, இனசன மகிழ்ச்சி, பிரயாண மிகுதி, குடும்ப கஷ்டம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**



**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

தொழில் உயர்ச்சி, செலவு மிகுதி, உயர்ந்த நிலை, இனசன குழப்பம், மனக் கலக்கம், உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)

# கவனம்



'டைனியா பெடிஸ்' எனப்படும் இந்தத் தோல் வியாதி பொதுவாக மனிதர்களைப் பற்றக்கூடியது. உலக சனத்தொகையில் 70 வீதமானவர்களை இந்த நோய்க் கிருமி தாக்கக் கூடியது. வாழ்நாளில் மனிதனை ஒரு தடவையாவது இது வேதனைப்படுத்தத் தவறுவதில்லை. கால் விரல்களுக்கு இடையில் ஏற்பட்டு சொறிச்சல் மற்றும் ரணத்தை உருவாக்கும். ஆளையே நோய் தாக்கும் போது காலை மட்டும் விட்டு வைக்குமா?


# இளைய ராணி

ஜோர்தானிய மன்னர் அப்துல்லா பின் - அல் - ஹுசைனின் மனைவியான மாட்சிமை தங்கிய இராணி - ராணியா அல் - அப்துல்லா உலகத்திலேயே இன்றைய நிலையில் மிகவும் இளைய இராணியாகத் திகழ்கிறார். இவர் பிறந்தது- 1970 ஆகஸ்ட் 31இல் - திருமணம் செய்தது- 1993 ஜூன் 10இல் - இவரது கணவர் முடிசூட்டப்பட்டது- 1999 பெப்ரவரி 7ஆம் திகதி - அப்போது "இளைய இராணி"யின் வயது என்ன தெரியுமா? 28 வருடம் 160 நாட்கள். மாதத்தை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்களேன்.




# ரொம்பப் பழசு

குஷ்டரோகம் ஒரு புராதன நோய். கி.மு.1350 ஆம் ஆண்டிலேயே இந்நோய் எகிப்தில் பரவியிருந்தது. இந்நோயால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவரை படத்தில் காணலாம். காசநோய் சுவாசப்பையில் தொற்றும் ஒரு நோயாகும். இந்நோய் கூட கி.மு.1250 முதல் 1000 வருடகாலப் பகுதியில் எகிப்திய மம்மிக்களுக்கும் தொற்றியிருந்ததாகக் கூறப்படுகிறது. அம்மியோ மம்மியோ அனைவரையும் தாக்கக் கூடியதுதான் நோய் என்பது. ஜாக்கிரதையாக இருந்தால் சரிதான்.



# நம்மவர்



ஜேர்மனியில் மத்திய மற்றும் NRW உள்பட பல்வேறு மாநிலங்களில் சமூக ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து ஆட்சி நடத்தும் Bundnis 90/Die Grunen எனப்படும் கட்சியின் சார்பில், தேர்தலில் போட்டியிட்ட முதல் இலங்கைத் தமிழரான ஜெயரட்ணம் கனிசியஸ், விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் தெரிவாகி, எதிர்வரும் 5 வருடங்களுக்கு நகரசபை உறுப்பினராகப் பதவி வகிக்க கடந்த 06.10.04 அன்று Kempen நகர மேயர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த 3 வருடங்களாக Bundnis 90/Die Grunen கட்சியில் இணைந்து Kempen நகர சபையில் கலாசார மற்றும் சமூக முதியோர் ஆணைக்குழுக்களில் அங்கத்தவராகக் கடமையாற்றி வந்த இவர், ஜேர்மனியில் தேர்தலில் வெற்றிபெற்ற முதலாவது இலங்கைத் தமிழர் ஆவார் என்பது குறிப்பிடத் தக்கது.

இலங்கையில் கரம்பொன் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் மற்றும் யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரி பழைய மாணவராவார். 1985இல் இருந்து ஜேர்மனியில் வசித்துவருவதுடன், இவர் மின்சார பொறியியல்துறையில் Elecktrotechniker Meister என்னும் பட்டப்படிப்பை முடித்துவிட்டு கடந்த சில வருடங்களாக Viersen நகரில் உள்ள வைத்தியசாலையில் தொழில் நுட்ப அதிகாரியாகக் கடமையாற்றி வருகின்றார்.

# வெற்றி

அவுஸ்திரேலியாவில் 1998ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய றக்பி முன்னணி இருதடவைகள் விருதுகளை வென்றுள்ளது. பிரிஸ்பேன், புரொங்கோ ஆகிய இடங்களில் 1998ஆம், 2000ஆம் ஆண்டுகளில்தான் இந்த விருதுகள் பெறப்பட்டன. அவுஸ்திரேலியாவின் முதல்தர றக்பி அணி இதுவாகும். புரொங்கோ வெற்றிக்கு வழிகோலிய அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டெரன் லொக்யர் படத்தில் காணப்படுகிறார்.



# என்னால் முடியும்




சோஸேஜ் மற்றும் பணிஸ் கலந்து தயாரிக்கப்பட்ட "ஹொட் டோக்ஸ்" எனும் உணவை லண்டனைச் சேர்ந்த பீட்டர் டௌட்ஸ்வெல் என்பவர் சாப்பிட்டு சாதனை புரிந்தார். சாப்பாட்டில் சாதனையா என்று கேட்காதீர்கள். நான்கு 'ஹொட் டோக்'ஸ் உணவை மூன்றே நிமிடங்களில் எப்படியோ விழுங்கிவிட்டார். 2001ஜூலை 27இல் லண்டனில் டுரோகாடரோ விம்பி தேசிய ஹொட் டோக்ஸ் (Hot Dogs) சாம்பியன்ஷிப் போட்டியில் தான் இச்சாதனை நிகழ்த்தப்பட்டது. சங்கதி பழசுதான். ஆனால் செய்தி புதுசு.